# மர இனப் பெயர் வைப்புக்கலை



சுந்தரசண்முகனார்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

17-1-1991

# மர இனப் பெயர்வைப்புக் கலை

ஆசிரியர்:
புதுப் படைப்புக் கலைஞர்
தமிழ் ஆய்வுக் கடல்
**முனைவர் சுந்தர சண்முகனார்**
(தமிழ்-அகராதித் துறைப் பேராசிரியர்-ஓய்வு)
புதுச்சேரி-11

வெளியீடு:
**சுந்தர சண்முகனார்**
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
38, வேங்கட நகர் :: புதுச்சேரி-605 011

முதல் பதிப்பு: மே, 1990

உரிமை: ஆசிரியர்க்கே

விலை ரூ. 18-00

அச்சிட்டோர்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்

கீழவீதி, சிதம்பரம்

# ஆசிரியர் முன்னுரை

தமிழ் நிகண்டு நூல்களில், தாவரம் பற்றிய பகுதிக்கு 'மரப் பெயர்த் தொகுதி' என்னும் பெயர் வழங்கப் பெற்றுள்ளது. எனவே, தாவரம் என்பதற்கு 'மர இனம்' என்னும் பெயர் இந்நூலில் தரப்பட்டுள்ளது. சில மர இனப் பெயர்கள், புதுமையாகவும் கவர்ச்சியாகவும் சுவை யாகவும்-மறைபொருள் உடையனவாகவும் உள்ளன. அவற்றுள் பல பெயர்கட்கு உரிய பெயர்க் காரணங்கள் அடியேனால் ஆய்வு முறையில் விளக்கப்பட்டுள்ளன. அரிதின் முயன்று, நெடுநேரம் எண்ணி எண்ணிப் பல பெயர்க்காரணங்கள் கண்டுபிடித்துத்தரப்பெற்றுள்ளன. இப் பெயர்கள் முன்னோர்களால் சூட்டப்பட்டிருப்பது, 'பெயர் வைப்புக்கலை' என ஒரு கலையாகச் சொல்லும் அளவுக்குச் சிறப்பிடம் பெற்றுள்ளது. எனவே தான், இந்நூலுக்கு 'மர இனப் பெயர் வைப்புக்கலை' என்னும் பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

இந் நூலில் பெயர்க் காரண விளக்கம் பெற்றுள்ள பெயர்கள் பல்வேறு வகை நூல்களிலிருந்து எடுக்கப் பெற்றவை.

இந்நூலை வெளியிட ஓரளவு பொருளுதவி புரிந்துள்ள புதுவை அரசுக் கல்வித் துறைக்கு மிக்க நன்றி செலுத்து கிறேன். இந்நூலை நன் முறையில் அச்சிட்டு உதவிய சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர்க்கு எனது நன்றி உரியது.

வழக்கம்போல் இந்நூலுக்கு ஆதரவு அளிக்கும்படி அனைவரையும் பணிவுடன் வேண்டுகிறேன்.

*சுந்தர சண்முகன்*

**12 – 5 – 1990**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நூல் வரலாறு | ... | 5 |
| 2. | கற்பு முல்லை | ... | 19 |
| 3. | குயிலகம் | ... | 34 |
| 4. | தாயைக் கொல்பவன் | ... | 43 |
| 5. | தாயைத் தாங்கிக் காப்பவன் | ... | 59 |
| 6. | தங்கச்சி குவளை | ... | 79 |
| 7. | இனிக்கும் கசப்பு | ... | 88 |
| 8. | முருங்கை முதலி | ... | 104 |
| 9. | இங்கேயும் ஒரு கைகேசி | .... | 146 |
| 10. | மர இனப் பெயர்களின் அகர வரிசை | .... | 173 |


குறிப்பு:— மேற்கோள் நூல்களின் பெயர்களும் உட்பிரிவுகளும் நூலுக்குள் இடையிடையே தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

# மர இனப் பெயர்வைப்புக் கலை

## 1. நூல் வரலாறு

### 1. மரஇனப் பெயர் அகரமுதலி

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தொகுப்பியல் துறையில், 'மரஇனப் பெயர் அகர முதலி' என்னும் அகர முதலி (அகராதி) நூல் தொகுக்கும் பணி நடைபெற்றது. 'மரஇனம்' என்னும் பெயர், தாவரம் என்னும் வடமொழிப் பெயருக்கு நேரானது; மரம், செடி, கொடி, புல், பூடு (பூண்டு) ஆகியவற்றைக் குறிப்பது.

தொகுப்பியல் துறையில், ஒரு தோற்றம் (சுமார்) 40,000 மரஇனப் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அங்ஙன மெனில், 40,000 மரஇனங்கள் உள்ளதாகப் பொருள் இல்லை. ஒன்றிற்கே பல பெயர்கள் உண்டு. அடிப்படையான மரஇனம் - ஒரு தோற்றம் - ஐயாயிரத்துக்குள்தான் இருக்கக் கூடும். பல மர இனங்கட்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல பெயர்கள் இருப்பதால் மரஇனப் பெயர்கள் 40,000 அளவை எட்டின. இந்த அளவுக்கு மேலும் பல பெயர்களை முயன்றால் இன்னும் சேர்க்கலாம்.

### 1.1 தேர்ந்தெடுப்பு

தொகுப்பியல் துறையின் தலைவராகவும், பேராசிரிய ராகவும் இருந்த யான், இந்த 40,000 பெயர்களுள் சில, புதுமையாகவும் சுவையாகவும் சூட்டப்பட்டிருப்பதைக் கண்டு பெரு மகிழ்வும் பெரு வியப்பும் கொண்டேன்.

புதுமைச் சுவையின்பத்தால் என்னைக் கவர்ந்த பெயர்களைத் தேர்ந்தெடுத்துத் தனியே குறித்து வைத்தேன். இப்பெயர் களைப் பல கூறுகளாகப் பிரித்துள்ளேன். அக்கூறுகள்: பயன், பண்பு, நிறம், வடிவம் (உடற்கூறு), சார்பு, இடம், காலம், தலைமை, செயல், பகை, எண், உவமை, உயர்திணைப் பெயர், தெய்வப் பெயர், இருபொருள், பிற மொழி, மொழி பெயர்ப்பு, சொல் விளையாட்டு முதலியன. இக் காரணங்களால் பெற்ற பெயர்கள் பல.

## 2. கலை வகைகள்

இந்தப் பெயர்வைப்பு முறை, உள்ளத்திற்கு மகிழ்வும் வியப்பும் அளிக்கும் ஒரு கலையாகத் தோன்றுகிறது. உலகில் கலைகள் பல. பல்வேறு எண்ணிக்கைகளால் கலைகள் குறிப்பிடப்படுகின்றன. கலைகள் பல வகைகளாகப் பிரிக்கவும் படுகின்றன. ஆய கலைகள் அறுபத்துநான்கு என்பர் சிலர்; இவற்றினும் குறைவாகக் கூறுவர் சிலர். இவற்றினும் கூடுதலாகச் சொல்பவர் ஒருசிலர். இவற்றை யெல்லாம் சுருக்கி, அழகுக்கலை, அறிவுக்கலை, திறன்கலை, தொழில்கலை, ஒப்பனைக்கலை, இலக்கியக்கலை, புதுப் பொருள் ஆக்கக்கலை, பொழுதுபோக்குக்கலை, வாழ்க்கைக் கலை, கடவுட்கலை - முதலிய சில கலைகளுள் மற்றவற்றை அடக்கலாம்.

## 2.1 கவின் கலை - பயன் கலை

இறுதியாகச் சுருக்கிக் கூறியுள்ள கலைகளையும் கவின் கலை (Fine Arts), பயன் கலை (Applied Arts) என்னும் இரண்டனுள் அடக்கலாம். வாழ்க்கைக்கு இன்றியமையாத நேர்ப்பயன் அளிக்கும் ஆக்கக் கலைகளைப் பயன்கலைகள் எனலாம். வாழ்க்கைக்கு இருந்துதான் தீரவேண்டும் என்ற

கட்டாயமில்லாத சுவைக் கலைகளைக் கவின் கலைகள் எனலாம்.

## 2.2 கலையின் இலக்கணம்

கலை என்றால் என்ன என்னும் வினாவிற்கு உரிய விடையாகப் பல்வேறு இலக்கண விளக்கங்கள் கூறப்படு கின்றன. நாம் சுருக்கமாகச் சில விளக்கங்கள் காண்போம்;

1. கலை, கற்பனையின் தொடர்புடையது.

2. கலை, இயற்கையினும் வேறான - செயற்கைச் சார்பு உடையது.

3. கலை, புதுமையும் திறமையும் கவர்ச்சியும் சுவையும் உணர்ச்சியும் உவகையும் ஆகியவற்றுள் சிலவோ - பலவோ கலந்தது.

4. கலை, உண்மையா பொய்யா - சரியா தவறா என்று ஆராயும் எண்ணத்திற்கு (சிந்தனைக்கு) அப்பாற் பட்டது.

5. ஒரு கவின் படைப்போ அல்லது ஒரு பயன் படைப்போ, அது தொடக்கத்தில் தோன்றிய காலத்தில் இருந்த நிலையினும், நாளடைவில் மிக மிக மேலாகக் கற்பனையால் புதுப் புதுச் சுவையான - கவர்ச்சியான நிலையை அடைகிறபோது, அங்கே கலை பிறந்துவிடுகிறது. அத்தகைய யாதொன்றும் 'கலை' என்னும் கவர்ச்சியான பட்டத்துடன் வழங்கப்படுகிறது. இந்த அடிப்படையுடன், மரஇனப் பெயர் வைப்புக் கலை குறித்து எண்ணிப் பார்க்கலாம்.

## 3. மரஇனப் பெயர் வைப்புக்கலை

மரஇனங்கள் யாவற்றிற்கும் பண்டுதொட்டு யாவரும் வழங்கிவரும் இயற்பெயர்கள் உண்டு: அந்த இயற்பெயர்கள்

இருக்க, மேற்கொண்டு, சில-பல காரணங்களின் அடிப்படையில், புதுமையான-கவர்ச்சியான-சுவையான பல பெயர்கள் செயற்கை முறையில் இடையிடையே வைக்கப்பட்டு வந்துள்ளன. இந்த நிலையில், இத்தகைய புதுப் புதுப் பெயர்கள் வைத்திருக்கும் முறை ஒரு கலையாகக் காணப் படுகிறது. இந்தக் கற்பனைக் கலைப் பெயர்கள் உள்ளத்திற்கு உவகை யூட்டுகின்றன.

இந்தப் பெயர் வைப்புக் கலையை, இலக்கியக் கலைப் படைப்பின் சார்புடையதாகக் கொள்ளலாம். இதில், கவின் கலையின் கூறும் உள்ளது; பயன்கலையின் கூறும் உள்ளது. இந்த மரஇனத்தால் இன்ன பயன் உண்டு என்று கூறும் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ள பெயர்கள் பயன்கலைப் பெயர்களாகும். சொல் விளையாட்டாக - வேடிக்கையாக வைக்கப்பட்டுள்ள பெயர்கள் கவின்கலைப் பெயர்களாகும். சில பெயர்கள் இரு கூறுகளும் கலந்தனவாகும். நூல் முழுவதையும் படித்தால் உண்மை விளங்கும்.

## 4. குழூஉக்குறிப் பெயர்கள்

நம் முன்னோர்கள் சிலர், மருத்துவம், கணி (சோதிடம்) முதலிய துறை நூல்களில், எல்லாரும் அறிந்த சொற்களால்-பெயர்களால் கருத்தை - செய்தியை விளக்காமல், மறைமுக மான – குழூஉக் குறியான – ஒருவகைக் குறியீட்டுச் சொற் களால் செய்திகளைக் கூறிப் போந்தனர். இந்த முறை சரியா தவறா என இப்போது ஆராய்வதில் பயன் இல்லை. இந்த முறையினால், சில துறை நூல்களை எல்லாரும் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்ள இயலவில்லை என்பது உண்மையே! இக் குழூஉக் குறிகளின் பெயர்க் காரணங்களை விளக்கி மக்கள் புரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டியதே இப்போது நமக்கு முன்னுள்ள கடமையாகும். இந்தக் குழூஉக் குறிக்குக் கணி நூலிலிருந்து ஓர் எடுத்துக்

காட்டும், மருத்துவ நூலிலிருந்து ஓர் எடுத்துக்காட்டும் காணலாம்.

## 4.1 கணிக் குறியீடு

என் நண்பர் ஒருவர், கணியர் (சோதிடர்) ஒருவர் எழுதித் தந்த கணிநூற் பாடல்கள் சிலவற்றைக் கொண்டு வந்து என்னிடம் காட்டி அவற்றிற்கு விளக்கம் கூறும்படிக் கேட்டார். யான் அவ்வாறே கூறலானேன். கூறிக்கொண்டு வந்தபோது இடையே ஓர் இடத்தில் திகைப்பு ஏற்பட்டது. நண்பர் மகளின் கணிப்பு (சாதகம்) தொடர்பான பாடல்கள் அவை. ''அப்பெண்ணுக்குப் புராண வயதில் திருமண மாகும்'' என்னும் ஒரு செய்தி எழுதப்பட்டிருந்தது. புராண வயது என்றால் என்ன – என்று சிறிது திகைத்தேன்; பின்னர்த் தெளிவு ஏற்பட்டது. புராணங்கள் பதினெட்டு – பதினெண் புராணங்கள் – என்றெல்லாம் கூறுவதுண்டு. எனவே, புராண வயது என்பது பதினெட்டாவது அகவை (வயது) என்ற முடிவுக்கு வந்து, உங்கள் மகளுக்குப் பதினெட்டாவது அகவையில் திருமணம் நடைபெறுமாம் – என்று நண்பரிடம் கூறினேன்.

## 4.2 மருத்துவக் குறியீடு

இதுபோல் கணி நூல்களில் பல சிக்கல்கள் உள்ளன. இத்தகு சிக்கல்கள் மருத்துவ நூல்களில் மிகுதியும் உண்டு. குறியீட்டுப் பெயர்கட்குச் சரியான பொருள் தெரிந்தால் தானே மருத்துவம் பயனளிக்கும்? இல்லையெனில், மாறான பயன் நேர்ந்து விடும். மாதிரிக்காகத் தேரையர் பாடல் ஒன்றினைக் காண்பாம்:

"ஆனைக் கன்றின் ஒருபிடியும்,
அரையன் விரோதி இளம்பிஞ்சும்,
கானக் குதிரை புறத்தோலும்,
காலிற் பொடியை மாற்றினதும்,
தாயைக் கொன்றான் சாறிட்டுத்
தயவா யரைத்துக் கொள்வாரேல்,
மானைப் பொருதும் விழியாளே!
வடுகும் தமிழும் குணமாமே!"

என்பது பாடல். கருத்து: ஆனைக் கன்று ஒரு பிடியையும், அரையன் விரோதியின் இளம் பிஞ்சையும், கானக்குதிரையின் மேல் தோலையும், காலில் பொடியை மாற்றினதையும் தாயைக் கொன்றவனது சாற்றில் இட்டுத் தக்க முறையில் அரைத்தெடுத்து உட்கொள்வாரானால், மானை வென்ற கண்ணையுடைய பெண்ணே! வடுகும் தமிழும் குணமாகி விடும் — என்பது கருத்து. இந்தக் கருத்து தெளிவாகப் புரியுமா? புரியாது - புரியவைக்க முயல்வோம்.

'வடுகும் தமிழும்' என்னும் நோய் குணமாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பாடல் தெரிவிக்கிறது? இதில் சொல் விளையாட்டு நிரம்ப உள்ளது. அத்தி என்னும் சொல்லுக்கு அத்திமரம், ஆனை என்னும் பொருள்கள் உண்டு. எனவே, அத்திமரத்தைக் குறிக்க ஆனை என்னும் சொல்லை எடுத்துக்கொண்டார். கன்று என்பது பிஞ்சைக் குறிக்கும். ஆக, ஆனைக் கன்று என்பதற்கு 'அத்திப் பிஞ்சு' என்று பொருள் கொள்ள வேண்டும். ஆனைக் கன்றின் ஒரு பிடி என்பது, ஒரு கைப்பிடி அத்திப் பிஞ்சாம்.

'அரையன் விரோதி இளம்பிஞ்சு' என்பது இளங் கோவைப் பிஞ்சைக் குறிக்கும். கோ என்றாலும் அரையன்

என்றாலும் அரசன். வை என்றால் வையும் (திட்டும்) எதிரி. அரையன் விரோதி என்பது கோவைக் கொடி. கோவைப் பிஞ்சு ஓரளவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

கானக் குதிரை என்பது மாமரம். இப்பெயர் பின்னால் வரும் மாமரம் பற்றிய கட்டுரையில் நன்கு விளக்கப்படும். கானம்=காடு. குதிரை என்பதற்கு மாமரம் என்ற பொருளும், மா என்பதற்குக் குதிரை என்ற பொருளும் உண்டு. கானக் குதிரை என்றால் காட்டு மாமரம். புறத் தோல் என்பது மேல்பட்டை.

'காலிற் பொடியை மாற்றினது' என்பது, செருப்படை என்னும் ஒரு படர்பூடு. காலில் பொடி சுடாமல் மாற்றுவது செருப்பு ஆகும், இங்கே, செருப்பு என்பது செருப்படை என்னும் படர்பூடு வகையைக் குறிக்கிறது.

தாயைக் கொன்றான் என்பது வாழை மரம். குலை போட்டதும் தாய்மரம் கொல்லப்படுகிறது (வெட்டப் படுகிறது) அல்லவா? இப்பெயர் பற்றிப் பின்னால் வாழை மரத்தைப் பற்றிய கட்டுரையில் விரிவாகக் காணலாம். மேற் கூறியவற்றை யெல்லாம் வாழைமரப் பட்டையைப் பிழிந்து கிடைத்த சாற்றிலே போட்டு நன்றாய் அரைத்து உட்கொண்டால் 'வடுகும் தமிழும்' என்னும் நோய் குண மாகும். 'வடுகும் தமிழும்' என்பது என்ன நோய்?

வேலூர் மருத்துவர் கண்ணப்பனார், ''வடுகும் தமிழும் குணமாம்'' என்பதற்கு, 'வயிறு கடுத்துப் போகும் சகல ரத்த சீதபேதிகளும் குணமாகும்' — என்று பொருள் எழுதி யுள்ளார். ஆனால் 'வடுகும் தமிழும்' என்பது, இரத்த - சீதபேதியை எவ்வாறு குறிக்கும்? என்பதற்கு விளக்கம் இல்லை. இதற்கு நாம் விளக்கம் கண்டாக வேண்டும்.

## 4.3 மணிப் பவளம்

இரண்டு மொழிகளில் உள்ள சொற்களைக் கலந்து எழுதுவதற்கு 'மணிப் பவளநடை' என்று பெயர் கூறுதல் மரபு. மணி என்பது வெள்ளையான முத்துமணி. பவளம் என்பது சிவப்பான பவள மணி. முத்து மணியையும் பவள மணியையும் மாறி மாறிக் கலந்து கோத்த மாலையைப் போல், இருமொழிச் சொற்கள் கலந்த நடை இருக்குமாம். பெரும்பாலும் தமிழ்ச் சொற்களும் சமசுகிருதச் சொற்களும் கலந்து எழுதப்படும் நடையை மணிப் பவளநடை என்பது வழக்கம். இதேபோல் வேறு எந்த இருமொழிச் சொற்களைக் கலந்து எழுதினாலும் அஃதும் மணிப் பவளநடை என்னும் பெயருக்கு உரியதே. எனவே, வடுகும் தமிழும் கலந்து எழுதப்படும் நடையும் மணிப் பவள நடையாகும். வடுகு என்பது தெலுங்கு மொழி.

## 4.4 வடுகில் தமிழ்

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குடகு, துளு, கூ, தூதம் முதலிய மொழிகளாகும் என்பது பழைய செய்தி. இக் குடும்ப மொழிகளின் மூத்த முதல் மொழி தமிழ் என்பதும் அறிந்ததே. எனவே, தமிழ்ச் சொற்கள் தெலுங்கு முதலிய திராவிட மொழிகளில் கலந்திருப்பது இயற்கையே. இங்கே, தெலுங்கு (வடுகு) மொழியை மட்டும் எடுத்துக் கொண்டு, அத் தெலுங்கில் தமிழ்ச் சொற்கள் கலந்திருப்பதை அறிவிக்கும் ஒரு சிறு பட்டியல் வரைவோம்:

| **தமிழ்** | | **தெலுங்கு (வடுகு)** |
|---|---|---|
| அம்மா | — | அம்மா |
| அண்ணன் | — | அன்ன |
| தம்பி | — | தம்புடு |

| **தமிழ்** | | **தெலுங்கு (வடுகு)** |
|---|---|---|
| தாத்தா | — | தாத |
| அக்காள் | — | அக்க |
| மாமன் | — | மாம |
| எது | — | எதி |
| அது | — | அதி |
| இது | — | இதி |
| சின்ன | — | சின்ன |
| வானம் | — | வானெ |
| ஈ (கொடு) | — | ஈய் |
| இரவு | — | இராத்திரி |
| பகல் | — | பகலு |
| எவர் | — | எவரு |
| ஊர் | — | ஊரு |
| ஊருக்கு | — | ஊரிக்கி |
| கண்(ணு) | — | கன்னு |
| மூக்கு | — | முக்கு |
| செவி | — | செவ்வு |
| நோரு (வாய்) | — | நோரு |
| தலை | — | தல |
| ஆ (பசு) | — | ஆவு |
| எருது | — | எத்து |
| நெருப்பு | — | நிப்பு |
| பருப்பு | — | பப்பு |
| உப்பு | — | உப்பு |

இவ்வாறு எழுதிக் கொண்டு போனால் இப்பட்டியல் மிகவும் நீளும். *எனவே, தெலுங்கோடு தமிழ்ச்சொல்

* எனது 'தொல் திராவிட மொழி - கண்டுபிடிப்பு' என்னும் நூலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்புமைச் சொற்களைக் காணலாம்.

கலந்து எழுதப்படும் நடைக்கும் 'மணிப் பவளநடை' என்னும் பெயர் பொருந்தும் — என்பது தெரிய வரலாம். ஈண்டு, மணி என்பது வெள்ளை முத்துமணி என்பதும், பவளம் என்பது சிவப்புப் பவளமணி என்பதும் மீண்டும் நினைவுகூரப்பட வேண்டும். வடுகு, தமிழ் என்னும் இரு மொழிகளுள் முத்துமணி எது - பவளமணி எது என்ற ஆய்வு தேவையில்லை. இரண்டனுள் ஏதோ ஒன்று வெள்ளை முத்து - மற்றொன்று சிவப்புப் பவளம் எனக் கொண்டால் போதும்.

'வடுகும் தமிழும்' என்பதற்கு, வேலூரார் எழுதியுள்ள 'ரத்த சீதபேதி' என்னும் பொருளின்படி, இரத்தம் சிவப்பானது-சீதம் வெண்மையானது. எனவே இரத்தத்தைச் சிவந்த பவள மணியாகவும், சீதத்தை வெள்ளையான முத்துமணியாகவும் கொள்ள வேண்டும். ஆக, 'வடுகும் தமிழும் குணமாம்' என்பதற்கு, குருதியும் சீதமுமாகப் போகும் வயிற்றுக் கடுப்பு நோய் நலமாகும் என்பது பொருளாம்.

மேற்கூறிய இவ்வளவு விளக்கம் இல்லையெனில், தேரையர் பாடலுக்கு எவ்வாறு பொருள் கொண்டு, எவ்வாறு எந்த மருந்தை உட்கொள்ள முடியும்? மறை முகமாக - குழூஉக் குறியாக முன்னோர்கள் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார்கள்.

## 5. உளவியல் மருத்துவம்

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இங்கே ஒரு காரணமாவது கூறலாம். அதாவது: ''முருங்கைக் கீரையை இவ்விவ்வாறு செய்து உட்கொள்ளின் இன்னின்ன நோய்கள் நீங்கும்; குப்பைமேனி இலையை இன்னின்னவாறு செய்து உட்கொள்ளின் இன்னின்ன வகை நோய்கள்

விலகும்'' - என்றெல்லாம் மருத்துவர் கூறின், கேட்கும் நோயாளி ''அப்பாடா! முருங்கையும் குப்பைமேனியுந்தானா பெரிய மருத்துவம்?'' என்று எளிமையாக எண்ணக் கூடும். மனம் மருத்துவத்தில் நம்பிக்கை கொள்ளாவிடின் நோய் தீராது. உள்ளத்திற்கும் உடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே எல்லாரும் அறியும் எளிய பெயர்களை விட்டு, வேறு புதுப்பெயர் கூறின், நோயாளி, ''ஓகோ! ஏதோ பெரிய மூலிகைபோல் இருக்கிறது'' என்று உயர்வாக எண்ணி உட்கொள்ளக் கூடும்; அதனால் நோய் விலகலாம். இஃது ஒருவகை உளவியல் மருத்துவம் (Psychological Treatment) என்று கூறலாம்.

## 6. முயற்சியின் கூறு

எனவே, புரியாத புதிய புதிர்ப் பெயர்களை வைத்து விட்டுப் போன முன்னோர்களை நோகாமல், பெயர்களை மறைத்துக் கொண்டிருக்கும் மறை திரையைக் கிழித்து உட்பொருளைக் காணவேண்டும். அந்த முயற்சியின் ஒரு கூறே, ''மர இனப் பெயர் வைப்புக் கலை'' என்னும் இத் தொடர் கட்டுரை நூலாகும். இந்நூலில், குழூஉக் குறியாக உள்ள மரஇனப் பெயர்கள் சில, ஆய்ந்து தெளிந்த விளக்கங்கள் பெற்றுள்ளன. விளக்கத்திற்கு அரணாக, இலக்கியச் சான்றுகளும் மருத்துவ நூற்சான்றுகளும் உலகப் பட்டறிவுச் (அனுபவச்) சான்றுகளும் ஓரளவு தரப் பட்டுள்ளன. எல்லாக் குழூஉக் குறிப் பெயர்களும் இந் நூலில் இடம் பெற்று விடவில்லை. காரண விளக்கம் செய்யப்பட வேண்டிய பெயர்கள் இன்னும் பல உள. வாய்ப்பு நேருங்கால் அப்பணியும் செய்யப் பெறும்.

## 7. நூற்பொருள்

இந்தக் கட்டுரை நூலில் இடம் பெற்றுள்ள பொருள் களாவன:- சொல்லாராய்ச்சி-மொழியாராய்ச்சி, இலக்கிய-

இலக்கண ஆராய்ச்சி, சித்த மருத்துவம்-வீட்டு மருத்துவம், பலதுறை அறிவியல் ஆய்வு, பலதுறைப் பொது அறிவுக் கூறுகள், புராண - வரலாற்றுச் செய்திகள், நிலவியல், சுவைத்துப் படித்து இன்புறும் பொழுதுபோக்குக் கூறுகள் - இன்ன பிறவாம்.

## 7.1 பெயர்களும் நூல்களும்

இந்நூற்பெயர்கள் பின்வரும் நூல்களிலிருந்து பெறப் பட்டவையாகும். அந்நூல்களாவன:

திவாகரம்-பிங்கலம் - சூடாமணி - ஆசிரியம் - கயாதரம்-அரும்பொருள் விளக்கம் - நாமதீபம் - முதலிய நிகண்டுகள், அமுத சாகரம், அகத்தியர் நூல்கள் - நிகண்டுகள், போகர் நிகண்டுகள், தேரன்வெண்பா, தேரையர் குணபாடம், மூலிகை வைத்திய அகராதி, சித்தவைத்திய அகராதி, வைத்திய மலை அகராதி, தைல வருக்கச் சுருக்கம், பதார்த்த குண சிந்தாமணி, பதார்த்த குண அரும்பொருள் விளக்கம், சாம்பசிவம் பிள்ளை தமிழ் ஆங்கில அகர முதலி, சங்கத்து அகராதி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (லெக்சிகன்), தமிழ்க் கலைக் களஞ்சியம், ஜூபிலி தமிழ்ப் பேரகராதி, முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூல், முஸ்சே-துய்புய் ஆகியோரின் பிரெஞ்சு - தமிழ் அகர முதலி-முதலியனவாம். உலக வழக்குப் பெயர்கள் ஒருசிலவும் இடம்பெற்றிருக்கும்.

## 8. நூல் அமைப்பு

### 8.1 வடமொழிப் பெயர்கள்

இந்நூலில் வடமொழிப் பெயர்கட்கும் பெயர்க்காரண விளக்கம் தரப்பெற்றுள்ளது. தமிழிலக்கியங்களில் வடமொழிப் பெயர்களின் ஆட்சி மிகுதியாயிருப்பதால்,

அப்பெயர்கட்குப் பொருள் புரிந்தால்தான், தமிழ்ப் பாடல் களின் கருத்தைத் தெளிவாய் உணர முடியும்.

### 8.2 முறைவைப்பு

பயனால் பெற்ற பெயர்கள், வடிவால் பெற்ற பெயர்கள், சார்பால் பெற்ற பெயர்கள்-முதலிய தலைப்புகள் இட்டுப் பெயர்க்காரண விளக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த முறைவைப்பு எல்லாக் கட்டுரைகளிலும் ஒரே மாதிரியாயிராது. குறிப்பிட்ட மர இனத்துக்குக் கொடுக்கப் படும் கவர்ச்சியான தலைப்புப் பெயர் எதனால் அப்பெயர் பெற்றதோ - அந்தப் பெயர்க் காரணத்தை உடைய மற்ற பெயர்கள் முதலில் இடம் பெறும். அடுத்த-அடுத்த பெயர்க் காரண வகைகள், தலைப்பெயரின் இன்றியமையாமைக்கு ஏற்பவும், பெயர்க் காரண வகையின் இயல்புக்கு ஏற்பவும் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும். நூலுள் புகுந்து பார்த் தாலேயே இக்கருத்து விளங்கும்.

### 8.3 இலக்கிய மேற்கோள்

இலக்கிய மேற்கோள்கள் கழகக் (சங்கக்) காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டு வரை வெளியான இலக்கிய-இலக்கண நூல்களிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளன.

திரும்பத் திரும்பப் பெயர்க்காரணங்களைப் பற்றி மட்டுமே படித்துக் கொண்டிருந்தால் அலுப்பு ஏற்படும் என்பதற்காக, சில பகுதிகளில், இடையிடையே இலக்கிய நயமும் தொடர்புடைய வேறு சில துணைச் செய்திகளும் இடம் பெற்றிருக்கும்.

### 9. மறு ஆய்வு

இக்கட்டுரை நூலில், பெரும்பாலான செய்திகள் தக்க அகச்சான்று - மேற்கோள்களுடன் தரப்பட்டிருக்கும். சில

செய்திகள் என் உய்த்துணர்வாலும் சொந்தக் கற்பனையாலும் சொந்தப் பட்டறிவாலும் சொல்லப்பட்டிருக்கும், இது சார்பாகச் சிலருக்குக் கருத்து வேற்றுமை ஏற்படலாம். யான் கூறியனவே முடிந்த முடிபாக மாட்டா. சில செய்திகள் பொருந்தாதன போல் தோன்றின், ஆராய்ச்சியாளர்கள் மேலும் மறுஆய்வு செய்து கருத்து வெளியிடலாம் - அடியேனுக்கும் தெரிவிக்கலாம்.

## 10. அடிக்குறிப்பு

இலக்கிய மேற்கோள் தந்தால், நூல் பெயர்-காண்டம்-படலம் - பாடல் எண் - முதலியவற்றை, மேற்கோளிலும் பக்கத்தின் அடியிலும் ஒருகுறியிட்டு, அடிக்குறிப்பு என்னும் பெயரால் தருவது உண்டு. இத்தகைய முறை, அச்சுக் கோப்பவர், அச்சுப் பிழை திருத்துபவர், படிப்பவர் ஆகியோருக்கு ஒருவகையில் தொல்லையாயிருப்பதை அறிந்த பட்டறிவு காரணமாக, நூல் பெயர் - காண்டம் - படலம் - பாடல் எண் - முதலியவை, மேற்கோளின் பக்கத்திலேயே இந்நூலில் தரப்பட்டுள்ளன. இத்தகு முறை அனைவரது முயற்சியையும் எளிமையாக்கும்.

## 11. நன்றியறிவிப்பு

யான் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொண்டாற்றிக் கொண்டிருந்த ஞான்று, அன்றாட முதன்மைப் பணி முடிந்த பின்னும் – ஓய்வு நேரத்திலும், விடுமுறை நாட்களிலும் இந்த நூற் கட்டுரைகளை எழுதினேன். விடுமுறையில் புதுச்சேரிக்கு வந்திருந்தபோதும் எழுதினேன். இவ்வளவு மட்டுமன்று; தூங்கும்போது தவிர்த்த மற்ற எல்லா நேரங்களிலும் – அதாவது கழிவறைக்குள் இருந்தபோதும் குளித்தபோதும் உண்டு கொண்

டிருந்தபோதும் பெயர்க் காரணங்களை எண்ணி எண்ணி ஆய்ந்து கொண்டிருந்து பின்னர் வந்து எழுதிவிடுவேன்.

எனவே, இந்நூல் வெளியிடற்கு முதன்மைக் காரணமாயிருந்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு மிக்க நன்றி செலுத்துகிறேன்.

இதற்கு மேலாக, அடியேனைத் தாமாகவே அழைத்துத் தொகுப்பியல் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் அமர்த்திப் பணி கொண்ட முன்னாள் – முதல்துணைவேந்தர் பெருந்தகை உயர்பெருந்திரு வி. ஐ. சுப்பிரமணியனார் அவர்களின் திருவடிகளைப் பணிந்து என்றுங் குன்றா நன்றி செலுத்துகிறேன். வணக்கம்.

## 2. கற்பு முல்லை

கற்பு என்னும் சொல்லுக்கு முல்லை என்று ஒரு பொருள் அகர முதலிகளில் தரப்பட்டுள்ளது. ஒரு முல்லைக் கொடி படர ஒரு தேரையே விட்டுக்கொடுத்த பாரியின் வள்ளன்மை, முல்லையின் அருமை பெருமையை அறிவிக்கும், முல்லைக் கொடிக்கு, மௌவல், ஊதிகை, தளவம், கற்பு, மாகதி என்னும் வேறு பெயர்கள் உண்டு எனத் திவாகர நிகண்டும், ஆசிரிய நிகண்டும் கூறுகின்றன:

**''மௌவலும் தளவமும் கற்பும் முல்லை''**

(4-197)

என்பது திவாகர நூற்பா.

**'' மௌவல் ஊதிகை தளவு கற்பு மாகதியென**
**வழங்கு பெயர் முல்லை யாகும் ''** (137)

என்பது ஆசிரிய நிகண்டு நூற்பா. இவற்றை அடியொற்றி, கற்பு என்னும் சொல்லுக்கு முல்லை என்னும் பொருளை அனைத்து அகராதிகளும் தந்துள்ளன. முல்லைக்குக் கற்பு என்னும் பெயர் வந்த வரலாற்றைக் காண வேண்டும்:

### 1. இலக்கண நூல்களில் முல்லை

ஆணும் பெண்ணும் அகவுணர்வால் காதலித்து மணந்து கொண்டு குடும்பம் நடத்தும் வாழ்க்கை நெறி அகத்திணை என்றும், மக்களின் மற்ற புற வாழ்க்கை நெறிகள் புறத் திணை என்றும் கூறப்படும். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்தும் அகத்திணைகள் எனப் படும். இவை மரஞ் செடி கொடிகளின் பெயர் அடிப்படையில் பிறந்த பெயர்களே. இவற்றுள் ஒவ்வொன்றிற்கும் முதல், கரு, உரி என்னும் முப்பொருள்கள் உண்டு. முதல் என்பது, திணைக்கு உரிய நிலமும் காலமுமாம். கரு என்பது அவ்வந் நிலத்தில் உள்ள பொருள்களாம். உரி என்பது, அவ்வத் திணைக்கு உரிய ஒழுக்கச் செயல்களாம்.

குறிஞ்சிக்கு: நிலம் மலையும் மலைசார்ந்த இடமுமாம்; காலம் கூதிர்ப் பருவமும் முன் பனிப் பருவமும் நடு யாமமும் ஆகும்; கருப்பொருள் குறிஞ்சி மலர் முதலியன; உரி புணர் தலும் புணர்தல் நிமித்தமுமாம்.

பாலைக்கு: நிலம் வறண்ட பகுதி; காலம் வேனிலும் பின் பனிப் பருவமும் நண்பகலுமாம்; கரு பாலை நிலப் பொருள்கள்; உரி பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாம். முல்லைக்கு: நிலம் காடும் காடு சார்ந்த இடமு மாம்; காலம் கார்ப் பருவமும் மாலைப் பொழுதுமாம்; கரு முல்லைப் பூ;

முல்லைப் பூ முதலியனவாம்; உரி இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாம். நெய்தலுக்கு: நிலம் கடலும் கடல் சார்ந்த இடமு மாம்; காலம் அறுவகைப் பருவமும் மாலை நேரமுமாம்; கரு நெய்தல் கொடி முதலியன; உரி இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாம். மருதத்துக்கு நிலம் வயலும் வயல் சார்ந்த இடமுமாம்; காலம் அறுவகைப் பருவமும் வைகறையும் காலை நேரமுமாம்; கரு மருத மரம் முதலியன; உரி ஊடலும் ஊடல் நிமித்தமுமாம்.

விரிவஞ்சி, இங்கே நமக்கு மிகவும் இன்றியமையாததான உரிப் பொருளைக் கூறும் இலக்கண நூற்பாக்களை மட்டும் கீழே காண்போம். இதற்காகவே இவ்வளவு வழிகடந்து வரவேண்டியதாயிற்று.

தொல்காப்பியம்:

**" புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"**

(பொருள்-அகத்திணையியல் - 14)

நம்பியகப் பொருள்:

**" புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
**இரங்கலும் இவற்றின் நிமித்தமும் என வாங்கு,**
**எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே"**

(அகத்திணையியல் - 25)

வீரசோழியம்:

'புணர்தல் குறிஞ்சி', 'பிரிதல் பாலை', 'முல்லை கிழத்தி மனையிருத்தல்', 'ஊடல் மருதத் திணை', 'இரங்கல் நெய்தல்'

**"புணர்தல் குறிஞ்சி, 'பிரிதல் பாலை', 'முல்லை கிழத்தி மனையிருத்தல்', 'ஊடல் மருதத் திணை', 'இரங்கல், நெய்தல்' தெளிந்தறியே''**

(பொருளதிகாரம் – பொருட்படலம் - 90-94)

இலக்கண விளக்கம்:

**"புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
**இரங்கலும் இவற்றின் நிமித்தமும் என வாங்கு**
**எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தவை**
**ஓரிரண்டு ஓரிரண்டு உரைத்தவைந் திணைக்கு**
**நேரும் என்மனார் நெறியுணர்ந் தோரே''**

(அகத்திணையியல் - 21)

ஐந்திணை உரிப்பொருள்கள் இவையிவை என்பதற்கு மேலுள்ள நூற்பாக்கள் அகச்சான்றுகளாகும். புணர்தல் குறிஞ்சித் திணைக்கு உரியது; புணர்தல் என்றால், தலைவனும் தலைவியும் உடலுறவு கொள்ளுதலாம். பிரிதல் பாலைத் திணைக்கு உரியது. பிரிதல் என்றால், தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுதலாம். இருத்தல் முல்லைத் திணைக்கு உரியது; இருத்தல் என்றால், தலைவனைப் பிரிந்த தலைவி, பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு (சகித்துக் கொண்டு) இல்லத்தில் ஆற்றியிருத்தலாம். இரங்கல் நெய்தல் திணைக்கு உரியது; இரங்கல் என்றால், தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாது வருந்துதலாம். ஊடல் மருதத் திணைக்கு உரியது; ஊடல் என்றால், பிரிந்த தலைவன், பரத்தை வீட்டிலிருந்தோ வேற்றூரி லிருந்தோ வந்து தலைவியை அடைந்த போழ்து, தலைவி பொய்ச் சினங் கொண்டு தலைவனை ஏற்றுக் கொள்ளாதவள் போல் நடித்தலாம். தொடர்பு அறிவதற்காக இச்செய்திகள் இங்கே தரப்பட்டன. இனி நமக்கு வேண்டிய முல்லையை மட்டும் எடுத்துக் கொள்வோம்,

## 1.1 இருத்தல் முல்லை

தலைவனைப் பிரிந்த தலைவி இல்லத்தில் ஆற்றி யிருத்தல் முல்லை எனப்பட்டது. முல்லைப் பாட்டு என்னும் நூலின் உரைத் தொடக்கத்தில் நச்சினார்க்கினியர் பின் வருமாறு கூறியுள்ளார்.

''முல்லை சான்ற கற்புப் பொருந்தியதனால், இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிரு என்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய முல்லையாம் என்று கருதி இருத்தல் என்னும் பொருள்தர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறினமையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறலே அவர் கருத்தா யிற்று''. இவ்வாறு தலைவி ஆற்றியிருத்தல் கற்புச் செய லாகக் கருதப்பட்டது. தொல்காப்பியம் - கற்பியலில் உள்ள ''புணர்ந்துடன் போகிய'', (148) என்னும் நூற்பாவில் உள்ள ''கிழவோள் மனையிருந்து'' என்னும் தொடருக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள ''தலைவி கற்புக் காலத்து இல்லின் கண் இருந்து'' என்னும் உரைப்பகுதியும், இதற்குப் பேராசிரியர் எழுதியுள்ள ''தலைமகள் கற்புக் கடன் பூண்டொழுகுங் காலத்து மனைக்கண் இருந்து'' என்னும் உரைப்பகுதியும் ஈண்டு கருதத் தக்கன.

மேலும். ''புணர்தல் பிரிதல்'' என்னும் தொல் காப்பிய அகத்திணையியல் (14) நூற்பாவின் உரையில், ''அவரோ வாரார் முல்லையும் பூத்தன'' என்னும் குறுந் தொகைப் பாடலை (221) எடுத்துக் காட்டி, அதன் கீழ், ''இது முல்லை சான்ற கற்பாயிற்று; அவன் கூறிய பருவம் வருந்துணையும் ஆற்றியிருத்தலின்''—என்று கூறியுள்ள நச்சினார்க் கினியரின் உரைப் பகுதியும் காண்க.

மற்றும், வீர சோழியம் — பொருளதிகாரம் பொருட் படலம்-முல்லை நடையியல் என்னும் பகுதியிலுள்ள,

**" கற்புக் கடம் பூண்டு கடப்பா டாற்றும்
முல்லைத் திணைநடை சொல்லுங் காலை
இறைவன் பிரிய இல்லிருந் தாற்றி"** (1)

**" நன்னில மருதமும் தொன்னில முல்லையும்
துன்னருங் கற்பொடு தோன்றும் தொடர்ந்தே"**(4)

என்னும் நூற்பாப் பகுதிகளும் உணரத்தக்கன.

**கோவலனைப் பிரிந்த கண்ணகி இல்லத்தில் ஆற்றி யிருந்தமையால்தான், அவளை,**

**" கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"**
(சிலம்பு-15—: 143, 144)

எனக் கவுந்தியடிகள் வாயிலாக இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறியுள்ளார் போலும். "கற்புக் கடம் பூண்ட" என்னும் சிலம்புத் தொடரே, பின்பு வீர சோழியத்தில் இடம் பெற்றிருப்பது காண்க.

## 2. இலக்கியங்களில் கற்பு முல்லை:

மேலே இது காறும் கூறியவற்றால், முல்லை என்றதும், முல்லைத் திணையும், காடும் காடு சார்ந்ததுமான நிலமும், கார்ப்பருவமும் மாலைப் பொழுதும், முல்லை மலர்க் கொடியும், தலைவனைப் பிரிந்த தலைவி இல்லத்தில் ஆற்றி யிருத்தலும் நினைவுக்கு வரலாம். இவற்றுள் சிலவற்றை முல்லை என்னும் சொல் குறிப்பதை ஆகுபெயர் எனலாம்.

முல்லை மலர்க்கொடி கார்காலத்தில் செழித்து வளரக் கூடியது. இருட்டிக் கொண்டிருக்கிற அந்தி மாலையில் மலர்வது. வேறு முல்லைக் கொடிகளின் மலர்களிலிருந்து வண்டுகளின் வாயிலாகப் பிற மகரந்தச் சேர்க்கை பெறுவதற்காகவே, முல்லை மலர் வெண்மையாக இருக்கிறது.

இருட்டில் வெண்மையாக இருந்தால்தானே, முல்லை மலர் இருப்பது வண்டுகட்குத் தெரியும். இதற்காகவே, மாலை யிருளில் மலரும் முல்லைக்கு இயற்கை வெண்மையைத் தந்துள்ளது. இதனை 'இயற்கையின் தேர்வு '(Selection of Nature)' என்பர்.

சிறுபாணாற்றுப்படை:

**''முல்லை சான்ற முல்லையம் புறவின்''** (169)

(நச்சினார்க்கினியர் உரை: 'கணவன் கூறிய சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்து ஆற்றியிருந்த தன்மை யமைந்த முல்லைக்கொடி படர்ந்த காட்டிடத்து')
மதுரைக்காஞ்சி:

**''முல்லை சான்ற புறவணிந்து ஒருசார்''** (225)
**(நச்சர் உரை: ''இருத்தலாகிய உரிப்பொருள் அமைந்த காடு சூழ்ந்து ஒரு பக்கம்....'')**

மேற்கூறிய அகச் சான்றுகளால், முல்லைக்கொடி காட்டில் மிகுதியாக வளரும்; அதனால், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டன-என்பதை அறியலாம். முல்லை கார் காலத்தில் செழிப்பாய் வளரும்; மாலையில் மலரும் என்பதற்கு உரிய அகச் சான்றுகள் சில வருமாறு:-

குறுந்தொகை:

**''மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடிக்**
**கறவை கன்றுவயிற் படரப் புறவிற்**
**பாசிலை முல்லை ஆசில் வான்பூ....''** (108)

**''பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை இலங்கு எயிறாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே''** (126)

**" தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப்**
**பல்லான் கோவலர் கண்ணிச்**
**சொல்லுப வன்ன முல்லைமென் முகையே"** (358)

இப்பாடல் பகுதிகளால், மழை விளையாடும் கார் காலத்தில், மந்தையிலிருந்து பசு கன்றை நினைந்து வீடு நோக்கிவரும் மாலைப் போழ்தில் முல்லை மலரும் என்னும் செய்தி தெளிவு.

தலைவனைப் பிரிந்த தலைவி வீட்டில் ஆற்றியிருத்தலும் வீட்டில் முல்லைக்கொடி வளர்த்தலும் முல்லை மலர் சூடிக் கொள்ளலும் கற்புடைமையின் சிறந்த அறிகுறியாம். இதற்கு உரிய அகச் சான்றுகள் சில வருமாறு:-

குறுந்தொகை:

**" விளங்கு நகர் அடங்கிய கற்பின்நலங்கேழ்**
**அரிவை"** 338

**" மனைமரத்து, எல்லுறு மௌவல் நாறும்**
**பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே"** (19-3,4,5)

நற்றிணை-

**" மயிலடி இலைய மாக்குரல் நொச்சி**
**மனைநடு மௌவலொடு ஊழ்முகை யவிழக்**
**கார் எதிர்ந்து..."** (115-5,6,7)

அகநானூறு:

**" மனையிள நொச்சி மௌவல்வான் முகை"** (21-1)
**" மனைய, தாழ்வில் நொச்சி சூழ்வன மலரும்**
**மௌவல் மாச்சினை காட்டி"** (23-10,11,12)

சிலப்பதிகாரம்:

> **'' இல்வளர் முல்லையொடு மல்லிகை யவிழ்ந்த**
> **பல்பூஞ் சேர்க்கை''** (4-27,28)
>
> **'' மாதவி மல்லிகை மனைவளர் முல்லைப்**
> **போது விரி தொடையல்''** (13-120,121)

பெருங்கதை:

> **'' இல்லெழு முல்லையொடு மல்லிகை மயங்கிப்,**
> **பெருமணம் கமழவும்''** (1-33-73,74)

மேலுள்ளவற்றுள், 338 ஆம் குறுந்தொகைப் பாடல், 'நகரில் (வீட்டில்) ஆற்றியிருக்கிற கற்புடைய பெண்' என்று கூறுகிறது. (நகர்=இங்கே வீடு என்னும் பொருளது). 19-ஆம் பாடல், மனையிலே உள்ள ஒரு மரத்தில் படர்ந்து வளரும் ஒளியுடைய மௌவல் (முல்லை) மலர் மணம் வீசுகிற கூந்தலை உடைய பெண் என்று தெரிவிக்கிறது. கற்புடைய மகளிர் வீட்டிலே முல்லை வளர்த்தலும் கூந்தலிலே சூடிக்கொள்வதும் இதனால் அறிய வரும். 115-ஆம் நற்றிணைப் பாடல், கார் காலத்தில், வீட்டு எல்லையிலே உள்ள நொச்சி மரத்தில் முல்லை படர்ந்து மலரும் எனக்கூறுகிறது. அடுத்துள்ள பாடல் பகுதிகளாலும், மனையில் முல்லை வளர்ப்பு தெரியவருகிறது.

## 2·1 தேவியின் முல்லை வளர்ப்பு:

கற்புடைமையின் அறிகுறியாக மக்கட் பெண்டிர் முல்லை வளர்ப்பதைக் கண்ட புலவர்கள், தெய்வ மகளிரும் அவ்வாறு வளர்ப்பதாகக் கூறத் தொடங்கிவிட்டனர். தெய்வ மங்கையருள்ளும் தலையாயவளாகிய உமாதேவியே கற்பின் அறிகுறியாக முல்லை வளர்ப்பதாகத் 'தக்க யாகப்

பரணி' ஆசிரியராகிய ஒட்டக் கூத்தர் அறிவித்துள்ளார். அந்நூற்பாடல் வருமாறு:-

**'' நுதிக்கோடு கூர்கலை உகைப்பாள் விடாமுல்லை**
**நூறாயிரங் கிளைகொடு ஏறா விசும்பிவர்**
**மதிக்கோடு தைவர எழுந்தண் கொழுந்துகளை**
**வாயாது எனக்கொண்டு மேயாது மான்மறியே''** *(75)*

இப்பாடலின் கருத்தாவது: கலைமானை ஊர்தியாகக் கொண்ட தேவி வளர்க்கும் முல்லைக் கொடி, நூறாயிர மாகக் கிளைத்து விண்ணில் ஏறி நிலவுலகை (சந்திர மண்டலத்தை) அடைந்து நிலாவினைத் தடவுகிறதாம்; நிலாவில் உள்ள (கறையாகிய) மான், தேவி வளர்க்கும் முல்லை என அஞ்சி அம்முல்லையின் கொழுந்துகளை மேயவில்லையாம். இது கருத்து. 'அண்டப் புளுகு-ஆகாசப் புளுகு' என்று உலகியலில் கூறுவது இதுதான். புலவர்கள் இதனை நாகரிகமாக 'உயர்வு நவிற்சி அணி' என்பர். அடுத்து, ஊர் பேர் தெரியாத பழைய உரையாசிரியர் ஒருவர் இப்பாடலுக்கு எழுதியுள்ள உரையின் ஒரு பகுதி வருமாறு:-

**'' தேவி முல்லை வளர்த்தற்குக் காரணம் கற்புடைமை**
**யென வுணர்க,**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்''**
- இது சிறுபாணாற்றுப்படை.

இவ்வாறு, தக்க யாகப் பரணிப் பாடலாலும் உரை யாலும் மேலும் இக்கருத்து அரண் பெறுகிறது.

**3. முல்லை சான்ற கற்பு:-**

இதுகாறுங் கூறியவற்றிற்கு முடி மணியாகவும், முல்லை வேறு-கற்பு வேறு என்று பிரிக்க முடியாதவாறு முல்லையே

கற்பு—கற்பே முல்லை என்று சொல்லும்படியான ஆட்சித் தொடராகவும் விளங்குவது ‘முல்லை சான்ற கற்பு’ என்னும் அரிய தொடராகும். இத்தொடர், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையிலும், இடைக் காடனார் பாடிய நற்றிணைப் பாடல் ஒன்றிலும் அவரே பாடிய அகநானூற்றுப் பாடல் ஒன்றிலும் இடம் பெற்றுள்ளது. இம்மூன்று நூற்பாடல் பகுதிகளும் வருமாறு:-

*சிறுபாணாற்றுப்படை:*

**“முல்லை சான்ற கற்பின் மெல்லியல்**
**மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்”** (30, 31)

*நற்றிணை:*

**“புறவி னதுவே பொய்யா யாணர்**
**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே”** (142:8-11)

*அகநானூறு:*

**“தண்ணறும் புறவி னதுவே நறுமலர்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே”**
(274-12, 13, 14)

மேலுள்ள மூன்று பாடல் பகுதிகளும் முல்லை சான்ற கற்புடைய மகளிர் பற்றிக் கூறுகின்றன. நற்றிணைப் பாடலும் அகநானூற்றுப் பாடலும் இடைக்காடனார் என்னும் ஒரே புலவரால் பாடப்பட்டமையின் ஒத்துள்ளன. முல்லை சான்ற கற்பு என்னும் தொடருக்கு, வீட்டில் பண்போடு ஆற்றியிருத்தலில் சிறந்த கற்பு என்றும், முல்லை மலரைச் சூடிச் சிறந்துள்ள கற்பு என்றும் இரு

வகையாகப் பொருள் செய்யப்படுகிறது. இரு பொருளும் ஒத்தனவே.

சிறு பாணாற்றுப் படையில் ''முல்லை சான்ற கற்பு' என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரைப்பகுதியாவது:-

**'' முல்லை சூடுதற்கு அமைந்த கற்பு; கற்பின் மிகுதி தோன்ற முல்லை சூடுதல் இயல்பு''** – என்பதாம்.

நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி உரையிலும் இக்கருத்தைக் கூறியுள்ளார். ''பனி முல்லைச் சூட்டு வேய்ந்தார்'' என்னும் சிந்தாமணிப் பாடல் (624) பகுதிக்கு ''முல்லைச் சூட்டைக் (மாலையை) கற்பிற்குத் தலையிலே சூட்டினார் என்க'' எனவும், அதே நூலில் ''முல்லைச் சூட்டு மிலைச்சி'' என்னும் பாடல் (2438) பகுதிக்கு, 'முல்லைச் சூட்டைக் கற்பிற்கு மிலைச்சி'' (மிலைச்சுதல் - சூட்டுதல்) எனவும் உரை வரைந்துள்ளார். வேறு சில நூல் களிலும் முல்லை சூடும் கருத்து வந்துள்ளது. அந்நூற்பகுதி களாவன:-

ஐங்குறுநூறு:

**'' பாணர் முல்லை பாடச் சுடரிழை**
**வாணுதல் அரிவை முல்லை மலைய''** (408)

தக்க யாகப் பரணி:

**'' முடிச் சூட்டு முல்லையோ முதற் கற்பு முல்லையோ''** (119)

குலோத்துங்கச் சோழன் கோவை:

**'' வண்முல்லை சூடுவதே நலங்காண் குல மாதருக்கே''** (168)

சீகாளந்திப் புராணம்:

**" முல்லை சால் மனை யுலோபா முத்திரை"**
(பொன் முகரி-21)

பிரபுலிங்க லீலை;

**" முல்லை யந்தொடை யருந்ததி முதலெழு முனிவர்
இல்லறம் புரி துணைவியர்"** (கைலாச கதி - 27)

கற்பின் சிறந்தவள் அருந்ததியாதலின், 'முல்லையந் தொடை அருந்ததி' என்று பிரபுலிங்க லீலை கூறியுள்ளது. அகத்தியரின் மனைவி உலோபா முத்திரையின் கற்பு அகத்தியரால் ஆராயப்பெற்றபோது, அவள் சிறந்த கற்புடையவள் என்பது மெய்யாயிற்று. அதனால்தான், சீகாளத்திப் புராணம் "முல்லை சால் மனை உலோபா முத்திரை" என்கிறது. இங்கே முல்லை என்பது மலர் அன்று; கற்பு என்னும் பொருளதாகும். முல்லை சால் மனை என்றால், கற்பு மிகுந்த மனையாள் என்பது பொருளாம். குலோத்துங்கச் சோழன் கோவை, முல்லை சூடுதற்கு உரிய 'குல மாதர்' என்றது கற்புடை மகளிரை. தக்க யாகப் பரணியும் மிக உயர்ந்த கட்டத்தில் கற்பு முல்லையைப் பற்றிப் பேசுகிறது; முடியில் சூடும் முல்லை எளிய கொடி முல்லை மலர் அல்லவாம்; உயர்ந்த பண்பான கற்பைக் காட்டும் முல்லையாம். "முடிச்சூட்டு முல்லையோ முதற் கற்பு முல்லையோ" என்னும் தக்கயாகப் பரணிப் பாடல் பகுதிக்குப் பெயர் தெரியாத பழைய உரையாசிரியர் எழுதியுள்ள உரைப் பகுதி கருதத் தக்கது; அது வருக:-

"திரு முடிச் சுற்று மாலையாவன வல்லி சாதி முல்லைப் பூவோ? அல்ல; தன்னுடைய பிரதான குணமான பதி விரத முல்லை யல்லவோ" - என்பது உரைப்பகுதி.

**சுருக்கத் தொகுப்பு:**

கற்பு முல்லை பற்றிச் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றைச் சுருங்கத் தொகுத்து, பிற்காலத்தவராகிய கொங்கு வேளிர் என்பவர் தம் பெருங்கதை என்னும் நூலின் மகத காண்டம் — கண்ணுறு கலக்கம் என்னும் பகுதியில் பின்வருமாறு பாடியுள்ளார்;

**6 " உயர்வரை யுப்பால் கதிர்கரந் தொளிப்ப,**
**ஆண்கடன் அகறல், அதுநோன்று ஒழுகுதல்**
**கற்புடை மகளிர் கடனெனக் காட்டி**
**வினைக்கும் பொருட்கு நினைத்துநீத் துறையுநர்**
**10 எல்லை கருதியது இதுவென மெல்லியற்**
**பணைத்தோள் மகளிர்க்குப் பயிர்வன போல**
**மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய**
**13 பைந்தார் முல்லை வெண்போது நெகிழ ....**
**35 ....................................... வாடை**
**36 உழல்புகொண் டறாஅது ஒல்லென் றூர்தர**
**39 ... புன்கண் மாலை போழத் தன்கண் ..."**

என்பது பாடல் பகுதி. சங்க இலக்கியச் செய்திகள் பெரும்பாலும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

## 3-1 கற்பு முல்லை:

சுந்தரர் மணந்த சங்கிலியாரின் தந்தை ஞாயிறு கிழவர் என்பவர். இவருடைய மனைவியாரைக் குறிப்பிடுங்கால்,

**" கற்பு வளர் கொடியே யனைய மனைவியார்"**

என்று சேக்கிழார் பெரிய புராணப்பாடல் (3369) ஒன்றில்

கூறியுள்ளார். முல்லைக் கொடியைக் கற்புக் கொடி என்றே ஆசிரியர் கூறியுள்ள நுட்பம் கருதற்பாற்று.

இறுதியாக, 'கற்பு முல்லை' என்னும் துறையின் பெயரால், புறப்பொருள் வெண்பா மாலை கூறும் பாக்களுடன் இக்கட்டுரையை முடிக்கலாம்:-

**10. பொதுவியற் படலம் - 282. கற்பு முல்லை;**

**"மேவருங் கணவன் தணப்பத் தன்வயின்**
**காவல் கூறினும் அத்துறை யாகும்".**
**(அத்துறை யாகும் = கற்பு முல்லை யாகும்)**

**"மௌவல் விரியும் மணங்கமழ் மான்மாலைத்**
**தௌவன் முதுகுரம்பைத் தான்தமியள் - செல்வன்**
**இறைகாக்கும் இவ்வுலகின் இற்பிறந்த நல்லாள்**
**நிறைகாப்ப வைகும் நிறை"**

மற்ற அகர முதலிகள் "கற்பு=முல்லை" என்று மட்டும் பொருள் எழுதியிருக்க, சாம்பசிவம் பிள்ளை தம் தமிழ் - ஆங்கில அகராதியில், "கற்பு = முல்லைக் கொடி; இது கற்புக்கு அறிகுறியாகும்" என்று பொருள் எழுதியுள்ளார். இது, அவருடைய பரந்த இலக்கிய-இலக்கணப் படிப்பறிவைக் காட்டுகிறது.

முல்லைக்குக் கற்பு என்னும் பெயர், சார்பினால் - தொடர்பினால் வந்ததாகும்.

இந்தக் கட்டுரையால், தமிழரின் ஒருவகைப் பழைய பழக்க வழக்கம் தெரியவரும்.

# 3. குயிலகம்

## (மா மரத்தின் பெயர்கள்)

### 1. சார்பினால் பெற்றவை:

### 1–1 கோகிலவாசம்:

மக்கள் தாம் வாழும் வீட்டிற்கு அகம், மனை, இல்லம், நிலையம், குடில், நிவாசம், விலாசம், வாசம் முதலிய சொற்களில் முடியும் பெயர்களை இட்டு வழங்குவது உலக இயற்கை. அம்மணி என்பவர் வசித்த வீட்டுக்கு 'அம்மணி வாசம்' என்றும், கோவிந்தன் என்பவரின் வீட்டுக்குக் 'கோவிந்த வாசம்' என்றும், இன்ன பிற மாதிரியாகவும் பெயர் வைத்திருப்பதைக் காணலாம்.

மக்களே அன்றி, பறவைகள் தங்கி வாழும் இடத்திற்கும் இத்தகைய பெயர் வைத்திருக்கும் புதுமையைக் கண்டது உண்டா? உண்டு. குயில் வாழும் இடத்திற்குக் 'குயிலகம்' என்று தமிழிலும், 'கோகில வாசம்' என வடமொழியிலும் பெயர் வைக்கலாம். பின்னது, சித்த வைத்திய மருத்துவ அகராதியில் காணப்படுகிறது. கோகிலம் என்றால் குயில்; வாசம் என்றால் வசிக்கும் இடம்; குயில் வசிக்கும் இடம் கோகில வாசம், அது எது? மாமரந்தான் அது! எவ்வளவு அழகிய பெயர்!

### 1–2 கோகிலானந்தம்:

கோகிலத்திற்கு (குயிலுக்கு) ஆனந்தம் (மகிழ்ச்சி) அளிக்கும் இடமாதலின், மாமரத்திற்குக் 'கோகிலானந்தம்' என்னும் பெயரும் உண்டு என்பதாகச் சாம்பசிவம்

பிள்ளையின் தமிழ் - ஆங்கில அகர முதலி அறிவிக்கிறது. மாமரத்திற்கு மேற்கூறிய இரு பெயர்களும் சார்பினால் வந்தவை.

## 2. காலத்தால் பெற்றவை:

### 2-1 வசந்த தூதம்:

நாம், இலக்கிய-வரலாற்று நூல்களில் எத்தனையோ தூதுகளை – தூதுவர்களைப் பற்றிப் படித்திருக்கின்றோம். இராமனுக்காக இராவணனிடத்தில் தூது சென்ற அனுமானுக்கு 'இராம தூதன்' என்னும் பெயர் உண்டு. மக்களுக்கு மட்டுந்தானா தூதுவர் உளர்? காலங்கட்கும் தூதுவர் உண்டு போலும்; இளவேனில் காலம் எனப்படும் வசந்த காலத்துக்கும் தூதுவன் உண்டு. இன்பத்திற்குரிய இளவேனிற் காலம் வருகிறது — வந்து விட்டது என்பதை மக்கட்கு அறிவிக்கும் தூதுவன் மாமரமாம். என்ன வியப்பு; இராமனுக்காக இராவணனிடம் தூது சென்றவன் அனுமான்; வசந்தத்தின் வருகையை மக்கட்கு அறிவிக்கும் தூது, தளிர்த்து - தழைத்து - அரும்பி-பூத்து - காய்த்து - கனிந்து பொலிவுறும் மாமரமாகும். இஃது இளவேனில் காலத்தில் நிகழ்வது. வசந்தம் என்றால் இளவேனில்; அதனால் மாமரத்திற்கு "வசந்த தூதம்" என்னும் பெயர் வழங்கப் பட்டுள்ளது. இதனை ஜூபிலி தமிழ்ப் பேரகராதியில் காணலாம். குயிலுக்கும் வசந்த தூதம் என்னும் பெயர் உண்டென இவ்வகராதி அறிவிக்கிறது.

### 2-2,3 வசந்த தரு - திரு:

மற்றும், வசந்த காலத்தின் சிறப்பு மரம் என்னும் பொருளில் 'வசந்த தரு' என்னும் பெயர், சாம்பசிவம் பிள்ளையின் மருத்துவம்-மரஇயல்-அறிவியல் பற்றிய தமிழ் ஆங்கில அகர முதலியிலும், வசந்த காலத்தின் செல்வம் என்னும் பொருளில் 'வசந்த திரு' என்னும் பெயர் ஜூபிலி

தமிழ்ப் பேரகராதியிலும் மாமரத்துக்கு உரியனவாகக் கூறப் பட்டுள்ளன. மாமரத்திற்கு இப்பெயர்கள் காலத்தினால் ஏற்பட்டவை.

## 3. முப்பொருள் தொடர்பு:

மாமரத்திற்கு உரிய இப்பெயர்களைக் கொண்டு, மூன்று பொருள்கள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பினை அறியலாம். மாமரம், குயில் (கோகிலம்), இளவேனில் (வசந்தம்) என்பனவே அம் முப்பொருள்களாம். இந்த முக்கூட்டுத் தொடர்பு, ஆயிரம்-ஆயிரம் ஆண்டுகளாக இலக்கியங்களில் சிறப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் அழகைக் கீழே முறையே காணலாம்.

### 3 1 இலக்கிய அகச்சான்று:

### 3-1-1 இருபதாம் நூற்றாண்டு:

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாவேந்தர் பாரதி தாசனார், தமது பாடல் ஒன்றில், ''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய முன்னோடியாகிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார், புதுச்சேரி நகரின் அருகிலுள்ள ஒரு மாந்தோப்பில் ஒரு மாமரத்தின் மீது அமர்ந்து பாடிய ஒரு குயிலை அடிப்படையாகக் கொண்டு, ''குயில் பாட்டு'' என்னும் ஒரு சிறந்த இலக்கியத்தையே படைத்துள்ளார். அம்மாந் தோப்பு 'குயில் தோப்பு' என வழங்கப்படுவதும் உண்டு.

### 3-1-2 இடைக் காலம்:

#### அ) கொக்கின்மேல் குயில்:

கி.பி. பதினான்காம் நூற்றாண்டினராகக் கருதப்படும் வில்லிபுத்தூரார் தம் பாரதம் என்னும் பெருநூலில் இதனை வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

**'' கொக்கின் மேல் குயில் கூவும் குளிர் பொழில்''**
**(விராட பருவம் - கீசகன் வதைச் சருக்கம் - 59)**

என்பது அவரது பாடற் பகுதி - மேலோட்டமாகப் பார்க்குங்கால், கொக்கு என்னும் பறவையின் மேல் ஏறிக் கொண்டு குயில் கூவுவதாகப் பொருள் கொள்ளத்தோன்றும். ஈண்டு இருபொருள் நயம் அமைந்துள்ளது. கொக்கு என்பதற்கு மாமரம் என ஒரு பொருள் உண்டு. எனவே, மாமரத்தின் மேல் இருந்து கொண்டு குயில் கூவுவதாக உண்மைப் பொருள் கொள்ள வேண்டும்.

**ஆ) மாரனுக்கு மகுடம்:**

இளவேனிலைப் புனைவு செய்ய (வருணிக்க) எண்ணிய வில்லியார், மற்றோரிடத்தில்,

**'' மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்''**
**(ஆதி பருவம் - சம்பவச் சருக்கம் - 91)**

என்று பாடியுள்ளார். இன்பத்திற்கு உரிய இளவேனிற் காலத்தில், மாரன், (மன்மதன்) மக்கள் மேல் மலர்க்கணை தொடுத்துக் காம உணர்ச்சியைத் தூண்டுவானாம். அவனுடைய ஐந்து மலர் அம்புகளுள் மாம்பூவும் ஒன்றாகும். எனவே, மா பூத்தலால் மன்மதனுக்கு வேலை உளதாயிற்று. இவ்வாறு மாரனுக்கு மகுடம் சூட்டும்படியாக - மாரனது ஆட்சி நடைபெறும்படியாக வசந்த காலம் வந்ததாம்.

**3-1-3 மன்மதக் கணை:**

சினையாகு பெயராக, மன்மதன் கணையாகிய மாம்பூ மாமரத்திற்கு ஆயிற்று. இதனால், 'மன்மதக் கணை' என்னும் பெயர் (சா.சி.பி.) மாமரத்திற்குத் தரப்பட்டது. இது சார்பால் பெற்ற பெயராயினும், கருத்துத் தொடர்பு கருதி இங்கே கூறப்பட்டுள்ளது.

### 3-1-4 கடைக் கழகக் காலம்:

அடுத்து, ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படும் கடைக் கழகக் கால இலக்கியங்கள் சிலவற்றுள் புகுந்து பார்ப்போமே:-

குறுந்தொகை 192:

**" ............... இருங் குயில் பொன்னின்**
**உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை**
**நறுந்தாது கொழுதும் பொழுது**
**வறுங்குரல் கூந்தல் தைவரு வேனே".**

(கருத்து:- "மாம் பூவின் மகரந்தத்தைக் குயில் துழாவும் இந்த இளவேனிற் காலத்தும் தலைவர் வராமையால், சீவி முடிக்காமல் முறுக்கிக் கொண்டிருக்கும் என் கூந்தலை யான் வறிதே தடவிக் கொண்டிருக்கிறேன்" என்று, தலைவனைப் பிரிந்த தலைவி தோழியிடம் கூறுகிறாள்).

அகநானூறு:

**" மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில்**
**படுநா விளியால் நடுநின் றல்கலும்**
**உரைப்ப போல ஊழ்கொள்பு கூவ"** (25)

**" அந்தளிர் மாஅத்து அலங்கல் மீமிசை**
**செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம்**
**இன்னிள வேனில் ........"** (229)

**" குயிலும், தேம்பாய் மாஅத் தோங்குசினை விளிக்கும்**
**.... யாணர் வேனில் மன்னிது".** (341)

**" மாவும் வண்டளிர் ஈன்றன குயிலும்**
**இன்றீம் பல்குரல் கொம்பர் நுவலும்**
**தாதுகு தண்பொழில் அல்கிக் காதலர்**
**செழுமனை மறக்கும் செவ்வி ... ... ...**
**... ... ... வேனில், தானே வந்தன்று!"** (355)

(கருத்து:- குயிற் சேவலும் குயிற் பேடையும் மாம்பூத் தாதினைத் துழவி, நாள்தோறும், தம் நா ஒலியால், பிரிந்த காதலர்க்கு ஏதோ அறிவிப்பது போல, மாறி மாறி முறை போட்டுக் கூவும்.

தளிர்த்த மாங்கிளையில் குயில் அமர்ந்து, நயமான - இனிய தித்திப்பான குரலைப் பல்வகையாக எழுப்பும். காதலர்கள் சோலையில் தங்கித் தம் இல்லத்தையும் மறந்து இன்பப் பொழுது போக்கும் இளவேனில் வந்தது).

நற்றிணை:

**''மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்**
**நறுந்தண் பொழில கானம்''** – *(9)*

**'' அடைகரை மாஅத்து அல்குசினை ஒலிய** . ...
**சேவலொடு கெழீஇய செங்கண் இருங்குயில்**
**புகன்றெதிர் ஆலும் பூமலி காலையும்** . .. ...
**அகன்றோர் மன்றநம் மறந்திசி னோரே''** – *(118)*

**'' ... நாட்பத வேனில்**
**இணர்துதை மாஅத்த புணர் குயில் விளித்தொறும்**
**நம்வயின் நினையும் நெஞ்சமொடு கைம்மிகக்**
**கேட்டொறும் கலுழுமால் நெஞ்சே''** – *(159)*

**'' புணர்ந்தோர் புணர்மினோ என இணர்மிசைச்**
**செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்**
**இன்ப வேனிலும் வந்தன்று''** – *(224)*

**'' அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப்**
**பொதும்புதோ றல்கும் பூங்கண் இருங்குயில்**
**அகறல் ஓம்புமின் அறிவுடை யீரெனக்**
**கையறத் துறப்போர்க் கழறுவ போல**
**மெய்யுற இருந்து மேவர நுவல**
**இன்னா தாகிய காலை''** – *(243)*

**" ……………… ……… மாச்சினை**
**வினைமாண் இருங்குயில் பயிற்றலும் பயிற்றும்" - (246)**

(கருத்து:- தழைத்த மாங்கிளையில் தங்கிச் சேவல் குயிலும் பேடைக் குயிலும் மாறி மாறி ஒலியெழுப்பி ஆரவாரம் செய்யும் இளவேனிற் காலத்தும், நம்மைப் பிரிந்த தலைவர், நம்மை அறவே மறந்தனர் போலும் – எனத் தலைவி வருந்துகிறாள்.

இளவேனிற் காலத்தில், பூங் கொத்துகள் தழைத்துள்ள மாங்கிளையில் இணைந்துள்ள குயில்கள் கூவக் கூவக் கேட்குந் தோறும், நம் தலைவி நம்மை எண்ணி எண்ணி அழுவாளே - எனப் பிரிந்துள்ள தலைவன் வருந்துகிறான்.

இணைந்த காதலர்கள் விரும்பிப் புணர்வீராக என்று கூறுவது போல், மாங் கொத்தின் மீதமர்ந்த பேடைக் குயிலும் சேவற் குயிலும் மாறி மாறி எதிர் குரல் எழுப்பும் இளவேனிற் காலம் வந்துவிட்டது.

தலைவியரை விட்டுப் பிரிய முயலும் தலைவர்களை நோக்கி, அறிவுடைய மக்காள்! நீவிர் பிரியாது இன்பம் துய்ப்பீராக என்று இடித்துரைத்துச் சொல்வது போல, மா மரத்தில் குயிற் சேவலும் பேடையும் மெய்யோடு மெய் பொருந்த இணைந்தமர்ந்து இனிமையாய் ஒலி யெழுப்பும் இளவேனிற் காலம்.)

சிலப்பதிகாரம் காதை 8:

**இறுதி இரு வெண்பாப் பகுதிகள்:-**

1. **" செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக**
**மைந்தார் அசோகம் மடலவிழக்–கொந்தார்**
**இளவேனில் வந்ததால் ……"**

**2. " ஊடினீர் எல்லாம் உருவிலான் றன்ஆணை**
**கூடுமின் என்று குயில் சாற்ற ........."**

சிலம்பு-காதை 26:

**" கொங்கணக் கூத்தரும் கொடுங்கரு நாடரும் .......**
**கருங்கயல் நெடுங்கண் காரிகை யாரோடு**
**இருங்குயில் ஆல இனவண் டியாழ்செய**
**அரும்பவிழ் வேனில் வந்தது வாரார்**
**காதலர் என்னும் மேதகு சிறப்பின்**
**மாதர்ப் பாணி வரியொடு தோன்ற"** (106, 111-115)

(கருத்து: தாமரை மலர, மாங்கொழுந்து தளிர்க்க, அசோகம் அலர இளவேனில் வந்துவிட்டது. ஊடல் கொண்டிருப்பவர் மன்மதன் ஆணைப்படி கூடி மகிழ்க - என்று குயில் கூவி அறிவிக்கிறது.

குயில் பாட, வண்டு யாழ் போல் இசைக்க, மா முதலியவற்றின் அரும்புகள் மலரும் வேனிற் காலம் வந்து விட்டது; ஆனால் இன்னும் நம் காதலர் வரவில்லை. - என்னும் கருத்தமைந்த வரிப் பாணிப் பாடலை, ஆடல் பாடல் வல்ல கொங்கணக் கூத்தரும் கருநாடரும் பாடி யாடினார்.

மேற்கூறியுள்ள நூற் பாடல்களின் துணை கொண்டு, குயிலோடும் வசந்தம் என்னும் இளவேனிலோடும் மாமரத் திற்கு உரிய நெருங்கிய தொடர்பினை விரிவாசு அறியலாம்.

**4. பயனால் பெற்றவை:**

4-1 காதலர் கலந்து மகிழும் இளவேனில் பருவத்தில் பூத்துக் காய்க்கும் மாமரத்தின் பழம், உண்டவர்க்கு (ஆண்மையை - சுக்கிலத்தை) விந்தினைப் பெருக்குமாம்;

அதனை நெடுநேரம் கட்டவும் செய்யுமாம். இதனை, 'அகத்தியர் குண பாடம்' என்னும் நூலில் உள்ள,

**"வேத சத்திய மாக விளம்புவோம்**
**தாது விர்த்திக்கும் தம்பன மாங்கனி"**

என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

எனவே, மாமரத்திற்குக் கோகில வாசம், வசந்த தூதம், வசந்த தரு, வசந்த திரு என்னும் பெயர்கள் வழங்கப்பட்டிருப்பது சாலப் பொருந்தும்.

### 4-2 காமப் பலை:

மற்றும் காமப் பலம் (பலம் = பழம்), காமப் பலை, (பலை = பழம்), காம சாரம், காம ரசம், காமாங்கம் என்னும் பெயர்களும் மாமரத்திற்கு - மாம்பழத்திற்கு உண்டு என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கி உணரத்தக்கது. இப்பெயர்கள், சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் - ஆங்கில அகர முதலியில் கூறப்பட்டுள்ளன. இப்பெயர்கள் பயனால் ஏற்பட்டவை.

### 4-3 மாவின் சிறப்பு:

இளவேனிலில் மாமரத்தில் குயில் தங்கிக் கூவுவதைச் சுவைக்கும் மக்கள், இம் மாமர நிழலில் நாய் படுத்திருப்பதைப் பொறாமல், "நாய் கெட்ட கேட்டுக்கு மாமரத்து நிழலா?" என்னும் பழமொழியைப் படைத்துள்ளனர். இதனாலும், இளவேனிலில் குயில் தங்கிக் கூவும் மாமரத்தின் இனிமைச் சிறப்பு பெறப்படும்.

## 5. சொல் விளையாட்டு

### 5-1 கானக் குதிரை

கானக் குதிரை (சி.வை.அ.) என்னும் ஒரு பெயரும் மாமரத்திற்கு உண்டு. மா என்னும் சொல்லுக்கு உரிய பல

பொருள்களுள் மாமரம், குதிரை என்னும் பொருள்களும் உண்டு. மாமரம் என்னும் பொருளுக்குச் சான்று வேண்டா. குதிரை என்னும் பொருள் உண்மையை,

**"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை"** *(814)*

என்னும் குறளால் அறியலாம். (கல்லா மா = குதிரை) மற்றும், குதிரை என்னும் சொல்லுக்கு 'மாமரம்' என்னும் ஒரு பொருள் ஜூபிலி தமிழ்ப் பேரகராதியில் தரப்பட்டுள்ளது. இது முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலிலும் உளது. கானம் = காடு.

எனவே, நாட்டில் உள்ள (மா) குதிரை என்பது வண்டியிழுக்கும் ஒரு விலங்கு என்பதும், காட்டில் (கானத்தில் சோலையில்) உள்ள குதிரை என்பது மாமரம் என்பதும் புலனாகும். மாமரத்திற்குக் கானக் குதிரை என்னும் பெயர் இடத்தால் வந்ததாயினும், சொல்விளையாட்டும் இதில் உள்ளது.

# 4. தாயைக் கொல்பவன்

தந்தையைக் கொன்றவர்களைப் பற்றிப் புராணக் கதைகளிலும் செய்தித் தாள்களிலும் நிரம்பப் படித்திருக்கலாம். ஆனால், தாயைப் பிள்ளை கொன்ற செய்தி மிகவும் அரிதாகவே இருக்கும்.

**1. தாயைக் கொல்பவர்கள்:**

ஈண்டு, பிள்ளைப் பேற்றின்போது தாய்மார்கள் சிலர் இறந்து போவதால், அவர்களின் இறப்புக்குப் பிள்ளைகளே

காரணம்; ஆதலின் அப்பிள்ளைகள் தாயைக் கொன்றவர்கள் ஆவார்கள் என்று கருத்து கொள்ளலாகாது; சிலர் தவிர, எல்லாத் தாயரும் பிள்ளைப் பேற்றால் இறப்பதில்லை. எல்லாப் பிள்ளைகளுமே தம் பிறப்பால் தாயைக் கொல்வதில்லை.

ஆனால் பிள்ளைகள் பிறந்து பெரியவரானபின், அவர்களால் பெற்றோர்க்கு இறுதி நேரிட்டது போன்ற ஒரு குறிப்பு கம்ப ராமாயணத்தில் காணப்படுகிறது. தன் மகன் இராமன் பிரிந்ததால் தன் கணவன் தசரதன் இறந்தான் என்பதைக் குறிப்பிடும் கோசலை, நண்டு, நாகம், கனி வாழை, வேய் ஆகியவற்றைப் போல், தசரதன் பிள்ளைகளால் இறந்தான்; வேறு நோயாலோ படைக்கலன்களாலோ இறக்க வில்லை என்று கூறினாள். பாடல்: (தசரதன் மோட்சப் படலம்).

**"நோயும் இன்றி நோன்கதிர் வாள்வேல் இவை இன்றி**
**மாயும் தன்மை மக்களின் ஆக மறமன்னன்**
**காயும் புள்ளிக் கற்கடகம் நாகம் கனிவாழை**
**வேயும் போன்றான் என்றுமயங்கா விழுகின்றாள்''** (18)

என்பது பாடல், கற்கடகம் = நண்டு. மற்றும், நீலகேசி என்னும் காப்பியத்தின் உரையில், பின்வரும் பாடல் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது:-

**"புத்தன்தாய் நண்டு இப்பி வாழை புனமூங்கில்**
**கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி – இத்தனையும்**
**வேலாலும் வாளாலும் இன்றியே தாம்கொண்ட**
**சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு''**

இக்கருத்து ஔவையின் நல்வழிப் பாடல் ஒன்றிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**'' நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக்**
**கொண்ட கருவுயிர்க்குங் கொள்கைபோல் —**
**ஒண்டொடிஇ**
**போதம் தனங்கல்வி பொன்றவருங் காலத்தே**
**மாதர்மேல் வைப்பார் மனம்''** (36)

என்பது நல்வழிப் பாடல். அறிவு, செல்வம், கல்வி ஆகியன அழிய இருப்பவர்கள் அயல் பெண்டிர் மீது அவாக் கொள் வதற்கு ஒப்புமையாக, நண்டு, சிப்பி, மூங்கில், வாழை ஆகியன தாம் அழிய இருக்குங் காலத்தில் கருவுயிர்த்தல் எடுத்துக் காட்டப்பட் டுள்ளது.

நாகம் மணி இழந்ததும் அழியும். புத்தரைப் பெற்ற ஏழாம் நாளில் தாய் மாயாதேவி இறந்து விட்டாள். நண்டின் முதுகைப் பிளந்து கொண்டு குஞ்சுகள் வெளிவரு மாம், இவ்வாறு நண்டு குஞ்சு பொரித்தபின் இறந்து விடும். உள்ளேயிருக்கும் முத்தை எடுக்கப் பிளப்பதால் சிப்பி (இப்பி) அழிகிறது. பெரும்பாலான மூங்கில் வகைகள் ஆண்டுகள் பல வாழ்ந்திருந்து ஒரே முறை பூத்துப் பின்பு சிறிது காலத்திற்குள் பட்டுப்போகும். குலை ஈன்றதும் தாய் வாழை மரம் வெட்டப்படும். இத்தகைய அழிவையே பாடல்கள் கூறியுள்ளன. இந்த ஏழனுள், மூங்கிலும் வாழையுமே மரஇனம். இவ்விரண்டிலும், தாயைக் கொல்லும் பழிச் செயலில் வாழையே தலைமை தாங்குகிறது. எனவே, ஈண்டு வாழையை மட்டும் விதந்து எடுத்துக் கொள்ளலாம்.

## 2. தாயைக் கொன்றான்:

அகத்தியரின் பஞ்ச காவிய நிகண்டு - நான்காவது வயித்திய காண்டம்—ஏழாம் பாடலில்,

**'' ....தெளிவான கதலி யென்றும் பேரு,**
**தன்பானத் தாயைக் கொன்றான் என்றும் பேரு,**
**....வளமான சுகரகம் என்றும் வாழையின் பேரே,''**

என வாழைக்குத் 'தாயைக் கொன்றான்' என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றிச் சில அகர முதலிகளும் இவ்வாறு கூறுகின்றன.

சரபேந்திர வைத்திய முறை என்னும் நூலிலும் இப் பெயர் இடம் பெற்றுள்ளது:

**'' தாயைக் கொன்றானை உலர்த்தியே பொடிகள்**
**தான் செய்து சோற்றில் இட்டாலும்**
**தாயகப் புரசம் பட்டையைக் கடாயம்**
**தான் வைத்துப் பருகிடில் தானும்**
**போயிடும் ஈளை .. ''**

என்பது இப்பெயர் வந்துள்ள பாடல் பகுதியாகும்.

இதே பொருளில் 'தாய்க் கொல்லி' என்னும் பெயரும் அகர முதலிகளில் உள்ளன. தாய் வாழை மரம்; சேய் வாழைக் குலை; தாயாகிய மரத்தை வெட்டச் செய்வது சேயாகிய குலையே. குலையாகிய சினையைக் குறிக்க வேண்டிய தாயைக் கொன்றான் என்னும் பெயர் சினையாகு பெயராக முழு வாழை மரத்தையும் குறிக்க லாயிற்று.

2-1 தரைக்குள் இருக்கும் வாழைக் கிழங்கு, பட்டைகளின் தொகுப்பாகிய வாழை மரத்தின் உள்ளே - நடுப் பகுதி வழியாகத் தண்டு என்னும் பெயருடன் மேல்நோக்கி வந்து, இறுதியில் பூவாக வெளிப்படுகிறது. பின்னர்ப் பூ மடல்கள் விரியக் காய்க் குலை தோன்றுகிறது. தரைக்குள் இருக்கும் வாழைக் கிழங்கே, தண்டாகிப் பின்னர்க் குலை யாகித் தாய் மரத்தை வெட்டுவதற்குக் காரணமா

யிருப்பதால், அவ்வாழைக் கிழங்கிற்குத் 'தாய்க் கொல்லிக் கிழங்கு' என்னும் பெயர் சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலியில் தரப்பட்டுள்ளது.

## 2-2 மாபாவி:

தாயைக் கொல்வது, பாவங்கட்குள் எல்லாம் மிகக் கொடிய பாவம் ஆதலின், மாபாவி என்னும் பெயரும் வாழைக்கு உண்டு.

## 2-3 அறமறை:

சாம்ப சிவம் பிள்ளையின் அகர முதலியில் வாழைக்கு 'அறமறை' என்னும் ஒரு பெயர் உரியதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் பெயர்க் காரணம் எளிதில் புலப்பட வில்லை. அறம் = தருமம்; மறை = வேதம் - என்ற அடிப் படையில் பொருள் பண்ணச் சிறிதும் வழியில்லை. அல்லது 'அற' என்று இல்லாமல் 'அர' என்றிருந்தால், பாம்பு என்று பொருள் பண்ணி, பாம்பு மறைந்திருக்கும் மரம் என்று பொருள் கொள்ளலாம். திருநாவுக்கரசருக்கு உணவு படைக்க, அப்பூதியடிகளின் மகன் வாழையிலை அறுக் கையில் வாழை மரத்திலிருந்து பாம்பு கடித்த வரலாறும் இதற்குத் துணை புரியலாம். ஆனால் 'அர' என்றில் லாமல், 'அற' என்றல்லவா உள்ளது? எனவே, இதற்கு வேறு வழியில் பொருள் காணவேண்டும்.

### 2-3-1 முப்பொருள்:

தாயைக் கொன்றான், மாபாவி என்ற பெயர் களை அடிப்படையாகக் கொண்டு, 'அற மறை' என்னும் பெயருக்கு மூன்று வகையான பொருள் செய்ய இடமுண்டு. அவற்றுள் முதலாவது:

**2-3-1-1 முதல் பொருள்:**

அறம் என்றால் நீதி; மறை என்றால் மாறானது-எதிர் மறையானது; அற மறை என்றால் நீதிக்கு மாறான செயல் என்பது பொருள். தாயைக் கொல்லும் மாபாவச் செயல் நீதிக்கும் புறம்பானதுதானே! இரண்டாவது பொருளாவது:

**2-3-1-2 இரண்டாம் பொருள்:**

அறம் என்னும் சொல்லுக்கு 'உள்' என்னும் ஒரு பொருள் உண்டு. 'அறம் புறம்' என்றால் உட்புறம் **(Inner Side)** என்று சில அகர முதலிகள் பொருள் தருகின்றன. மறை என்னும் சொல்லுக்கு மறைவு - மறைந்திருப்பது என்னும் பொருள் உண்டு. எனவே, அற மறை என்பதற்கு உள்ளே மறைந்திருப்பது என்பது பொருளாம், உள்ளே மறைந்திருக்கும் பொருள் தீமை செய்வதாய்த் தான் இருக்கும். வாழை மரத்தை வெட்டு வதற்குக் காரணமான குலை உள்ளே மறைந்திருந்து உரிய நேரத்தில் வெளிப்படுதலால், அதற்கு 'அற மறை' என்னும் பெயர் பொருந்தலாம். இனி மூன்றாவது பொருள் வருமாறு:

**2-3-1-3 மூன்றாம் பொருள்:**

அறம் என்பதற்கு எமன் என்னும் பொருளும் உண்டு. எனவே, கொல்லும் எமன் உள்ளே மறைந்திருக்கும் மரம் வாழைமரம் என்று பொருள் கொள்ளலாம். எமனுக்கு (1) அறம் என்னும் பெயரும் அதன் நேர் வடமொழி வடிவங் களாகிய (2) தருமன், (3) தரும ராசன், (4) எம தருமன், (5) தரும தேவதை முதலிய பெயர்களும் உண்டு. இலக்கிய அகச்சான்றுகள் வேண்டுமா:

**(1) வில்லி பாரதம் - வாரணாவதைச் சருக்கம்:**

**" அறத்தின் மைந்தனுக்கு ஆங்கொரு நாளவைப்**
**புறத்திருந்து புகன்றனன் காவலன்"** *(112)*

*(அறத்தின் மைந்தன் = எமனுடைய மகன்; பாண்டவருள் மூத்தவனாகிய தருமன் எமனுக்குப் பிறந்தவன்; அதனால் அவனுக்கும் தருமன் என்ற பெயர் வழங்கப் பட்டது.)*

**(2) பரிபாடல்:**

**" தாமா இருவரும் தருமனும் மடங்கலும்"** *(3-8)*

*(தருமன் = எமன்; மடங்கல் = அவனேவல் செய்யும் கூற்றம் - பரிமேலழகர் உரை)*

**(3) அப்பர் தேவாரம் - திருக்கடவூர் வீரட்டம்:**

**" மண்ணிடைக் குரம்பை தன்னை**
**மதித்துநீர் மையல் எய்தில்**
**விண்ணிடைத் தரும ராசன்**
**விரும்பினால் விலக்கு வாரார்?** *(2)*

*(தரும ராசன் = எமன்)*

**(4) தாயுமானவர் பாடல் - சிற்சுகோதய விலாசம்:**

**" .. தன்முகத்தில் உயிர் வரவழைக்கும்**
**எம தருமனும் பகடு மேய்க்கியாய்"** *(10)*

**(5) பாரதம் - நச்சுப் பொய்கைச் சருக்கம்:**
**" தனைப் பயந்தநல் தருமதேவதை திருவருளால்...**
**நினைப்பு மெய்தியத் தம்பியர் தம்மையும்**
**நினைந்தான்"** *(47)*

*(தனை என்பது, பாண்டவருள் மூத்தவனாகிய தருமனைக் குறிக்கிறது; தனைப் பயந்த நல் தருமதேவதை என்பது, தருமனின் தந்தையாகிய எமனைக் குறிக்கிறது.)*

பல நிகண்டுகளில் எமனுக்குப் பின்வரும் பெயர்கள் தரப்பட்டுள்ளன:

தருமன் (அறநெறியில் நடப்பவன்), சமன் (எல்லாரிடத்தும் சமமாக நடந்து கொள்பவன்), நடுவன் (நடுவு நிலைமை உடையவன்), செங்கோல் கடவுள் (அறத்தொடு தன் ஆட்சியைப் புரிபவன்).

எமனுக்கு இப்பெயர்கள் ஏற்பட்டதற்குரிய காரணமாவது: யாராயிருப்பினும், அவரவர் வாழ்நாள் (ஆயுள் - விதி) முடிந்ததும், உடலிலிருந்து உயிரைப் பிரித்து விடுவான் என்பதே. இதனை, மணிமேகலையில் உள்ள,

**" தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்**
**ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்**
**முதியோர் என்னான் இளையோர் என்னான்**
**கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப"**

(6 : 97 - 100)

என்னும் பகுதியால் அறியலாம். கொல்லும் தொழில் கொடுந் தொழிலாயினும், எமன், யாவரிடத்தும் நடு நிலைமையுடன்-சமமாகச் செயல்படுவான். தன் வாழ்நாளின் முடிவில் சிவனது திருவுருவச் சிலையைக் கட்டிப் பிடித்துக் கொண்ட மார்க்கண்டன் மீது, சிவனது உருவச்சிலையோடு சேர்த்துப் பிணிப்புக் கயிற்றை வீசி இழுத்தவன் எமன் என்னும் புராணக்கதை ஈண்டு நினைவுகூரத் தக்கது. பாண்டவருள் மூத்தவன் எமனுக்குப் பிறந்தவனாதலின், தருமன், தரும மைந்தன், தரும புத்திரன் எனப்பட்டான்.

இவ்வளவு வழி கடந்து பயணம் செய்தது, தருமம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு நேரான அறம் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு எமன் என்னும் பொருள் உண்டு என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துவதற்கேயாம்.

எனவே, தாய் மரத்தைக் கொல்லும் வாழைக் கிழங்காகிய - வாழைக் குலையாகிய எமன் உள்ளே மறைந் திருப்பதால், வாழைக்கு 'அற மறை' என்னும் பொருள் ஏற்றதாகும்.

இப்பெயர்கள் வாழை மரத்திற்குச் செயலால் ஏற் பட்டவை யாகும்.

(குறிப்பு; 'அறம் மறை' என்பது புணர்ச்சியிலக்கண விதிப்படி 'ம்' கெட்டு 'அற மறை' என்றாயிற்று.)

வாழைக்கு மேற்கூறிய பெயர்களேயன்றி மற்றும் பல பெயர்கள் பல காரணங்களால் தரப்பட்டுள்ளன.

**3. வடிவால் வந்த பெயர்கள்:**

3-1 வாழை பார்ப்பதற்கு மிகவும் அழகான மரமாகும். அதனால் இதற்குத் 'தேவ கன்னி' என்னும் பெயர் உண்டு. தேவ உலகத்தின் அழகிய நாட்டிய மாதர் நால்வருள் அரம்பை என்பாளும் ஒருத்தி, இந்த அரம்பை என்னும் பெயரும் வாழைக்கு உண்டு.

**" துன் அரம்பை நிரம்பிய தொல்வரை**
**துன் அரம்பையர் ஊருவின் தோன்றுமால்"**

என்பது கம்ப ராமாயணம் - வரைக் காட்சிப் படலப் (59) பாடல் பகுதியாகும். முதல் அடியில் உள்ள அரம்பை என்பது வாழை மரத்தைக் குறிக்கும். இரண்டாம் அடியில் உள்ள அரம்பையர் என்பதற்குத் தெய்வ மகளிர் என்பது பொருள். ஊரு என்றால் துடை. மலையில் உள்ள வாழை (அழகாகவும் வழவழப்பாகவும்) தோன்றுகின்றன என்பது இதன் பொருள்.

### 3–2 துடை வாழை:

இதனால், 'துடை வாழை' என்னும் ஒரு பெயரை, துடை என்னும் அடை மொழியொடு சாம்பசிவம் பிள்ளை யின் அகர முதலி அறிவித்துள்ளது. ஈண்டு, நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணி மாலை என்னும் நூலில் உள்ள,

> **''துடைவாழை மேல்மடவா ரல்குல்பாம்பு தொடமயங்கி**
> **நடைவாய்ப் பிணமெனப்பட்டார் பெறுகிலர் நச்சுகுலை**
> **யுடைவாழை மேலுரகந் தீண்ட மாய்ந்த ஒருவனுயிர்**
> **அடைவான் அருள்புரியும் திருநாவுக் கரசினையே''**
> (26)

என்னும் பாடல் எண்ணத் தக்கது. வாழை மரத்தில் இருந்த பாம்பு கடித்ததால் மாண்ட அப்பூதியின் மகனை உயிர் பிழைக்கச் செய்த திருநாவுக்கரசரின் திருவருளை, அயல் மாதரின் துடையாகிய வாழை மரத்தின் மேற்பகுதி யில் உள்ள அல்குலாகிய பாம்பு தீண்டக் காம மயக்குற்று நடைப் பிணமாய்த் திரிபவர் பெற முடியாது என்பது பாடல் கருத்து. ஈண்டு, துடை, வாழையாக உருவகிக்கப் பட்டுள்ளது. இந்த அடிப்படையில், துடை வாழை என்னும் பெயர் தரப்பட்டிருக்கலாம்.

### 3–3 தண்டாயுதம்:

வாழை மரப் பகுதி (வாழைத்தண்டு) பார்ப்பதற்குத் தண்டாயுதம் (தடி, கதை) போன்று இருப்பதால் இதற்குத் 'தண்டாயுதம்' என்ற பெயரும் உண்டு.

### 3–4 யானைக் கொம்பன்:

மொந்தன் வாழையின் பூ, யானைக் கொம்பு (தந்தம்) போல நீண்டு தடித்து வன்மையா யிருப்பதால், மொந்தன்

வாழைக்கு 'யானைக் கொம்பன் வாழை' என்னும் பெயர் தரப்பட்டுள்ளது.

## 4. சார்பினால் பெற்ற பெயர்கள்:

### 4-1 மங்கல ஒப்பனை:

திருமண அரங்குகளில் வாழை மரம் கட்டப்பட்டு மங்கலமாகப் பொலிவு தருதலால் இதற்கு 'மணக்கோலம்' என்ற பெயரும் உண்டு. மற்றும் மங்கலமான இடங்களில் அழகிய ஒப்பனையாக (அலங்காரமாகத்) திகழ்வதால் 'சுந்தர மண்' என்ற பெயரும் வாழைக்கு உண்டு. சுந்தரம் என்றால் அழகு; மண் என்றால் ஒப்பனை (அலங்காரம்).

ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பா மாலையில் உள்ள ''மண் கெழு மறவன்'' (4-15-கொளு) என்னும் பாடல் பகுதிக்கு, மாகறலூர்க்கிழார் சாமுண்டி தேவ நாய்கர் என்பவர் எழுதியுள்ள ''ஒப்பனையாற் பொலிந்த மறத் தொழிலையுடைய வீரன்'' என்னும் உரைப்பகுதி ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. (மண்=ஒப்பனை)

### 4-2. ஆண்டி வாழை:

மலை வாழைக்கு ''ஆண்டி வாழை'' என்னும் பெயர் இடப்பட்டுள்ளது. ஆண்டிகள் (துறவிகள்) வாழும் மலைப் பகுதியில் இருப்பதால் இப்பெயர் பெற்றது போலும். மற்றும், பழநியாண்டி (முருகன்) வீற்றிருப்பதும் (பழநி) மலை தானே! ''சேயோன் மேய மைவரை உலகம்'' என்னும் தொல்காப்பியப் பகுதி (தொல்-பொருள்-5) ஈண்டு இணைத்து எண்ணத்தக்கது.

## 5. பயனால் உற்ற பெயர்கள்:

### 5-1,2 பித்தமும் வாயுவும்:

வாழையால் உண்டாகும் பயன் தொடர்பான பெயர்களுள் 'இரத்த பித்த நாசனி' என்பது ஒன்று. வாழையால்

பித்த நோய் நீங்கும் என மருத்துவ நூல்கள் கூறுகின்றன. மற்றும், வாயுவை (வாதத்தை), மிகுதியாக்குவதால் — வாயுவுக்குத் தானமாய் - இருப்பிடமாயிருத்தலால் 'வாயு தானி' என்ற பெயரும் வாழைக்கு உண்டு. இவற்றிற்குச் சான்றாக, அகத்தியர் குணபாடம் என்னும் மருத்துவ நூலிலுள்ள பாடல் பகுதிகள் சில வருமாறு:-

வாழைக்காய்

**" வாந்தி பித்தம் பேதி...அண்டாவாம்...**
**அம்புவியுள் வாழைக்காய்க் காய்"**
**" காயால் தேக முழுதும் கால்ஆம் தேர்" (கால் = வாயு).**

வாழைப்பழம்

**" பித்தநோ யென்னப் பிறந்தவையும் போம்**
**அரம்பைக் கனிக்கென் றறி".**

இரசத்தாளி வாழைப் பழம்

**" எந்நாளும் வாதமது ஏறி நிற்கும்...**
**கண்ட ரசத்தாளிக் கனியால்".**

கரு வாழைப் பழம்

**" தின்றால் உரிசையுறும் தீராத பித்தமறும்...**
**கருவாழை நற் பழத்தைக் காண்".**

செவ்வாழைப் பழம்

**" எவ் வாத ரோகிக்கும் ஏற்காது எனவகுத்த**
**செவ்வாழை யின்கனியின் சீர்".**

மொந்தன் வாழைப் பழம்

**" ...வாத வலி சீதம் தோன்றுங்காண்...**
**ஒட்டுபித்தங் காமாலை உள்வறட்சியும் தொலையும்**
**நாட்டுமொந் தன்பழத்தி னால்".**

*வெள் வாழைப் பழம்*

**" கூட்டமுறும் வாதத்தைக் கொண்டணைக்கும்...
வெண்வாழைக் கனிக்காம் வகுத்து"**

*அடுக்கு வாழைப்பழம்*

**" மந்தம் கதித்தெழும்பும் மாறாட்டப் பித்தமறும்
.. அடுக்கு வாழைக் கனி".**

*பச்சை வாழைப் பழம்*

**" வெப்ப முடன்பித்த வேதனையைப் போக்கிவிடும்
பச்சைவா ழைப்பழத்தின் பண்பு".**

*நவரை வாழைப் பழம்*

**" வாத கபமும் பெருகும்......நவரை வாழைப்பழத்தால்".**

*பேயன் வாழைப் பழம்*

**" பேயன் பழமருந்திற் பித்தரோ கம்போகும்
வாயுவுண் டாகும் மலங்கழியும்".**

*வாழைப் பிஞ்சு*

**" உதிரம் விழுகடுப்போடு உள்மூலம் ரத்தம் ஏகும்
வாழைக் கச்சற்கு மருண்டு"**

*வாழைப் பூ*

**" வாழைப்பூ மூலரத்த மாபிரமி வெட்டை பித்தம்...
தொலைந்து வளர்க்கும் தாதுவை".**

*வாழை யிலை*

**" பாழை இளைப்புமறும் பன்னுபித்த முஞ்சமனாம்
வாழை யிலைக்குணரு வாய்".**

மேலே தந்துள்ள பாடல் பகுதிகளால், வாழை வகைகள் சில அறியப்படுவதோடு, வாழையால் மூலக் குருதிக் கசிவும் பித்தமும் போகும்; வாதம் பெருகும் என்ற

செய்தியும் அறியப்படும். என்வே, இரத்த பித்த நாசனி, வாயு தானி என்ற பெயர்கள் வாழைக்கு மிகவும் பொருந்து மன்றோ? வாழையிலையில் உண்டாலும் வாயுவின் கூறு காட்டும் என்பர் சிலர்.

## 5-3 வன லட்சுமி:

வாழையால் செல்வம் கிடைப்பதால், வாழையைத் தோட்டத்தில் உள்ள திருமகள் எனலாம். 'வனலட்சுமி' என்னும் பெயரின் கருத்து இஃதே. மங்கலமும் அழகும் உடைமையாலும் இப்பெயர் பொருந்தும்.

## 5-4 உப்பு மூலிகை:

வாழையில் உப்புக் கூறு இருப்பதால் அதற்கு 'உப்பு மூலிகை' என்னும் பெயரும் வழங்கப்பட்டுள்ளது. க. ச. முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூல்—பயிர் வகுப்பு என்னும் நூலில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ள மூன்று பத்திகள் அதில் உள்ளவாறே வருமாறு:-

''வாழைப்பட்டை, சருகு முதலியனவற்றை உலர்த்தி எரிந்த சாம்பலை நீரில் இட்டுத் தெளிவிறுத்திய நீரைக் காய்ச்சின் உப்பாம். இவ்வுப்பு சிறுநீரைப் பெருக்குந்தன்மை யுடையதாம்''.

''வாழைச் சருகு, எள்ளுச் செடி, பனைவேர், புகை யிலை, நாயுருவி இவைகளின் சாம்பல் ஓர் நிறையாகக் கொண்டு மேற்கூறியவாறு செய்யும் உப்பு சாலச் சிறந்த தாகும். இஃது குழந்தைகளுக்கு உண்டாகும் ஈரல் நோய் களைப் போக்கும்; பெருவயிறு, சோகை இவைகளையும் போக்கும்''.

''தண்டு-கிழங்கு; இதை இடித்துப் பிழிந்த இரசத்திற்கு மூத்திரத்தைப் பெருக்கும் செய்கையிருப்பதாலும், இதில் வெடியுப்பின் சத்தும் சேர்ந்திருப்பதாலும், நீர்க் கட்டு, நீர்

எரிவு, இரத்தக் கிரிச்சரம் இவைகளைப் போக்க இதை உபயோகிக்கலாம். நோய் கடினமாயிருந்தால். இதன் இரசத்துடன் வெடியுப்பு, வெங்காரம், படிகாரப் பற்பம் அல்லது சுண்ணம் சேர்த்துக் கொடுக்கலாம். கிழங்கின் இரசத்தினால் வெடியுப்பு மேலான சுத்தி பெறும்'' இதனால், உப்பு மூலிகை என்னும் பெயர்ப் பொருத்தம் அறியப்படும்.

### 5-5 சுக ரகம்:

வாழை பொதுவாக இன்பம் தரும் இனம் ஆதலின், இதற்குச் 'சுக ரகம்' என்னும் பெயரும் உண்டு. இஃது அகத்தியர் நிகண்டில் உள்ளது.

## 6. வாழை வகைகள்:

உலகில் இருநூற்றுக்கு மேற்பட்ட வாழை இனங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சில இனங்களின் பெயர்கள் மேலே தரப்பட்டுள்ளன. இவற்றோடு பூவன் வாழை, கர்ப்பூர வாழை முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். மலையாளத்து நேந்திர வாழை பெயர் பெற்றது. இரசதாளி வாழைக்குப் பறங்கி வாழை என்ற பெயரும் உண்டு. இக்கட்டுரையில் வாழைக்கு உரியனவாகச் சொல்லப் பட்டுள்ள பெயர்களுள், துடை வாழை, வனலட்சுமி என்பன ஜூபிலி தமிழ்ப் பேரகராதியிலும், ஆண்டி வாழை என்பது சித்தவைத்திய அகர முதலியிலும் இடம் பெற்றுள்ளன. நூல் பெயர் குறிப்பிடப்படாத மற்ற பெயர்கள் சாம்பசிவம் பிள்ளை அகர முதலியால் அறிவிக்கப்பட்டவை.

## 7. அந்தோ அளியை!

நெல், கம்பு, கேழ்வரகு, வரகு, தினை, சாமை, சோளம் முதலிய மர இன வகைகளும், கதிர் முற்றியதும் அறுவடை செய்யப்பட்டு அடியோடு அழிக்கப்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் தாயைக் கொல்பவன் என்னும் கெட்ட பெயர் இல்லாமல் இருக்க, வாழைக்கு மட்டும் இந்தக்

கெட்ட பெயர் வந்தது ஏனோ? அவற்றினும் வாழை பெரிய மரமாய் அகழாயிருந்து அழிந்து போவதால் இந்தப் பெயர் ஏற்பட்டதோ! அந்தோ வாழையே நீ அளியை!

**8. மெய்யறிவு ஆசான்:**

சிறார்க்குக் கதை சொல்லும் பெரியவர்கள், இறுதியில், ''வாழாதும் வாழ்ந்து வாழைக் குலை சாய்ந்தார்கள்'' என்னும் தொடரைக் கூறுவது உலகியல். எனது இளம் பருவத்தில் எனக்குக் கதை சொன்ன சிலர், எல்லாக் கதைகளின் இறுதியிலும் இந்தத் தொடரைச் சொன்னதுண்டு,

> **'' துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
> **இறந்தாரை எண்ணிக்கொண் டற்று''** (22)

என்னும் குறட்கு ஏற்ப, உலகில் இருப்பவரினும் இறந்தவர்களே மிகுதி. இறவாமல் எஞ்சியுள்ளோர்க்குச் சாப்பறையாகிய நெய்தல் பறை ஓர் எச்சரிக்கை செய்கிறதாம். சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்படும் பிணத்துக்கு முன்னால் கொட்டப்படும் நெய்தல் பறை, ''ஏ மக்களே! சுடுகாடு என ஒன்று உள்ளது; அனைவரும் என்றைக் காயினும் அங்கே போய்த்தான் தீரவேண்டும் என்பது நினைவிருக்கட்டும்! இதோ போகிறவன் தன்னுடன் கொண்டு செல்வதென்ன! எனவே, பேரவா-பெரும் பற்று வேண்டா! கொடுமைகள் புரியாதீர்கள்'' என்று கூறுவது போல், கேட்பவர்களின் நெஞ்சு நடுங்கும்படி முழங்கப் படுகிறதாம்.

> **'' எஞ்சியோர் மருங்கின் ஈமஞ் சாற்றி**
> **நெஞ்சு நடுக்குறூஉம் நெய்தல் ஓசை''** (6–70,71)

என்பது மணிமேகலைப் பகுதி. இங்கே நெய்தல் பறை, மெய்யறிவு கொளுத்தும் 'ஒரு ஞானாசிரியன்' போல் செயல்படுகிறது. இந்தப் பணியை வாழையும் செய்கிறதாம்,

கதையில் வருபவர்கள் மற்றவர்கள் அடைய முடியாத வாழ்வெல்லாம் வாழ்ந்து, இறுதியில், அழகிய வாழை குலை வெட்டப்பட்டதும் சாய்ந்துவிடுவது போல் சாய்ந்து விட்டார்களாம் - இறந்து போனார்களாம்; எனவே மக்களினம் வாழ்க்கையில் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதையே, ''வாழாதும் வாழ்ந்து வாழைக் குலை சாய்ந்தார்கள்'' என்னும் கதையிறுதித் தொடர் உணர்த்து கிறது. எனவே, வாழையை ஒரு மெய்யறிவு ஆசானாக - ஞானாசிரியனாகக் கூறலாம் அன்றோ! (கதை கேட்ட இளமையில் புரியாதிருந்த இந்தத் தொடர் இப்போது புரிகிறது).

## 5. தாயைத் தாங்கிக் காப்பவன்

1. தாயைக் கொல்பவனைப் பார்த்தோம். இனி இங்கே தாயைத் தாங்கிக் காப்பவனைப் பற்றி ஆய்வு செய்யலாம்:

> **'' சிதலை தினப்பட்ட ஆலமரத்தை**
> **மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்**
> **குதலைமை தந்தைகண் தோன்றின்தான் பெற்ற**
> **புதல்வன் மறைப்பக் கெடும்''.** (197)

என்பது நாலடியார்ப் பாடல். செல்லால் அடி(மரம்)அரித்துத் தின்னப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் தூண்கள் போல் ஊன்றித் தாங்கி நின்று காத்தல் போல, தந்தையிடம் தளர்ச்சி ஏற்படின், அவன் மகனது வளர்ச்சியால் அத் தளர்ச்சி மறைக்கப்பட்டுக் குடி உயரும் என்பது பாடலின் கருத்து.

தாயாகிய அடிபோன ஆல மரத்தை அதன் பிள்ளை யாகிய விழுது தாங்கிக் காப்பதால், ஈண்டும் சினையாகு

பெயராகத் 'தாயைத் தாங்கிக் காப்பவன்' என்பது ஆலமரத்தைக் குறிக்கும்.

வௌவால்கள் தொங்கி வாழ்கிற முதிய ஆலமரங்களை விழுதுகள் காப்பதுபோல், குலம் நையுமாயின், அக்குலத்தில் பிறந்த மற மைந்தர்கள் தங்குலத்தைத் தாங்கிக் காத்தல் கடமையாகும் என்னும் பொருளுடைய

**" தூங்குகிற வாவலுறை தொன்மரங்கள் என்ன**
**ஓங்குகுலம் நையவதன் உட்பிறந்த வீரர்**
**தாங்கல் கடனாகும்".** (498)

என்னும் சீவக சிந்தாமணிப் பாடல் பகுதியும், அடிபோன ஆலமரத்தை விழுது தாங்கல்போல், தன் முன்னோர் மறையவும் நடுங்காது நல்ல புகழுடைய தன் முதுகுலத்தைப் பாண்டியன் பெருவழுதி தழுவிக் காக்கிறான் என்னும் கருத்துடைய

**" முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்**
**கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்**
**தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது**
**நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ......**
**செருமாண் பஞ்சவர் ஏறே நீயே"** (58)

என்னும் புற நானூற்றுப் பாடல் பகுதியும் இங்கே ஒப்பு நோக்கத் தக்கன. குலையாகிய சேய் வெளிப்பட்டதும் தாய் அழியும் வாழைபோல் இன்றி, விழுதாகிய பிள்ளையால் தாயாகிய ஆலமரம் தாங்கிக் காக்கப்படுவது முன்னதற்கு எதிர்மாறாய் உள்ளதன்றோ?

## 2. பெயர்களும் காரணங்களும்:

இனி, இதனை அடிப்படையாகக் கொண்டு, ஆல மரத்தைக் குறிக்கும் பெயர்களையும் அப்பெயர்க் காரணங் களையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம். பல்வேறு

நிகண்டுகளிலும் அகர முதலிகளிலும் ஆலமரத்துக்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ள பெயர்கள் வருமாறு:-

பூதவம், கான் மரம், காமரம், வட மரம், தொன் மரம், பழு மரம், கோளி, நியக்குரோதம், வடம், பூதம், பூத விருக்கம், பூதவிருட்சம், மறி, வனப்பதி, பாலி, பாழ், சிவம், பகுபதம், வானோங்கி, யோசனை யளாவி, வடம் புலி, வட்டம், வட்ட விருட்சம், விழுதிகா, விழுதுடந்தி, விழுது மரம், மால் துயில், பாலின் பஞ்சணை, சம்புச் சயனம், விண்டு தழை, வட விருக்கம், முது மரம், யமப் பிரியம், கந்தகச் சத்துரு, பாரம்பரம், பெருவால், பேரால், பலசிருங்கி, மகா சாயம், ஆல், ஆலம் இன்ன பிறவாம். இனி இவற்றைக் காரண வாரியாகப் பிரித்து விளக்கம் காண்போம்:

## 3. பயனால் பெற்ற பெயர்:

### 3-1 பழுமரம்:

ஆல மரத்தால் பல்வேறு பயன்கள் உண்டெனினும், பயனால் பெற்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள பயனை மட்டுமே இங்கே எடுத்துக்கொள்ள முடியும். ஆல மரத்துக் குப் பழுமரம் என்னும் பெயர் பயனால் வந்ததாகும்.

ஆலமரம் நிரம்பப் பழுக்கும். இதன் பழங்களை வெளவால், பல்வேறு பறவைகள், ஆடுமாடு முதலிய விலங்குகள் ஆகியவை விரும்பி யுண்ணும். மக்களுட் சிலரும் ஆலங்கனிகளை உண்பதுண்டு. ஆலங்கனிகளைப் பறவைகள் மிகுதியாக உண்ணும் என்னும் கருத்து, புறநானூற்றில்,

> **"முன்னூர்ப் பழுநிய கோளி ஆலத்துப்**
> **புள்ளார் யாணர்த் தற்றே"** (254)

என்னும் பாடல் பகுதியில் அமைந்துள்ளது. "ஊர் முன்னர்ப் பழுத்த கோளியாகிய ஆலமரத்தின் கண்

புள்ளுகள் (பறவைகள்) மிகும் புதுவருவாயையுடைய அத்தன்மைத்து'' - என்பது பழைய உரைப்பகுதி. மலைபடுகடாம் என்னும் நூலிலும் இச்செய்தி தரப்பட்டுள்ளது:

**'' கோடுபல முரஞ்சிய கோளி ஆலத்துக்**
**கூடுஇயத் தன்ன குரல்புணர் புள்ளின்நாடு''** (268-69)

என்பது பாடல் பகுதி. கொம்புகள் பலவும் முற்றிய பழத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய ஆலமரத்திடத்தே கூடின பல வாச்சியங்களை ஒத்த பல ஓசையுங் கூடின பறவைத் திரளையுடைய நாடு'' – என்பது நச்சினார்க்கினியரின் உரைப் பகுதி.

**''மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி**
**இரந்தழைப்பார் யாவருமங் கில்லை''** (29)

என்னும் நல்வழிப் பாடற் செய்தியிலும் ஆலமரத்திற்கு நிரம்பப் பங்கு உண்டு.

## 3-2 இலக்கியச் சான்றுகள்:

இனி, பழுமரம் என்னும் பெயருடன் வெளவாலையோ மற்ற பறவைகளையோ இணைத்துக் கூறியுள்ள இலக்கிய அகச் சான்றுகள் சில வருமாறு:-

குறுந்தொகை - 172:

**'' தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்**
**பழுமரம் படரும் பையுள் மாலை''.**

புறநானூறு - 173:

**'' யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன''.**

பொருநராற்றுப் படை - 64:

**'' பழுமரம் உள்ளிய பறவையின்',.**

பெரும்பாணாற்றுப்படை - 20:

**'' பழுமரம் தேரும் பறவை போல''.**

மணிமேகலை - 14 - 26;

**"பழுமரத்து ஈண்டிய பறவையின் எழூஉம்"**

சீவக சிந்தாமணி:

**"புள்பயில் பழுமரப் பொலிவிற்று".** (93)

**"பார்கெழு பழுமரப் பறவை".** (828)

தொல் - களவு - 23 - நச்சினார்க்கினியரின்
மேற்கோள் பாடல் பகுதி:

**"பையுள் மாலைப் பழுமரம் படரிய**
**நொவ்வுப் பறை வாவல் நோன்சிறை".**

இதுகாறுங் கூறியவற்றால், பழுமரம் என்னும் பெயர் ஆல மரத்திற்குச் சாலப் பொருந்தும் என்பது தெளிவு.

**4. காலப் பண்பால் பெற்ற பெயர்கள்:**

**4-1,2 தொன்மையும் முதுமையும்:**

ஆல மரம் சில நூற்றாண்டு காலம் தொடர்ந்து வாழக் கூடியதாதலின், அதற்குத் தொன்மையான - பழமையான மரம் என்னும் பொருளில் 'தொன் மரம்' என்னும் பெயரும், முதிய மரம் என்னும் பொருளில் 'முது மரம்' என்னும் பெயரும் சூட்டப்பட்டுள்ளன. இப்பெயர்களை அறிவிக்கும் இலக்கிய அகச்சான்றுகள் சில வருமாறு:-

**"தூங்குகிற வாவலுறை தொன்மரங்கள் என்ன"**
(சீவக சிந்தாமணி—498)

**"பாய தொன்மரப் பறவைபோல்"**
(திருவிளையாடல் புராணம்—திருநகரப் படலம்—67)

**"கொழுமென் சிறைய கூருகிர்ப் பறவை...**
**பகலுறை முதுமரம் புலம்பப் போகும்"**
(குறுந்தொகை—352)

**"சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை**
**பகலுறை முதுமரம் புலம்பப் போகி"**
(அக நானூறு—244)

**4-3 பாரம்பரம்:**

தொன் மரம், முது மரம் என்னும் பெயர்களை ஒட்டியே, 'பாரம்பரம்' என்னும் பெயரும் ஆலுக்குத் தரப்பட்டுள்ளது. பாரம்பரம் என்றால், பரம்பரை பரம்பரையாக-மரபு வழி மரபு வழியாக நீண்ட காலம் தொடர்ந்திருப்பது என்பது பொருளாம். ஆல மரம் அவ்வாறே புதிய புதிய விழுது களால் வேரூன்றி நூற்றாண்டுக் கணக்கில் நிலைத்துள்ள தன்றோ?

**5. சார்பினால் பெற்ற பெயர்கள்:**

**5-1,2 சிவன் சார்பானவை:**

மங்கள மானதால் 'சிவம்' என்ற பெயரும் புனித மானதால் 'பூதவம்' என்ற பெயரும் ஆலுக்குச் சூட்டப் பட்டிருப்பதாகத் தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் அறிவிக்கப் பட்டுள்ளது. இவ்விரு பெயர்கட்கும் இன்னும் பொருத்த மான காரணம் கூறலாம்.

சிவன் கல்லால மரத்தின்கீழ்த் தென்திசை நோக்கி யமர்ந்து சனகாதி முனிவர் நால்வர்க்கும் மெய்யுணர் வூட்டினார் என்பது ஒரு புராணக் கதை. கல் ஆல் என்பது ஆலின் ஒருவகை. இதனால், ''ஆலமர் செல்வன்'' (3-144) என மணிமேகலையிலும், 'ஆலமர் கடவுள்' எனப் பல நிகண்டுகளிலும், 'கல்லால் நிழல் மேயவன்' எனச் சம்பந்தர் தேவாரத்திலும், இத்தகைய பெயர்கள் இன்ன பிற நூல் களிலும் சிவனுக்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ளன. சிவன் தவக்கோலத்தில் ஆலின்கீழ்த் தரைமீது அமர்ந்து தவ முனிவர்கட்கு மெய்யுணர்வு ஊட்டியுள்ளார். இந்தத்

தொடர்பினால் - பொருத்தத்தினால், ஆலுக்குச் சிவம், பூதவம் என்னும் இரு பெயர்களும் அளிக்கப்பட்டதாகக் கூறலாம் அல்லவா? ஈ(ச்)சுரன் இருக்கும் கோயில் ஈ(ச்)சுரம் எனப்படுதல்போல், சிவன் அமர்ந்த மரம் சிவம் எனப் பட்டது. கல்லால் என்பதற்கு 'வரையால்' என்ற பெயரும் உண்டு.

### 5-3 திருமால் சார்பானவை:

திருமால் ஆலிலைமேல் பள்ளி கொண்டுள்ளார் என்பது ஒரு புராணச் செய்தி. இதற்கு நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலிருந்து சில சான்றுகள் வருமாறு:

**"ஆலிலைப் பாலகனாய் அன்றுலகம் உண்டவனே"** (725)

**"ஆலமா மரத்தின்இலைமேல் ஒரு பாலகனாய்"** (935)

**"ஆலின் நீளிலை நீ கிடந்தாய்"** (2648)

**"ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்"** (3252)

**"ஆல்மேல் வளர்ந்தானை"** (3500)

இன்னும் இவ்வாறு பல காட்டலாம். இதனால் கந்தபுராண ஆசிரியர் திருமாலுக்கும் 'ஆலவன்' என்ற பெயர் அளித்து உள்ளார்.

**"மேலுயர் கண்ணுதல் விமலன் அன்றெனில்,**
**ஆலவன் அன்றெனில், அயனும் அன்றெனில்"** –
(சூரன் அமைச்சியற் படலம் - 43)

ஈண்டு ஆலவன் என்பது திருமாலைக் குறிக்கிறது. இந்தப் புராணச் செய்தியை ஒட்டி, திருமாலின் சார்பாக, ஆலமரத்துக்கு, மால் துயில், பால் துயில் பஞ்சணை, சம்புச் சயனம், என்னும் பெயர்கள் தரப்பட்டுள்ளன. ஆல் இலைக்கு 'விண்டு தழை' என்னும் பெயர் கொடுக்கப்

பட்டுள்ளது. விண்டு=திருமால்; தழை=இலை; திருமால் பள்ளி கொண்ட இலை விண்டு தழையாம். மால் துயில் என்றால், திருமால் துயிலும் இலை மரம். சம்புச் சயனம்= திருமால் (சம்பு) சயனம் (உறக்கம்) கொள்ளும் இலைமரம். இப்பெயர்கள் சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலியில் உள்ளன. பால் துயில் பஞ்சணை என்பதில் உள்ள பால் என்பது, கண்ணனாகிய பாலகனைக் குறிப்பதாயிருக்க வேண்டும். அல்லது மால் என்பது பிழையாகப் பால் என எழுதப்பட்டிருக்க வேண்டும். பஞ்சணை என்பது படுக்கை.

## 5-4 யமப் பிரியம்:

'யமப் பிரியம்' என்னும் பெயர் ஆலுக்கு எவ்வாறு கொடுக்கப்பட்டது என்பது சிக்கலாயுள்ளது. திருவிளை யாடற் புராணத்திலிருந்து ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

முன்னொரு காலத்தில், ஓர் அந்தணன் தன் மனைவி யுடன் திருப்புத் தூரிலிருந்து மதுரைக்குச் சென்றுகொண் டிருந்தான்; வழியில் நீர் வேட்கையுற்ற தன் மனைவியை ஓர் ஆலமரத்தின் கீழே படுக்கச் செய்து தான் நீர் கொணரச் சென்றான். விதிப்படி அப்பெண்ணுக்கு வாழ்நாள் முடிந்து விட்டது. யமன் ஆணைப்படி யமதூதர் இருவர் வந்து, உடல் நலத்துடன் உள்ள அப்பெண்ணைக் கொல்வது எவ்வாறு எனத் திகைத்தனர். அப்போது, ஆலமரத்தின் மேலே தற்செயலாகத் தொற்றிக் கொண்டிருந்த ஓர் அம்பைக் கண்டனர். உடனே யம தூதர்கள் காற்று உண்டாக்கி அம்பை அசையச் செய்து கீழ்நோக்கி அப்பெண்ணின் மேல் வீழ்ந்து தைக்கச் செய்து உயிரைப் பறித்துச் சென்றனர்.

இக்கதையின்படி, யமனது கடமை நிறைவேற ஆலமரம் உகந்ததாயிருந்ததால், அதற்கு 'யமப் பிரியம்' என்ற பெயர்

வழங்கப்பட்டிருக்கலாம் என உயர்த்துணர இடமுள்ளது. இது முடிந்த முடிபு அன்று.

### 5-5 கந்தகச் சத்துரு:

ஆலுக்குக் 'கந்தகச் சத்துரு' என்னும் ஒரு பெயர் சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலியில் உள்ளது. மற்ற பெயர்கட்குக் காரணம்அறிவிக்காத ஆசிரியர் இப்பெயர்க்கு மட்டும் ஒரு சிறு காரண விளக்கம் தந்துள்ளார். அகர முதலிப் பகுதி வருமாறு:—

''கத்தகச் சத்துரு, ஆல், **the banyan tree Ficus Bengalensis. It is supposed to kill the effects of Sulphur''.**

**The banyan tree** என்பது ஆலின் ஆங்கிலப் பெயர்; அடுத்தது மர நூற்பெயர். கந்தகப் பயன் விளைவை ஆல் அழிக்கும் எனக் கருதப்படுவதாக ஆசிரியர் தெரிவித்துள்ளார். ஆனால், ஆலின் எந்த உறுப்பு அவ்வாறு செய்யும் எனக் குறிப்பிடப் படவில்லை. ஒருவேளை ஆலம் பால் அவ்வாறு செய்யுமோ! இஃது அறிந்தார் வாய்க் கேட்டுணர வேண்டியது.

## 6. வடிவால் பெற்ற பெயர்கள்:

வடிவ அமைப்பால் ஆலுக்குப் பல்வேறு பெயர்கள் உள்ளன.

### 6-1 மறி:

'மறி' என்னும் தமிழ்ப் பெயரை ஆசிரிய நிகண்டும், 'நியக் குரோதம்' என்னும் வடமொழிப் பெயரைச் சூடாமணி நிகண்டும் ஆலுக்கு உரியனவாக அறிவித்துள்ளன.

ஏற்குற்றைய இரண்டிற்கும் பொருட் காரணம் ஒன்று எனலாம்.

மறி என்பதற்கு, இயற்கைக்கு மாறாக - முறை மாறி யிருப்பது என்பது பொருளாம். கீழ்மேலாய் இருக்க வேண்டியது மேல் கீழாகவும், மேல்கீழாய் இருக்கவேண்டியது கீழ்மேலாகவும் இருப்பதை மறி எனலாம். பறிப்பது பறி (வழிப்பறி) என்பது போல் மறிப்பது மறியாகும்.

**" வீழ்ந்தனவே மலைபுரையானை மறிந்து"**

என்னும் புறப்பொருள் வெண்பா மாலைப் பாடல் (7-9) பகுதிக்கு, அதன் உரையாசிரியர் தந்துள்ள "மலையை யொத்த ஆனை (ஆனைகள்) கீழ்மேலாய் வீழ்ந்தன" - என்னும் உரைப் பகுதி காண்க. இனி ஆலுக்கு இந்த விளக்கம் பொருந்துமாற்றைக் காண்பாம்.

மர இனங்கள் கீழிருந்துமேல் நோக்கி வளர்வன; ஆனால் ஆலுக்கு, மேலிருந்து கீழ்நோக்கி வளரும் இயல்பு இரண்டு வகையில் உள்ளது.

### 6-1-1 முதல் வகை:

ஈச்ச மரம், பனை மரம் போன்றவற்றில் பறவைகளால் விடப்பட்ட ஆலம் விதை, அம்மரங்களின்மேல் முளைத்துப் பின் கீழ்நோக்கி அம்மரங்களைச் சுற்றிக்கொண்டே வந்து தரைக்குள் வேர் பாயும். இதனால் அம்மரங்கள் கனம் தாங்காமல் அழிந்து விடுவதுண்டு. கட்டடங்களின் மேலும் இவ்வாறு முளைத்துக் கீழ்நோக்கி வருவதுண்டு. இதனால் கட்டடங்கள் இடிந்து விடுவதுண்டு. இவ்வாறு ஒன்றின் மேல் தொற்றி வளரும் மரஞ்செடிகட்கு 'அரைத் தொற்றுச் செடிகள்' (Hemi-epiphytes) என்னும் பெயர் தரப் பட்டுள்ளது. இவ்வாறு ஆல் மேலிருந்து கீழ்நோக்கி வருவது ஒருவகை.

**6-1,2 இரண்டாம் வகை:**

கிளைகளிலிருந்து விழுதுகள் தோன்றிக் கீழ்நோக்கி வளர்ந்து வந்து தரையில் வேர் பாய்ந்து தரையில் உள்ள உணவுப் பொருள்களை எடுத்துக் கொள்ளும். இந்த விழுதுகள் அடிமரத்தினும் வன்மையாயிருக்கும். இவ் வகையிலும் மாறிய தன்மை ஆலுக்கு உண்டு. எனவே, மறி என்னும் பெயர் தக்கதே.

6-2 நியக்குரோதம் என்னும் வடமொழிப் பெயருக்குக் கீழ்நோக்கி வளர்வது என்பது பொருள். எனவே, இப் பெயரும் பொருத்தமே,

**6-3 விழுது மரம்:**

ஆலில் விழுதுகள் மிகுதியாய்த் தோன்றி மரம் பரவச் செய்து காப்பதால், விழுதுமரம், விழுதிகா, விழுதுடந்தி என்னும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

**6-4 பகுபதம்:**

தமிழிலக்கணத்தில் உள்ள பகுபதம் என்பதை அறிந்திருக் கிறோம். இருபொருள் (சிலேடை) அமைய இப்பெயர் ஆலுக்கும் தரப்பட்டுள்ளது. அங்கே பகுபதம் என்பது, பல உறுப்புக்களாகப் பகுக்கக் கூடிய சொல் என்பது பொருள். இங்கே பதம் என்பதற்குக் கால் என்பது பொருள். ஆலமரத்தின் விழுதுகள் தூண்போல் இருந்து மரத்தைத் தாங்கும் கால்களாக உள்ளமையாலும், பல இடங்களிலும் உள்ள விழுதுகளைப் பகுத்துப் பார்க்க முடியு மாதலாலும் பகுபதம் என்னும் பெயர் சாலப் பொருந்தும். இருபொருள் அமைந்த சொல் விளையாட்டும் இதில் உள்ளது.

**6-5 வட்டம்:**

ஆல மரம் தழைத்து வட்ட வடிவமாகத் தோற்றம் அளிப்பதால், வட்டம், வட்டவிருக்கம், வட்ட விருட்சம்

என்ற பெயர்களும் உண்டு. விருக்கம், விருட்சம் என்றால் மரம் ஆகும்.

## 6-6 வடம்:

வடம் என்பதற்கு, படர்ந்து, சூழ்ந்து கவிந்திருப்பது என்று பொருள் செய்யலாம். ஆல் இத்தகைய தோற்ற முடைய தாதலின் வடம், வடமரம், வடம் புலி என்ற பெயர்கள் ஏற்பட்டன. வடம் என்பதற்கு, தாம்பு-கயிறு என்றும் பொருள் உண்டு. விழுதுகள் வடம் போல்-தாம்பாக இருப்பதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறலாம்.

''முக்கணுடன் வடநிழற் கண்ணூடிருந்த குருவே'' (தாயுமானவர் பாடல் கருணாகரக் கடவுள்-1) என்பது இலக்கிய அகச்சான்று.

## 6-7 பூதம்:

பூதம் என்றால் உருவத்தால் பெரியது எனப்பொருள் கொள்ளலாம். மிகவும் பருமனாக இருப்பவரைப் பூதம்போல் இருக்கிறார் எனல் உலகியல். எனவே, தோற்றத்தில் மிகப் பெரியதாயிருப்பதால், பூதம், பூதவிருக்கம், பூதவிருட்சம் என்னும் பெயர்கள் தரப்பட்டன, மிகப்பெரியதாயிருத்தலின் பெருவால் (பெரு ஆல்), பேரால் (பேர் ஆல்) என்றும் பெயர்கள் அடைமொழியொடு வழங்கப்படுகின்றன. பேரால், பேராலின் மரம் என்னும் வழக்குகள் மலையாளத்திலும் உண்டு.

## 6-8 தனிமரம் தோப்பு ஆகுமா?

### 6-8-1 கான்மரம்:

ஒற்றுமையை வலியுறுத்தும் பெரியோர்கள், ''தனிமரம் தோப்பு ஆகாது; பல மரங்களும் சேர்ந்ததே தோப்பு ஆகும்; நாம் பிரிந்து செயல்படக் கூடாது; பலரும் ஒற்றுமையுடன்

சேர்ந்து வாழவேண்டும்'' என்று அறிவுறுத்துவது உலகியல். இதற்கு எதிர்மாறாகத் தனிமரம் தோப்பாவதும் உண்டு.

கான் மரம், காமரம் என்னும் பெயர்கள் நிகண்டு களில் ஆலுக்குத் தரப்பட்டுள்ளன. கான்-கா என்றால் சோலை-தோப்பு என்று பொருளாம். ஓர் ஆல மரமே மிகவும் பரந்து விரிந்து உயர்ந்து ஒரு சோலைபோல்-தோப்பு போல் தோற்ற மளிப்பதால் இப்பெயர்கள் தரப்பட்டன. இதற்குச் சான்றாக, சில ஆலமரங்களின் தோப்புத் தோற்றத்தின் விளக்கம் தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் உள்ளவாறு வருமாறு:

''கல்கத்தா தாவரவியல் தோட்டத்திலுள்ள ஆலமரம், 1782-இல் ஓர் ஈச்ச மரத்தின் முடியில் விழுந்த வித்திலிருந்து முளைத்தது. அதன் மிக நீண்ட விட்டம், கிழக்கு மேற்கில் 300 அடி, தெற்கு வடக்கில் 288 அடி, அடிமரத்தின் சுற்றளவு 57 அடி, முடியின் சுற்றளவு 938 அடி, உயரம் 85 அடி. நிலத்தில் வேரூன்றிய விழுதுகள் 464. அது நிற்கும் நிலப்பரப்பு 1½ ஏக்கர். சத்தாரா (மகாராட்டிரம்) மாவட்டத்தில் வைசத்கர் கிராமத்தில் ஒரு மரம் கி-மே 442 அடி, தெ-வ 595 அடி, முடியின் சுற்றளவு 1587 அடி இருந்தது என்றும், ஏழாயிரம் மக்கள் தங்கக் கூடிய ஒரு மரம் நருமதை யாற்றுத்திட்டு ஒன்றில் இருந்ததென்றும், இருபதினாயிரம் மக்களுக்கு நிழல் தரக்கூடிய மரம் ஆந்திராப் பள்ளத்தாக்கில் இருந்தது என்றும் அறியப்படுகின்றன''.

இது, 1954-இல் வெளியான தமிழ்க்கலைக் களஞ்சியம்-முதல் தொகுதியில் உள்ளது. கல்கத்தா ஆலமரம் இப் போது இன்னும் விரிவடைந்திருக்கலாம். தமிழ்நாட்டில் சென்னை-அடையாறில் உள்ள ஆலமரமும் இங்கே குறிப் பிடத்தக்கது. ஓரளவு மிகப்பெரியதான இந்த ஆலமரம் பலரும் சென்று பார்க்கும் காட்சிப் பொருளாக உள்ளது,

### 6-8-2 கொழு நிழல்

நூற்றுக்கால் மண்டபமும் ஆயிரக்கால் மண்டபமும் போன்ற இத்தகைய ஆலமரங்கள் ஒவ்வொன்றையும் ஒரு தோப்பாகக் கூறலாம் அன்றோ? பேரரசன் ஒருவன் தன் நால்வகைப் படைகளுடன் தங்கும் அளவிற்கு நிழல் தரும் பெரிய ஆலமரத்தைப் பற்றிய செய்தி அதிவீரராம பாண்டியனாரின் வெற்றி வேற்கையில் உள்ள ஒரு பாடலில் உள்ளது.

> **''தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை**
> **தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்**
> **நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை**
> **அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு**
> **மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே''** (17)

என்பது பாடல். ஆல மரத்தின் நிழலை, ''கோளி ஆலத்துக் கொழு நிழல்'' என்று கூறும் புறநானூற்றுப் பாடல் (58) பகுதி இங்கே ஒப்பு நோக்கற் பாற்று. ஆலின் நிழல்கொழுத்த நிழலாம். எனவே, ஆலுக்குக் கான்மரம் என்பது மிகவும் பொருந்தும்.

### 6-8-3 காமரம்;

திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய நிகண்டுகள் கான்மரம் என்னும் பெயரைத் தந்துள்ளன. கான் மரம் என்பதைக் கால் - மரம் எனப்பிரித்து, விழுதுகளாகிய பல கால்களையுடைய மரம் என்றும் பொருள் கொள்ளலாம் போல் தோன்றுகிறது. கயாதர நிகண்டு 'காமரம்' என்று பெயர் தந்துள்ளது, 'கா' என்பதற்குச் சோலை-தோப்பு என்பது பொருள்.

### 6-9 வனப்பதி:

ஆலுக்கு 'வனப்பதி' என்ற பெயரும் உண்டு. ஒரு வனம் போல்-தோப்புபோல் அமைந்திருப்பதால் இப் பெயர் பெற்ற

தாகக் கூறலாம். மற்றும், ஒரு வனத்தின் பதியாக-தலைமை யாக இருக்கக் கூடிய பெரிய மரம் என்றும் பெயர்க் காரணம் கூறலாம்.

## 6-10-11-வானோங்கி-யோசனையளாவி:

நூறடி உயரங்கூட வளரக் கூடியது ஆல் ஆதலின் அதற்கு 'வானோங்கி' என்ற பெயரும் உண்டு. பரப்பையும் உயரத்தையும் அடிப்படையாகக் கொண்டு 'யோசனை அளாவி' என்ற பெயரும் ஆலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. யோசனை என்னும் வழக்கு.

''நாகநன் னாட்டு நானூறு யோசனை'' (9-21) என மணிமேகலையிலும், 'ஒரு நூற்று நாற்பது யோசனை விரிந்த'(25-15) எனச் சிலப்பதிகாரத்திலும் வந்துள்ளது. ஒரு யோசனை என்பது, நான்கு குரோசம் கொண்ட ஒரு நீட்டல் அளவை. ஒரு குரோசம் என்பது, 2000 (இரண்டாயிரம்) தண்டம் கொண்டது என்பதாகச் சொல்லப்படுகிறது. தண்டல் என்பது தண்டத்தால்-தடியால் அளக்கப்படும் ஒரு நீட்டல் அளவை. குரோசம் என்பதற்குக் 'கூப்பிடுதூரம்' என்ற ஒரு பொருளும் கூறப்படுகிறது. யோசனையை விளக்கும் கந்த புராணம்-அண்ட கோசப் படலப் பாடல் வருமாறு:

**''அங்குலம் அறுநான்கு எய்தினது கரம், கரம் ஓர் நான்கு**
**தங்குதல் தனு என்றாகும், தனு இரண்டது ஓர் தண்டம்**
**இங்குறு தண்டமான இராயிரம் குரோசத்து எல்லை,**
**பங்கமில் குரோசம் நான்கு ஓர் யோசனை பால**
**தாமே'' (6)**

24 அங்குலம் கொண்டது ஒரு கரம்; 4 கரம் ஒரு தனு; 2 தனு ஒரு தண்டம்'; இரண்டாயிரம் தண்டம் ஒரு குரோசம்; 4 குரோசம் கொண்டது ஒரு யோசனை.

என்பது பாடல் கருத்து. யோசனை என்பதற்கு நாலடியாரில் ஒரு நல்ல விளக்கம் தரப்பட்டுள்ளது. முரசின் முழக்கம் காதத் தொலைவுக்குக் கேட்டும்; இடியின் முழக்கம் யோசனை தொலைவுக்குக் கேட்டும்; சான்றோர் கொடுத்தார்கள் என்னும் புகழ்ச் சொல் மூன்று உலகத்திற்கும் கேட்கும்-என நாலடியார் நவில்கிறது.

**''கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்**
**இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்**
**அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்**
**கொடுத்தார் எனப்படுஞ் சொல்'' (100)**

என்பது பாடல். காதம் என்பதற்கு, கூப்பிடு தூரம் எனவும் பத்துக்கல் (மைல்) தொலைவு எனவும் பலவாறு பொருள் கூறி அகரமுதலிகள் குழப்புகின்றன, குறுந்தடியால் வன்மையுடன் அடிக்கும் முரசொலி கேட்கும் தொலைவு காதம் என நாலடியார் கூறுகிறது. மற்றும், இடி முழக்கம் கேட்கிற தொலைவு யோசனை எனவும் தெரிவிக்கிறது. இஃது ஒரு வகை அளவை.

எப்படியோ! 'யோசனை அளாவி' என்பதற்கு, மிகவும் ஆழ்ந்து அகன்று-பரந்து விரிந்து-ஓங்கி உயர்ந்த மரம் என்று பொருள் கொள்ளலாம். இஃது ஓர் உயர்வு நவிற்சியாகவும் இருக்கலாமே!

### 6–12 பாழ்:

ஆலுக்குப் பாழ் என்ற பெயரும் உண்டு. பாழ் என்பதற்கு, நாசம், நட்டம், கெடுதி, இழிவு, வீண், அந்தக் கேடு, வெறுமை, இன்மை, ஒன்றும் அற்ற இடம், விளையா நிலம், தரிசு நிலம், குற்றம், ஆகாயம், மூலப் பிரகிருதி, புருடன் (The Soul) என்னும் பதினைந்து பொருள்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழப்பேரகராதியில் தரப்

பட்டுள்ளன. இத்தகைய பொருள்களுடன், ''இலக்கினத்திற்கு எட்டாம் இடம்' என்னும் பொருளையும் ஜூபிலி தமிழ்ப்பேரகராதி தந்துள்ளது. சோதிடத்தில் இலக்கினத்திற்கு எட்டாம் இடம் என்பது அழிவைப் பற்றிய பகுதியாகும். ''அகப்பட்டுக் கொண்டவனுக்கு அஷ்டமத்தில் சனி' என்பது கணிப் பழமொழி. அஷ்டமம் என்றால் எட்டாம் இடமாகும். ஆனால், இவ் வகராதிகள் 'ஆலமரம்' என்ற பொருளைத் தரவேயில்லை. ஆனால் சாம்பசிவம் பிள்ளை தம் அகரமுதலியில் பாழ் என்பதற்கு ஆலமரம் என்னும் பொருளும் தந்துள்ளார்.

அகர முதலிகளில் உள்ள பொருள்களுள், ஆகாயம், மூலப் பிரகிருதி, புருடன் என்பன தவிர, மற்றன கெட்ட பொருளனவாம். இந்த நிலையில், ஆலமரத்திற்குப் பாழ் என்னும் பெயர் தந்திருப்பதன் பொருத்தத்தை எவ்வாறு விளக்குவது?

வானோங்கியிருப்பதால் (ஆகாயம்) விண் என்னும் பொருளின் அடிப்படையில் பாழ் என்னும். பெயர் தரப் பட்டதா? அல்லது, மிகவும் பரந்து விரிந்த இடம் ஒன்றும் விளையாமல் பாழாய்க் கிடக்கிறது (விளையா நிலம்) என்ற அடிப்படையில் இப்பெயர் ஏற்பட்டதா?

கீழே ஒன்றும் விளையா விடினும் நிழல் தருவதால், பாழான-விளையாத நிலம் என்ற பொருள் செய்யவேண்டா. வானோங்கி, யோசனை அளாவி என்னும் பெயர்களின் அடிப்படையிலேயே இங்கே பொருள் செய்தல் நலம். இதற்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழிப்பாடல் பகுதிகள் மூன்று நமக்குத் துணை செய்கின்றன. அவை வருமாறு.

**'' உம்பர் அந்தண் பாழேயோ அதனுள் மிசை**
**நீயேயோ!''** (10-10-4)

" முதல்தனி அங்குமிங்கும் முழுமுற்றுறுவாழ் பாழாய்
முதல்தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த
முடிவி லீயோ" (10-10-9)

" சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ!
சூழ்ந்து அதனில் பெரிய பரநன் மலர்ச் சோதீயோ!
சூழ்ந்து அதனில் பெரிய சுடர்ஞான இன்பமேயோ!
சூழ்ந்து அதனில் பெரிய என் அவா அறச்
சூழ்ந்தாயோ! (10-10-10)

பாடல்களில் உள்ள 'பாழ்' என்பதற்குச் சிலர் மூலப் பிரகிருதி என்பது போல் ஏதேதோ பொருள் செய்யினும், இறைவன் நிறைந்திருக்கும் பரவெளி - விண்வெளி என்று பொருள் செய்தலே பொருத்தம் எனலாம். 'உம்பர் அந்தண் பாழ்' என்பதும், 'சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பாழ்' என்பதும், வெளிப்படையாய் விண்வெளியைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. இறுதிப் பாடலில் உள்ள 'அதனில்' என்பது பாழாகிய பரவெளியைக் குறிப்பது தெரியலாம். அகன்றும் ஆழ்ந்தும் உயர்ந்தும் சூழ்ந்தும் முடிவு இல்லாமல் இருப்பது விண்வெளியே யன்றோ? ஆலமரமும், மிகவும் பரந்து விரிந்தும் ஆழ்ந்தும் உயர்ந்தும் முடிவு இன்றி வானோக்கிச் செல்கிறது என உயர்வு நவிற்சி யாகக் கொள்ளின் 'பாழ்' என்னும் பெயர் அதற்குச் சாலப் பொருந்தும் என்பது தெளிவு.

## 6-13, 14 பாலியும் கோளியும்:

ஆலமரத்தின் விழுதிலும் இலைக் காம்புகளிலும் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் ஒரு விதமான பால் இருப்பதால், ஆல் 'பாலி' என்னும் பெயரும் பெற்றது. பாலை உடையது பாலி.

கோளி என்றால் பூவாது காய்க்கும் மரமாகும். ஆல், அத்திபோலவே பூவாது காய்க்கும் மரமாகும்.

## 6–15 பல சிருங்கி:

சிருங்கம் என்பதற்குக் கொம்பு என்ற பொருள் உண்டு. ஆல் கோம்புபோல் பல விழுதுகளை உடைமையால் பல சிருங்கி என்னும் பெயர் பெற்றது போலும். சிருங்கம் என்பதற்கு முடி-உச்சி என்ற பொருளும் உண்டு. ஒவ்வொரு விழுதுக்கும் ஒரு முடி-ஓர் உச்சி உண்டாதலின், ஆல் 'பல சிருங்கி' என்னும் பெயரைப் பெற்றிருக்கலாம் என்பதும் ஒரு காரணமாயிருக்கலாம்.

## 6–16 மகாசாயம்:

சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலியில் உள்ள மகாசாயம் என்னும் பெயருக்குக் காரணம் தெரிந்திலது. ஆனால் இதற்கும் ஒரு காரணம் கற்பித்துக் கூறலாம். ஒரு வேளை அஃது உண்மையாக இருந்தாலும் இருக்கலாம். 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி' என்றபடி ஆல் ஒரு வகையில் வேலின் நண்பனாகும். மரப் பொருள்கட்கு வண்ணம் (Paint) தீட்டுவோர், வண்ணத்தில் வேலம் பிசினைச் சேர்ப்பதுண்டு. இதனால் அவ்வண்ணம் உறுதி யுடன் நீண்ட நாளைக்கு இருக்கும். எங்கள் வீட்டு வேலைக்கு யானே வண்ணத்துடன் வேலம் பிசினும் வாங்கிக் கொடுத்துள்ளேன். இதுபோல, ஆலம் பாலோ விழுதோ வேரோ வண்ணத்தை (சாயத்தை) உறுதியாக்கி நீண்ட நாள் அழியாமல் இருக்க உதவலாமோ என்னவோ? இஃது உண்மையாயின், ஆலுக்கு 'மகா சாயம்' என்னும் பெயர் பொருந்துவதாகும். இதை இன்னும் வல்லார் வாய்க் கேட்டுணர வேண்டும்.

## 7. ஆங்கிலப் பெயர்

ஆலின் ஆங்கிலப் பெயர் Banyan tree என்பதாகும். பாரசீக வளைகுடாவில் பந்தர் அப்பாசு என்னும் துறை முகத்தின் அண்மையில் இருந்த ஓர் ஆலின் அடியில்,

பனியர் என்னும் இந்து வணிகர் சிலர் கோயில் கட்டி வழி பட்டதனால் அம்மரத்திற்குப் பனியன் என்னும் பெயர் ஏற்பட்டதாக ஒரு செய்தி கூறப்படுகிறது.

## 8. பெயர்களும் நூல்களும்

இனி, ஆலுக்கு உரிய எவ்வெப் பெயர் எவ்வெந்நூலில் கூறப்பட்டுள்ளது என்பதைக் காணலாம்.

முதுமரம் என்னும் பெயர் சங்க இலக்கியத்திலும், மால் துயில் மரம் என்பது சித்த வைத்திய அகர முதலியிலும், வட விருக்கம் என்பது மூலிகை வைத்திய அகர முதலியிலும், பூத விருக்கம் என்பது சங்கத்து அகர முதலியிலும், யமப் பிரியம் - சம்புச் சயனம் என்பன ஜூபிலி தமிழ்ப் பேரகராதியிலும், பகுபதம், பாலி, சிவம் என்பன தமிழ்க் கலைக் களஞ்சியத்திலும்; கான்மரம்-காமரம்-நியக்குரோதம் -மறி - கோளி-வடமரம், தொன்மரம்-பூதவம்-வானோங்கி - ஆல் - ஆலம் - கல்லால் - கல்லாலம் - பூதம் - என்பன பல்வேறு நிகண்டுகளிலும், கந்தகச் சத்துரு - பாரம்பரம் - பாலின் பஞ்சணை, - பாழ் - பேரால் - பெருவால் - மகா சாயம் - மால்துயில் - வரையால் - வடம்புலி - விழுதிகா - விழுதுடந்தி, விழுதுமரம் - யோசனை அளவி - பல சிருங்கி - என்பன சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலியிலும் இடம் பெற்றுள்ளன.

## 9. வாழ்த்து மரம்

ஆலுக்கு 'வாழ்த்து மரம்' என ஒரு பெயர் நாம் புதிதாக வழங்கலாம். பெரியோர்கள் மற்றவரை வாழ்த்து வதற்கு, 'புளிய மரம்போல் வாழ்க - பூவரச மரம்போல் வாழ்க' என வேறு பல மரங்களைப் பயன்படுத்தாமல், ஆலமரத்துடன் இணைத்து வாழ்த்துவது ஒரு மரபு அவ்வாழ்த்து மொழி வருமாறு:-

**" ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழியவே" -**
(புகழேந்திப் புலவரின் அம்மானைப் பாட்டு)

ஆல மரம்போல் தழைக்கவேண்டும். என்றைக்குமே அழிக்க முடியாத அறுகுபோல் வேர் ஊன்றவேண்டும். பூ பூத்ததும் விரைவில் அழிந்துவிடும் மூங்கில்போல் அழியா திருக்கவேண்டும். என்பது இதன் கருத்து.

## 6. தங்கச்சி குவளை

### 1. சொற்பொருள் :

தங்கச்சி குவளை என்றால், தங்கை நீர் பருகும் கலம் (தம்ளர்) என்று பொருள் இல்லை. தங்கச்சி என்னும் சொல்லுக்குக் 'குவளை மலர்' என்னும் பொருள் உண்டு என்பதையே இது குறிக்கும். தங்கை = குவளை என ஜூபிலி தமிழ்ப் பேரகராதியும், தங்கச்சி = குவளை எனச் சாம்பசிவம் பிள்ளையின் தமிழ்-ஆங்கில அகர முதலியும், தங்கைச்சி = குவளை என மூலிகை வைத்திய அகராதியும் சொற்பொருள் கூறியுள்ளன.

குவளை மலருக்குத் தங்கை அல்லது தங்கச்சி என்னும் பெயர் எந்தப் பொருத்தத்தால் கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு எந்த அகர முதலியும் ஒரு சிறு விளக்கமும் தரவில்லை. காரணம் கண்டுபிடிக்கும் வேலையை நம்மேல் சுமத்தி விட்டனர்.

மர இனப் பெயர்கள், தாவரவியல் நோக்கு - மருத்துவ நோக்கு ஆகியவற்றோடு மட்டும் இடப்படவில்லை; இலக்கிய நோக்கு, சமய நோக்கு, புராணக் கதை நோக்கு, வேடிக்கை-

விளையாட்டுச் சுவை நோக்கு ஆகியவற்றோடுங்கூட இடப் பட்டுள்ளன என்பதை ஈண்டு மீண்டும் ஒரு முறை நினைவு கூர வேண்டும். இந்த அடிப்படையுடன், காரணம் காணும் கடமையைத் தொடங்கலாம்.

**2.** குவளைக்குத் தங்கச்சி-தங்கைச்சி-என்னும் பெயர் தரப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். அவை வருமாறு:

**2–1 முதல் காரணம்:**

உமாதேவியின் கையில் நீலோற்பலம் என்னும் குவளை மலர் இருப்பதாகப் புராணக் கதையால் தெரிய வருகிறது. கையில் உள்ளதைக் 'கைச்சி' எனலாம். தம் கையில் உள்ளது 'தங் கைச்சி' யாகும். தம் என்னும் பன்மை உயர்ந்தோரைக் குறிக்கிறது.

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து ஒன்று**
**உண்டாகச் செய்வான் வினை"** (758)

என்னும் குறளில், 'தன் கைத்து' என்பது தன் கையில் உள்ள பொருள் என்னும் பொருளில் இருப்பது காண்க.

**2–1–1 சான்றுகள்:**

உமாதேவியின் கையில் நீலோற்பலமலர் இருப்பதற்கு உரிய சில சான்றுகள் வருமாறு:

சிற்பக் கலை பற்றிய நூல்கள் சில, செய்யுள் நடையில் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. அவற்றில், தேவி கையில் நீலோற்பலம் வைத்திருப்பதாகக் கூறப்பட் டுள்ளது. அஃதாவது, தேவியின் சிலை செய்பவர்கள், தேவி கையில் நீலமலர் வைத்துக் கொண்டிருப்பதாக அமைக்க வேண்டியது கட்டாயம் ஆகும். ஒரு மூன்று சிற்ப

நூல்களில் கிரந்த எழுத்தில் உள்ள பாடற் செய்திகள் சிலவற்றைத் தமிழில் தருவாம்:—

காசியப சில்ப சாத்திரம் — 65 ஆம் படலத்தில், சிவனின் சோமாசுகந்தத் திருமேனியின் இலக்கணம் சொல்லப் பட்டுள்ளது. சிவன் உமையோடும், தமக்கும் உமைக்கும் இடையில் முருகனோடும் வீற்றிருக்கும் தோற்றமே சோமாசுகந்த மேனியாகும். இந்தத் தோற்றத்தில் அடங்கி யுள்ள உமையின் கைகளைப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட் டுள்ளது.

''உமையின் இடக்கை அருள் (வரம்) வழங்கும் தோற்றத் துடனும், வலக்கை நீலோற்பலம் ஏந்தியும் இருக்க வேண்டும் ........ அல்லது, மற்றொரு விதமாகவும் கூறுகிறேன்: இடக்கையை இடப்பக்கத் துடைக்கு வெளிப் பக்கத்தில் அமைக்க வேண்டும். முன்பு கூறியது போலவே, வலக் கையில் நீலோற்பலம் இருக்க வேண்டும்''. (பாடல்: 4, 5)

இந்நூலின் 66 ஆம் படலத்தில் சிவனின் சந்திரசேகரத் திருமேனியின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தேவியுடன் சிவன் தலையில் திங்கள் சூடியிருக்கும் காட்சியிது. இந்தத் தோற்றத்தில் தேவியின் கைகட்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கணமாவது:—

"தேவியின் இடக்கையில் மலர் இருக்கவேண்டும். அல்லது தேவி, சிவன் பக்கத்திலுள்ள தன் வலக்கையில் தாமரை மலரை வைத்துக் கொண்டிருக்கலாம்; அல்லது, நீலோற் பலமும் வைத்துக் கொண்டிருக்கலாம்.'' (61)

இந்நூலின் 71-ஆம் படலத்தில் கல்யாணசுந்தரர் தோற்றம் சொல்லப்பட்டுள்ளது. சிவன் தேவியுடன் திருமணக் கோலத்தில் இருப்பதாகும் இது. இதில் உள்ள தேவியின் திருக்கை யிலக்கணம் வருமாறு:

''தேவியின் அளவுகள் யாவும் முன்பு கூறியது போலவே யாகும். தேவியின் இடக்கையில் நீலோற்பலம் இருக்க வேண்டும். வலக்கையானது சிவனால் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்'' — (6)

சாரசுவதீய சித்ர கர்ம சாத்திரம் என்னும் நூலின் 14-ஆம் பாகத்திலும் சோமாசுகந்தத் தோற்றம் கூறப்பட்டுள்ளது. இதில் உமையின் கையிலக்கணம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

''சிவனது இடப்பக்கம் அமர்ந்திருக்கும் தேவியின் இடக்கை நீண்டும், வலக்கை நீலோற்பலம் தாங்கியும் இருக்க வேண்டும்''.

இந்த நூலில் வேறு இடங்களிலும் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது.

மற்றும், அகத்தியர் என்பவர் அருளியதாகக் கூறப்படும் சகளாதிகாரம் என்னும் நூலிலும் இச்செய்தி பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகாறும் கூறியவற்றால், தாமரையின் தங்கை போன்ற குவளை, தாமரை போன்ற உறுப்புகளை உடைய திருமாலின் தங்கையாகிய உமையின் கையில் இருப்பதால் தங்கைச்சி என்னும் பெயர் பெற்றது என்னும் ஒருவகைப் பெயர்க்காரணம் அறிய வரலாம். இதற்குத் தமிழ் இலக்கியத்திலிருந்து ஒரு சான்று பார்க்கலாமா?

## 2-1-2. தாமரையில் நீலம்

பிரபுலிங்க லீலை — கைலாச கதியில், உமையம்மையின் தோற்றம் ஒவியப்படுத்தப்படும் இடத்தில், அம்மையின் கைத் தோற்றம் பின்வருமாறு பாடப்பட்டுள்ளது:

**'' பறந்திடா மணி வண்டு படுமலர்**
**சிறந்த நீல மலரொடு சீர்பெற ''** (23)

வண்டு என்பதற்குக் கைவளையல் என்னும் பொருளும் உண்டு. வளையலாகிய வண்டு பறக்காது; அதனால் அது, 'பறந்திடா மணி வண்டு' எனப்பட்டது. வளையல் பொருந்திய மலர் என்பது கையாகும். கைக்குத் தாமரை உவமையாக்கப்பட்டிருப்பதை இலக்கியப் பயிற்சி உடையோர் நன்கு அறிவர். வளையல் அணிந்த கையாகிய தாமரை மலர் நீல மலரோடு பொருந்திச் சிறப்புப் பெற்றுள்ளதாம். அதாவது, தேவியின் கையில் நீலோற்பலம் (குவளை) உள்ளதாம். இந்நூலை இயற்றிய சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் அல்லவா? இவ்வாசிரியரின் 'வண்டு படு மலர்' என்னும் தொடரை, ஆதி உலா என்னும் நூலில் உள்ள

"**கைவண்டும் கண்வண்டும் ஓடக் கலையோட.**" (98)

என்னும் பாடல் பகுதியில் உள்ள 'கைவண்டு' என்பதனோடு ஒத்திட்டுக் காண்க.

மக்கட் பெண்டிரும் கையில் குவளை அணிவதாகப் பரிபாடல் நூலில் ஒரு குறிப்பு உள்ளது:

"**பவளவளை செறித்தாட் கண்டணிந்தாள்**
**குவளைப் பசுந்தண்டு கொண்டு**" (11 - 101, 102)

என்பது பாடல் பகுதி. இதற்கு உரிய பரிமேலழகரின் உரைப்பகுதி: "பவள வளையைக் கையிற் செறித்தா ளொருத்தியைக் கண்டு, வேறொருத்தி குவளைப் பூவினது மரகதம் போலும் பச்சைத் தண்டைக் கொண்டு தன் கையை அணிந்தாள்" - என்பதாகும்.

## 2-1-3 இருபொருள் நயம்:

ஈண்டு ஓர் ஐயம் எழுப்பப்படலாம்: குவளை மலரைக் கையில் வைத்திருப்பதால் (தம் + கைச்சி) தங்கைச்சி என்று சொல்லப்படுகிறது. அதே மலர் காதிலும் செருகப்

படுகிறது. இதற்கு இலக்கியச் சான்று பரிபாடலிலிருந்து வருமாறு:

**“ குவளைக் குழைக்காதின் கோலச் செவியின்**
**இவள் செரீஇ** ” (11—98, 99)

பரிமேலழகர் உரை: “குழைக் காதினை யுடைய கோலச் செவிக்கண் குவளையை இவள் செருகி....”

(குழைக்காது என்பது, குழையணிந்த கீழ்க்காதின் தட்டையான பகுதியாகும்; செவி என்பது, குவளை மலரை மேலே செருகி வைக்கும்படியாக உள்ள காதின் மேற்பகுதி யாகும்.)

எனவே, குவளை காதிலும் செருகப்படுவதால், குவளைக்குத் ‘தங்காதுச்சி’ என்ற பெயரும் ஏன் வைக்கக் கூடாது? - என்ற ஐயம் எழலாம். மற்றும், முல்லை தலையில் சூடப்படுவதால், முல்லைக்குத் ‘தந் தலைச்சி’ என்ற பெயர் ஏன் இடக் கூடாது? - என்பன போன்ற ஐயங்களும் எழலாம்.

இவ்வாறு தங்காதுச்சி, தந்தலைச்சி போன்ற பெயர்கள் வைக்கப்படாததற்குக் காரணம், இவற்றிற்கு, தங்கைச்சி என்பதற்கு இருப்பதுபோல் வேறு பொருள் இல்லையே! அஃதாவது, தங்கைச்சி என்பதற்கு உடன்பிறந்தவள் என்ற வேறொரு பொருளும் இருப்பதுபோல் மற்றவற்றிற்கு வேறு பொருள் இல்லை யன்றோ? மர இனப் பெயர் வைப்பில் சொல் விளையாட்டு நிரம்ப இடம் பெற்றிருக்கும் செய்தி ஈண்டு மீண்டும் நினைவு கூரத்தக்கது. தங்கைச்சி என்பது, ஒரு சொல் விளையாட்டுப் பெயராகும்.

### 2·1-4 இடைப் போலி:

ஈண்டு மீண்டும் ஒரு வினா எழலாம். தங்கைச்சி என்பது சரி; ஆனால் தங்கச்சி என்னும் பெயரும் உள்ளமை

எவ்வாறு பொருந்தும்? - என்பதே அந்த ஐய வினா. ஈண்டு, சொல்லின் இடையில், ஐ என்னும் எழுத்திற்கு அ என்னும் எழுத்து ஒத்தொலிக்கும் போலியாக வந்துள்ளது. இலக்கண நூலார் இதனை இடைப் போலி என்பர்.

**" அ ஐ முதல் இடை ஒக்கும் ச ஞ ய முன்"** (123)

என்பது நன்னூல் நூற்பா. சகரத்திற்கு முன் அ-ஐ ஒத்து வந்துள்ளன.

## 2-2 இரண்டாங் காரணம்:

மேலே, கைச்சி என்பதற்கு, கைத்து என்பதுபோல், கையில் உள்ளது எனப் பொருள் கூறப்பட்டது. இதற்குச் சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலி மேலும் துணை புரிகிறது. 'கையிருப்பு' என்பதற்குச் 'செங்குவளை' என்று அதில் பொருள் தரப்பட்டுள்ளது. செங்குவளையோ - கருங்குவளையோ - ஏதோ ஒரு குவளை. ஆக, கையில் இருப்பது குவளை என்பது பெறப்படுகிறது. இங்கே கையிருப்பு என்பதற்கு, 'கையில் இருக்கும் செல்வம்' என்று பொருள் செய்யலாமே!

## 2-2-1 பெரிய கை:

அவர் பெரிய கைகாரர் - இவர் பெரிய கையிருப்பு உடையவர் - அவர் கையில் அவ்வளவு இருக்கலாம் - இவர் கையில் 'இவ்வளவு இருக்கலாம் — என்பன போன்ற உலக வழக்குகள் கையில் உள்ள செல்வத்தையே குறிப்பனவாகும். செல்வம் பையில் இருப்பினும் - பெட்டியில் இருப்பினும் - வேறு எங்கு இருப்பினும் - எந்த வடிவத்தில் இருப்பினும், அவர் பெரிய கைகாரர் – கையிருப்பு உடையவர் - அவர் கையில் அவ்வளவு இருக்கும் - இவ்வளவு இருக்கும் - என்று கூறுதல் மரபு. எல்லாம் கையாலேயே செயல்படுதலின் இவ்வாறு கூறல் மரபாயிற்று.

## 2-2-2 பேரெண்:

இங்கே, கையிருப்பு என்பதற்குச் செல்வம் என்ற பொருள் தரப்படுகிறது. ஐந்து உரூபாயோ பத்து உரூபாயோ, நூறு உரூபாயோ இருநூறு உரூபாயோ, ஆயிரம் உரூபாயோ இரண்டாயிரம் உரூபாயோ உடைய வரைக் கையிருப்பு உடையவர் என்று சொல்வது இல்லை. அளவற்ற செல்வம் உடையவரையே கையிருப்பு உடையவர் எனல் மரபு. இந்தக் காலத்தில், அவர் கையில் பத்து இருக்குமா - இருபது இருக்குமா? - என்று கேட்டால், பத்துக் கோடி உரூபாய் அல்லது இருபது கோடி உரூபாய் பெறுமானமுள்ள செல்வம் இருக்குமா? - என்று கேட்பதாக அதற்குப் பொருளாம். எனவே, கையிருப்பு என்பதற்குப் 'பெருந்தொகை' என்ற பொருள் தன்னில் தானே கிடைக்கும். இந்த அடிப்படையைக் கொண்டு, குவளை என்பதற்குக் கையிருப்பு என்னும் பெயர் சூட்டப்பட்டிருப்பதன் பொருத்தத்தை ஆய்வு செய்யவேண்டும்.

இக்காலத்தில் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், நூறாயிரம் (இலட்சம்), கோடி என்னும் எண்ணுப் பெயர்கள் தமிழில் வழக்காற்றில் உள்ளன. கோடி என்பதனினும் சங்கம் என்பது பெரியது எனச் சிறு பிள்ளைகளும் கூறுவதுண்டு, சங்காதி சங்கம் என்னும் வழக்காற்றைச் சிறு பருவத்திலே கூறியதும் உண்டு-கேட்டதும் உண்டு. ஆனால், தமிழ் நூல்களில், பெரிய பெரிய எண்களைக் 'குறிக்கும் பெயர்கள் உள்ளன என்பதைச் சிறார் அறியார். வெள்ளமோ வெள்ளம் என்னும் எண்ணளவை வழக்காறு பெரியவர்களிடையே உண்டு. இனிப் பரிபாடலில் உள்ள பெரிய எண்ணளவைப் பெயர்களைக் காண்பாம்:-

> **"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்**
> **மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய**
> **செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை...."** (2-13,14,15)

பரிமேலழகர் உரை: ''என்றிவ் வூழிகளானே நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் கமலமும் வெள்ளமும் என எண் குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய காலவீட்டம் கழிந்தபின்....''

நெய்தல், குவளை முதலியன பெரிய எண் அளவைகள் என்பது பரிபாடல் பகுதியால் அறிய வருகிறது. இவற்றுள் சில - பல பெயர்கள், வேறு சங்க இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலுங்கூட இடம் பெற்றுள்ளன. தொல் காப்பியரும் இவற்றைச் சுட்டிச் காட்டியுள்ளார்,

**'' ஐ அம் பல்என வருஉம் இறுதி**
**அல்பெயர் எண்ணும் ஆயியல் நிலையும்''** (394)

என்பது தொல்காப்பிய நூற்பா. ஐ, அம், பல் என முடியும் எண்ணுப் பெயர்களைப் பற்றியது இந்நூற்பா. தாமரை (ஐ), வெள்ளம் (அம்), ஆம்பல் (பல்) என்னும் எண்ணுப் பெயர்களை, எடுத்துக் காட்டுகளாக, இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தத்தம் உரையில் தந்துள்ளனர். 'ஐ' என முடியும் குவளை என்னும் எண்ணுப் பெயரையும் தாமரையோடு சேர்த்துக் கொள்ளலாம். பரிபாடலை அறிந்த உரையாசிரியர்கள் குவளையை விட்டது ஏனோ? இனிச் செய்தியைத் தொடரலாம்.

## 3. சொல் விளையாட்டு:

அவர் கையில் குவளை இருக்கும் என்றால், அவர் பெரிய பணக்காரர் என்று பொருளாம். இதனால் குவளைக்குத் 'தங்கைச்சி' என்னும் பெயர் தரப்பட்டிருக் கலாம். அவ்வாறெனில், நெய்தல், தாமரை, ஆம்பல் ஆகியவற்றிற்கும் 'தங்கைச்சி' என்னும் பெயர் தந்து இருக்கலாமே என்ற வினா எழலாம். கையில் பிடித்திருப்பது குவளை மலர் என்ற சிறப்பும் குவளைக்கு இருப்பதால்,

சொல் விளையாட்டாகக் குவளையை மட்டும் 'தங்கைச்சி' என்றனர் என்க.

தொடக்கத்திலிருந்து இதுகாறும், குவளைக்குத் தங்கைச்சி – தங்கச்சி என்ற பெயர் இடப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. இத்தனை காரணப் பொருத்தம் இருப்பதால் இந்தப் பெயர் வைப்பு சரி என்று கொள்ளலாம். இஃதே முடிந்த முடிபு அன்று. அறிஞர்கள் ஆய்வு செய்து, கொள்ளலாம் அல்லது தள்ளலாம்.

குவளைக்குத் தங்கை, தங்கைச்சி, தங்கச்சி என்னும் பெயர்கள் சார்பினால் வந்தவையாகும். இதனை ஒரு விளையாட்டு வேடிக்கைச் சுவைப் பெயராகக் கொள்ள வேண்டும்.

# 7. இனிக்கும் கசப்பு

## 1. பண்பால் பெற்ற பெயர்கள்:

### 1–1. கசப்பு :

கசப்பு, கைப்பாகன் என்னும் பெயர்கள் சா. சி. பி. அகரமுதலியில் வேம்புக்குத் தரப்பட்டுள்ளன. வேம்பு கசப்புச் சுவை உடைமையால், பண்பு காரணமாக இப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன. கசப்பு என்பதைப் பண்பாகு பெயராக்கிக் கசப்பை உடைய வேப்பமரத்தைக் குறிப்ப தாகக் கொள்ளவேண்டும். கைப்பாகன் என்பதை, கைப்பு+ ஆகன் எனப் பிரித்து, கசப்பு வடிவினன் எனப் பொருள் கொள்ளலாம். கைப்பு = கசப்பு; ஆகம் = வடிவம்.

பிடிக்காத உணவுப் பொருளைப் பற்றி, 'வேப்பங் காயாய்க் கசக்கிறது' என்று கூறுவது மக்கள் வழக்கம்.

வேம்பின் கசப்பு மிகுதியைப் பின்வரும் பாடலால் அறியலாம். (ஒரு தனிப்பாடல்):

**" வேம்புக்குத் தேன்வார்த்தாலும் வேப்பிலையின்**
**கசப்பு மாறா**
**தாம்பல நூல்கற் றாலும்துர்ச்சனர் தக்கோ ராகார் "**

கருத்து: தித்திக்கும் தேன் கலந்தாலும் வேப்பிலையின் கசப்பு மாறாததுபோல், தீயோர் நல்ல நூல்களைக் ற்றாலும் சான்றோர் ஆகார்.

## 1-2. சருக்கரை வேம்பு:

சருக்கரை வேம்பு என்னும் ஒருவகை, வேம்பிலே உண்டு. இதன் இலை சருக்கரை போன்ற இனிப்புச் சுவை உடைமையால், பண்பு காரணமான இப்பெயரைப் பெற்றது. இதுபற்றிய அகத்தியர் குணபாடச் செய்யுள் வருமாறு:

**" காயசித்தி யாகும், கடிய சிலேஷ்மம் அறும்,**
**தூயவிந்து நாதமிவை சுத்தியுமாம் — தூயவருக்கு**
**எத்திக்கும் கிட்டும், இலையருந்தில் வாயெல்லாம்**
**தித்திக்கும் வேம்பதற்குத் தேர் ".**

கருத்து: உடலை உறுதி செய்யும்; ஐயம் (கபம்) போக்கும்; விந்து – நாதங்களைத் தூய்மை செய்யும்; இலையைத் தின்றால் வாயெல்லாம் தித்திக்கும்.

இது தொடர்பாக, முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் தரப்பட்டுள்ள ஓர் அடிக்குறிப்பு வருமாறு :

''சுமார், 1886-87 ஆம் ஆண்டில், சென்னை போர்ட்டு செய்ண்டு ஜார்ஜ் கோட்டை வெளியில், மன்றோ உருவத் திற்கு மேற்புறச் சாலையில் ஒரு மரம் இருந்தது. இம் மரத்தின் இலை இனிப்பாயிருந்ததைக் காண வெகு சனங்கள்

அங்குத் தினந்தோறும் (நாள் முற்றும்) கூடுவதைக் கண்ட அதிகாரிகள் அம்மரத்தை வெட்டிவிட்டார்கள். (க.ச.மு)''—

இதனால், கசக்கும் வேம்பினொடு இனிக்கும் வேம்பும் உண்டென அறியலாம். சருக்கரை வேம்பு என்பதில் உள்ள சருக்கரை என்பது இனிப்பையும், வேம்பு என்பது பொதுவாகக் கசப்பையும் குறிக்குமாதலின், இக்கட்டுரைக்கு, வேடிக்கையாக 'இனிக்கும் கசப்பு' என்னும் பெயர் இடப் பட்டது. இலை தித்தித்தாலும் சருக்கரை வேம்பின் வேறு எப்பாகத்திலாவது சிறிதளவாவது கசப்பு இருக்கலாம்.

## 2. சார்பினால் பெற்ற பெயர்கள்:

### 2-1. கடிப் பகை:

வேம்புக்குக் கடிப்பகை என்னும் ஒரு பெயர் வழங்கப் படுகிறது. இது சார்பு காரணமாக வந்த பெயர். இங்கே, கடி என்றால் பேய். பேய்க்கு வேம்பு பகையாம். வேப்ப மரத்தைப் பேய் அண்டாதாம்.

இவ்வாறே, பேய் அணுகாதிருக்க வேண்டும் என்னும் நோக்குடனும் வேப்பிலை பயன்படுத்தப்படுகிறது. அண்மை யில் பிள்ளை பெற்ற மகளிரின் பக்கலிலும் வேப்பிலை வைப்பதுண்டு. அவர்கள் எழுந்து நடமாடுங்கால் கையில் வேப்பிலைக் கொத்தைப் பிடித்துக் கொண்டிருப்பர். பேய் பிசாசு போன்றவற்றால் கெடுதி நேராமல் வேப்பிலை காக்கும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு மக்கள் செயலாற்று கின்றனர். இதனை மணிமேகலையில் உள்ள

**'' அரவாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை**
**விரவிய மகளிர் ஏந்திய தூமத்துப்**
**புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கம் ''**

(7—73, 74, 75)

என்னும் பகுதி அறிவிக்கிறது.

## 2-2. அரவாய்க் கடிப்பகை:

வெண் சிறு கடுகும் பேய்க்குப் பகையாம்; அதனால் அதற்கும் கடிப்பகை என்னும் பெயர் உண்டு. எனவே, வேம்பையும் வெண்சிறு கடுகையும் வேறுபிரித்துக் காட்டுவதற்காக, வேம்பை 'அரவாய்க் கடிப்பகை' என்றும், வெண்சிறு கடுகை 'ஐயவிக் கடிப்பகை' என்றும் கூறுவர்.

ஐயவி என்றால் வெண்சிறு கடுகாம். வேப்பிலையின் விளிம்பு அரம் போன்ற கூரிய வாய்களை உடைமையால், இதனை 'அரவாய்க் கடிப்பகை' என்பர். 'அரவாய்' என்பது வடிவு காரணமாக வந்தது.

**" அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியல்"** (144)

எனப் பொருநராற்றுப் படையிலும் வேம்பின் அரவாய் விளம்பப்பட்டிருப்பது காண்க, வேப்பிலையின் விளிம்பைப் பார்த்தே, பிற்காலத்தில், 'அரம்' என்னும் இரும்புக் கருவி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கடிப்பகை என்பதற்கு வெண்சிறு கடுகு என்னும் பொருள் உண்மையை, 'மலைபடு கடாம்' என்னும் நூலில் உள்ள

**" தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவிற்**
**கடிப்பகை யனைத்துங் கேள்வி போகா"** (21, 22)

என்னும் பகுதியாலும், சிலப்பதிகாரத்தில் உள்ள,

**" இடிக்கலப் பன்ன ஈரயிர் மருங்கிற்**
**கடிப்பகை காணுங் காட்சிய தாகி"** (6-146, 147)

**" கடிப்பகை நுண்கலும் கவிரிதழ்க் குறுங்கலும்"** (30-57)

என்னும் பகுதிகளாலும், மணிமேகலையில் உள்ள

**" குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற் பெண்டிற் கடிப்பகை எறிந்து
தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவும்''** *(7:57,58,59)*

என்னும் பகுதியாலும் அறியலாம்.

அண்மையில் மகவு ஈன்ற தாயையும் சேயையும் காற்று-கருப்பன் (பேய் - பிசாசு) அண்டாதவாறு, வேப்பிலையோடு வெண்சிறு கடுகையும் பயன்படுத்துவர் என்பதை மணி மேகலைப் பகுதிகளால் அறியலாம்.

### 2-3 அரவுக் கடிப்பகை

அரவு=பாம்பு, பாம்பு கடித்தவர்களின் கடிவாயில் வேப்பிலையால் மந்திரிப்பதால், அரவுக் கடிப்பகை என்னும் பெயரைச் சித்தவைத்திய அகராதி வேப்பிலைக்குத் தந்து உள்ளது போலும். ஒருவேளை, அரவாய் என்பதுதான் அரவு எனத் தவறாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ!

### 2-4 பிடாரி அஞ்சு மரம்

பிடாரி என்பதற்குப் பேய் எனப் பொருள் கொள்ள வேண்டும். பேய் அஞ்சும் மரம் என்பதும் கடிப்பகை என்பதும் கருத்தால் ஒன்றேயாம், பேய்க்குப் பகை என்னில் பேய் அஞ்சுந்தானே!

### 2-5 பிசாசப் பிரியம்

பிசாசப் பிரியம் (மூ. வை. அ, மலை.) பிசாசுப் பிரியம் (சா. சி. பி.), பிசாவப் பிரியம் (சங். அக.), பிசாசவப் பிரியம் (ஜூ) என்னும் பெயர்களும் வேம்புக்குத் தரப்பட்டுள்ளன. பேய்ப் பகை என்னும் பொருளுடைய கடிப்பகை என்னும் கழக இலக்கியப் பெயரோடு இப்பெயர்கள் மாறு படுகின்றன. கடிக்கு-பிசாசுக்குப் பகையாய் உள்ள ஒன்றுக்கு, பிசாசு பிரியப்படும்-மரம் பிசாசு விரும்பும் மரம் என்னும்

பொருளுடைய பிசாசப் பிரியம், என்னும் பெயர்கள் எவ்வாறு பொருந்தும்? இதற்கு வேறு முறையில் தீர்வு காணலாம்.

## 2-6 அப்பிரியம்

பிசாசப் பிரியம் என்பதை, பிசாசு + அப்பிரியம் எனப் பிரிக்கலாம். பிரியம் என்னும் வடசொல்லுக்கு முன்னால், எதிர் மறையைக் குறிக்கும் 'ந' என்பதன் திரிபான 'அ' என்பதைச் சேர்த்தால், பிரியம் இல்லாதது எனப் பொருள் படும். எனவே, பிசாசு விரும்பாத பகைமரம் என்னும் பொருளில் பிசாசு அப்பிரியம் = பிசாசப் பிரியம் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மற்றும், பிசாசவப் பிரியம் என்னும் பெயரையும் இவ்வாறே கொள்ளவேண்டும். அதாவது: பிசாசம் + அப்பிரியம் = பிசாசவப் பிரியம் எனக் கொள்ள வேண்டும். கிரமம் - அக்கிரமம்: ஞானம் - அஞ்ஞானம் என்பன போல, பிரியம் - அப்பிரியம் என்பதையும் கொள்ளவேண்டும். பிசாசவப் பிரியம் என்பதன் திரிபே பிசாவப் பிரியம் என்பது. பிசாசப் பிரியம் என்பதற்குத் தவறான பொருள் கொண்டதால், பிசாசுப் பிரியம் (ச. சி. பி.) என்னும் தவறான பெயர் ஏற்பட்டிருக்கலாம். இப்பெயர்கள் சார்பினால் வந்தவை.

## 2-7 இரவிப் பிரியம்

இரவி என்பதற்கு மலை என்னும் பொருள் உண்டு. மலைப் பாங்கில் நன்றாக வளரும் மலைவேம்புக்கு இரவிப் பிரியம் என்னும் பெயர் (சா. சி. பி.) பொருந்தும். இதனை இடத்தால் பெற்ற பெயராகவோ அல்லது சார்பினால் பெற்ற பெயராகவோ கொள்ளலாம்.

## 2-8 பாண்டியன் தார்

பாண்டிய மன்னர்க்கு வேப்ப மாலை உரித்தாதலின் வேம்புக்குப் 'பாண்டியன் தார்' (சா. சி. பி.) என்னும்

பெயர் சார்பினால் வந்தது. தார் = மாலை, இதே பொருளில் 'மாறன் தார்' என்ற பெயர் தேரன் வெண்பாவில் கூறப்பட்டுள்ளது.

## 2-9 ஆதிசக்தி

ஆதிசக்தி, பராசக்தி (அகத்தியர் பாடல்) என்னும் பெயர்களும் உண்டு, இவை மாரியம்மன் தொடர்பானவை. 'ஆதி சக்தி' என்னும் பெயராட்சி, 'அகத்தியர் பரிபூரணம் நானூறு' என்னும் நூலில்,

**"ஆதி சக்தி தன்னுடைய வேருங் கூட்டி"**

என இடம் பெற்றுள்ளது. ஆதிசக்தி வேர் என்பது வேப்ப மர வேராகும்.

## 2-10 அம்மா பத்தினி:

குப்பை மேனிக்குச் சிவன் பெயரும் பொற்றலைக் கையாந் தகரைக்கு முருகன் பெயரும் வைக்கப்பட்டது போல, வேம்புக்கு அம்மன் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆதி சக்தி, பராசக்தி என்பன போலவே, 'அம்மா பத்தினி' என்பதும் மாரியம்மனைக் குறிப்பதாகும். இது தொடர்பான புராணக் கதை ஒன்றை இங்கே சொல்ல வேண்டும்.

### 2-10-1 இரேணுகை:

சமதக்னி என்பவரின் மனைவி இரேணுகை என்பவள். சமதக்னியைக் கார்த்த வீரியனின் பிள்ளைகள் கொன்று விட்டனர். கணவனை யிழந்த இரேணுகை தீக்குளித்தாள். அப்போது இந்திரன் மழை பெய்வித்துப் பாதியிலேயே தீயை அணைத்துவிட்டான். இரேணுகையின் உடை எரிந்து போயிற்று. உடம்பின்மேல் நெருப்புக் கொப்புளங்கள் நிரம்பத் தோன்றியிருந்தன. இந்த நிலையில் இரேணுகை

வெளியேறிக் காட்டுக்குள் சென்று வேப்பிலைக் கொத்துகளை ஒடித்து உடையாக அணிந்து கொண்டாள்.

இரேணுகை புலையர் தெருவுக்குச் சென்றபோது, அவர்கள் இவளைப் பார்ப்பனப் பெண் என்று கருதிப் பச்சரிசி, மாவு, வெல்லம், இளநீர் ஆகியவற்றை உண்ணக் கொடுத்தனர். வண்ணாரத் தெருவில் உடை கொடுத்தனர்.

இந்நிலையில் சிவன் இரேணுகையை நோக்கி, ''நீ சிற்றூர்களில் அம்மன் தெய்வமாய் அமர்ந்து மக்கட்கு நன்மை புரிவாயாக! உன் உடம்பிலுள்ள கொப்புளங்கள் போல் மக்கள் உடலின்மேல் கொப்புள (அம்மை) நோய் கண்ட போது வேப்பிலையால் அந்நோயைக் குணப்படுத்தச் செய்வாயாக! உன்னைப் போலவே, அம்மை நோய் கண்டவர்கள், மாவு - இளநீர் போன்ற குளிர்ந்த உணவை உண்ணச் செய்வாயாக!'' என்று கூறினாராம். அவ்வாறே சிற்றூர்களில் முத்துமாரியம்மனாக இரேணுகை அமர்ந்தாள். இங்கே முத்து என்பது அம்மைக்கொப்புள முத்தைக் குறிக்கிறது. உலகியலிலும், மக்கள் அம்மைக் கொப்புளத்தை முத்து என்றே கூறுவர். இதனால்தான், மக்கள், வீட்டில் அம்மை கண்டிருக்கும்போது, மாவு இடித்துப் படைத்து வழங்குவதும் நோயாளிக்குக் குளிர்ந்த உணவு தருவதும் வழக்கமாயுள்ளன.

கணவனை யிழந்த இரேணுகை தீக்குளித்ததால் பத்தினித் தெய்வமானாள். இந்தக் கதை இன்னும் பல விதமாகக் கூறப்படுகின்றன.

### 2-10-2 அழியாத பத்தினி:

சில சிற்றூர்களில் அம்மன் கோயில்களைத் திரௌபதியம்மன் கோயில் எனக் கூறுவர். சிலவாக இருந்த திரௌபதியம்மன் கோயில் நாளடைவில் பல சிற்றூர்கட்கும்

பரவின. மாரியம்மன் கோயிலில் நடைபெறுவது போலவே திரௌபதியம்மன் கோயில்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெறலாயின. திரௌபதியும் 'ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி' என்று பத்தினியாகப் பாராட்டப்படுவாள்.

**2-10-3 கடவுள் பத்தினி:**

தமிழ்நாட்டில் திரௌபதியம்மன் கோயில் பரவுவதற்கு முன், கண்ணகி கோயில்கள் நிரம்ப இருந்ததாகவும், நாளடைவில் கண்ணகி கோயில்கள் திரௌபதியம்மன் கோயில்களாக மாறினதாகவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். (சரி, இருக்கட்டும் - ஏதோ ஓர் அம்மன் கோயில்!) கண்ணகி பத்தினிக் கடவுள் - கடவுள் பத்தினி என்றெல்லாம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதும் அவளது கோயில் பத்தினிக் கோட்டம் என அந்நூலில் சொல்லப்பட்டிருப்பதும் அறிந்த செய்தியே.

இதுகாறுங் கூறியவற்றால், எல்லா அம்மன்களும் பத்தினி எனக் கூறப்பட்டுள்ளனர் என அறியலாம். எனவே, தொடர்பு கருதி, வேப்பிலைக்கு ''அம்மா பத்தினி'' என்னும் அம்மன் பெயர் (சா.சி.பி.) சூட்டப்பட்டுள்ளது.

**2-11 முக்கூட்டுத் தொடர்பு:**

மக்கள், அம்மை நோய்க்கும் அம்மனுக்கும் தொடர்பு உண்டாக்கியதின் வாயிலாகவும், வேப்பிலைக்கும் அம்மனுக்கும் தொடர்பு உண்டாக்கியதின் வாயிலாகவும், அம்மை நோய் - வேப்பிலை - அம்மன் ஆகிய மூன்றுக்கும் முக்கூட்டுத் தொடர்பு உண்டாக்கியுள்ளனர்.

**2-11-1. அம்மையும் வேப்பிலையும்:**

அம்மை (Small Pox) வார்க்கச் செய்யும் நுண்ணுயிர்க்கு (கிருமிக்கு) வேம்பு பகை என்பது அறிவியல் உண்மையு

மாகும். மக்கள், அம்மை கண்டிருப்பவரைச் சுற்றி வேப்பிலையைப் பரப்பி வைப்பர்; அவர்களை வேப்பிலை மேல் படுக்க வைப்பதும் உண்டு. வேப்பிலையை அரைத்து அதை அம்மைக் கொப்புளங்களின் மேலும் புண்ணின் மேலும் பூசுவது உண்டு. மற்றும், வீட்டு வெளி முற்றத்தில் வேப்பிலைக் கொத்துகளைச் செருகி வைப்பர். அம்மை கண்டவர் சிறிது இடம் பெயரினும் கையில் வேப்பிலைக் கொத்தைப் பிடித்துச் செல்வர், அம்மைக்கும் மாரியம்மனுக்கும் தொடர்பு உண்டாக்கி மாரியம்மன் சிலையைச் சுற்றி வேப்பிலை கட்டுவது வழக்கம். அம்மனுக்குப் படையல் செய்யும் கூழ்க் கலயத்தைச் சுற்றியும் வேப்பிலை கட்டுவர். வேப்ப மரத்தின் கீழே மாரியம்மன் சிலை வைத்து வழிபடுவதும் உண்டு. வேப்பிலைக்கும் அம்மனுக்கும் உள்ள தொடர்பை மாரியம்மன் தாலாட்டுப் பாடல் நன்கு விளக்குகிறது:

**2-11-2. மாரியம்மன் தாலாட்டுப் பாடல்:**

**" வேப்பிலையும் பொற்காசும் வீதி விளையாடிவரப்
பதினாயிரங் கண்ணுடையாய் பராசக்தி வாருமம்மா!
கத்திபோல் வேப்பிலையைக் கதறவிட்டாய்
லோகமெல்லாம்
ஈட்டிபோல் வேப்பிலையை இனியனுப்பிக்
கொண்டவளே!
வேப்பிலைக் குள்ளிருக்கும் வித்தைகளை யாரறிவார்?
வேணு மென்று காரடிநீ வேப்பஞ் சிலையாளே!
வேம்பு ரதமேறி வித்தகியே வாரு மம்மா!
பச்சிலை ரதமேறிப் பார்வதியே வாரு மம்மா!
வேப்பிலையால் தான்தடவி விசிறி முத்த முழுத்திவிடு.
வேப்பம்பால் உண்டவளே வேதாந்த மாரி முத்தே!
வேப்பிலை பட்ட இடம் வினைகள்பறந்தோடு மம்மா!**

இதுகாறுங் கூறியவற்றால், ஆதிசக்தி, பராசக்தி, அம்மா பத்தினி என்னும் பெயர்கள், மக்களின் நம்பிக்கை என்னும் சார்பினால் வேம்புக்கு ஏற்பட்டவை என்பது புலனாகும். ஈண்டு, வேப்பிலையின் வாடையும் அது கலந்த காற்றும் மிக்க பயன்தரும் என்பது முடிந்த கருத்தாகும்.

## 2-11-3. மருந்துவப் பாடல் சான்றுகள்:

வேம்பு, அம்மைப்புண் முதலிய புண்களை ஆற்றும் என்பதற்கும், பாண்டியன் தார் — மாறன் தார் என்ற பெயர்கள் அதற்கு உண்டென்பதற்கும் உரிய மருத்துவப் பாடல் சான்றுகள் வருமாறு:

### அ) அகத்தியர் குணபாடம்:

**"கிருமி குட்டம் மாந்தம் கெடுவிடஞ் சுரங்கள்**
**பொருமியம சூரிகையின் புண்கள் — ஒருமிக்க்**
**நிம்பத் திலையிருக்க நீடுலகில் நீங்காமல்**
**கம்பத் திலையிருக்கக் காண்"**

கருத்து: வயிற்றுப் புழு, குட்டம், மாந்தம், நச்சுக் காய்ச்சல், அம்மைப் புண், சொறி-சிரங்கு ஆகிய நோய்களை வேப்பிலை குணப்படுத்தும். (நிம்பம் = வேப்பிலை)

### ஆ) தேரன் வெண்பா

**"புந்தியிதைத் தீட்டுவிக்கும் புண்பிணியை ஓட்டுவிக்கும்**
**இந்தியத்தை நன்றா யிசைவிக்கும் — சந்ததமும்**
**விறுண்டாம் கற்ப மிகவுண்டாம் எஞ்ஞான்றும்**
**மாறன்தார் ஐயமில்லா மல்"**

**"பாண்டியன்தா ரோமமுவர் பண்ணியமா கத்துடங்கிப்**
**பாண்டியன்தா ரோமமுவர் பண்ணியதாம்.. ... "**

கருத்து: மனத்தெளிவு தரும்; புண் போக்கும்; வீரியம் உண்டாக்கும்; கற்ப மருந்தாய்ப் பயனளிக்கும். தேரன் பாடல்களில், மாறன்தார், பாண்டியன்தார் என்னும் பெயர்கள் உள்ளமை காண்க. மாறன் = பாண்டியன்.

## 2-12. வண்டி

சருக்கரை வேம்புக்கு வண்டி (சா. சி. பி.) என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சருக்கரை இனிப்புக்காக வண்டுகளைக் கவருவதால் வண்டி என்னும் பெயர் இடப்பட்டிருக்கலாம். கடிப்பகை முதல் வண்டிவரை உள்ள பெயர்களைச் சார்பினால் பெறப்பட்டவை எனலாம்.

## 3. பயனால் பெற்ற பெயர்கள்:

## 3-1. பல் விளக்கு மூலிகை:

ஆலம் விழுது, வேப்பங் குச்சி, கருவேலங் குச்சி, நாயுருவி வேர், பூலா - ஆகிய ஐந்தும் பல் விளக்கு மூலிகைகள் எனச் சித்த வைத்திய அகராதி முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. வேம்பு, வாய் - பல் பகுதி, வயிறு - குடல் பகுதி ஆகியவற்றில் உள்ள நுண் உயிர்களையும் புழுக்களையும் தன் கசப்புத் தன்மையால் கொல்லுமாதலின், வேப்பங் குச்சியால் பல் துளக்குதல் நலம். இதன் கைப்புச் சாறு வாய் - பல் பகுதிகளில் படுவதோடு ஒரு சிறிதேனும் வயிறு - குடல் பகுதிக்கும் செல்லக்கூடும். இப் பயனுக்காக வேப்பங் குச்சியால் பல் துளக்கப்படுதலின், பல் விளக்கு மூலிகை என்னும் பெயர் பயனால் பெற்றதாகும்.

## 3-2. சீர்ண பத்திரம்:

உணவைச் செரிக்கச் செய்வதால், சீர்ண பத்திரம் சீர்ண பர்ணம் என்னும் பெயர்கள் (ஜூபிஸி) இடப்

பட்டுள்ளன. சீர்ணம் - செரிமானம். பத்திரம், பர்ணம் என்னும் சொற்கள் இலை என்னும் பொருளன. முருகேச முதலியாரின் பொருட்பண்பு நூலில், வேம்பின் பயனுள்ள செய்கைகளுள் ஒன்றாகச் செரிமானம் குறிப்பிடப் பட்டுள்ளது. ''பசித் தீத்தூண்டி ஜடராக்னி வர்த்தநி - Stomachie''-என்பது அந்நூற் பகுதி. எனவே, இது பயனால் பெற்ற பெயராகும்.

## 3-3 அருளாசி:

வேம்புக்கும் அம்மனுக்கும் தொடர்புண்டு என்னும் நம்பிக்கையின்படி நோக்கின், வேம்பு, அம்மனின் அருளையும் ஆசியையும் பெற்றுத்தரும் என்றும் அதனால் அருளாசி என்னும் பெயர் (சா. சி. பி) பெற்றதென்றும் கொள்ளலாம். கடவுள் தொடர்பு இல்லாமலேயே, வேம்பு தன்னை உட்கொள்பவருக்கு அருளும் ஆசியும் வழங்கும் - அஃதாவது உடல் நலமும் உறுதியும் நீண்ட வாழ்நாளும் வழங்கும் என்றும் கூறலாம்.

பேய் பிசாசை ஓட்டவும் அம்மை நோயைப் போக்கவும் பயன்படுத்துவதல்லாமல், தேள்கொட்டு, பாம்புக்கடி முதலிய தீங்குகளிலும் காப்பாற்ற மந்திரிப்பவர்கள், வேப்பிலைக் கொத்தை விசிறி உதறி மந்திரிப்பதைக் காணலாம். வேப்பிலையின் வாடை மிக்க பயன் அளிப்ப தாகும். இவ்வாறு பல வகையில் வேம்பு மக்களுக்கு அருட் கொடையாக உள்ளது. வேம்பின் உயரிய பயன்பற்றி, 'போகர் ஏழாயிரம்' என்னும் நூலின் முதல் காண்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பகுதி வருமாறு:

''வேம்பின் இலை, பூ, பட்டை, உட்கட்டை, பிசின் ஆகியவற்றை ஓர் (சம) எடையாகக் கொண்டு பொடி செய்து ஒன்றாகக் கலந்து ஒரு மண்டல (40 நாள்) காலம்,

உப்பு – புளி நீக்கி, காலையும் மாலையும் உட்கொண்டு வரின், வெளுத்த உடல் கருவண்டின் நிறம்போல் பொலிவு பெறும்; உடம்பில் உள்ள மயிர்கள் நிமிர்ந்து நிற்கும்; இருட்டறையில் இருப்பினும் உடம்பு இளஞாயிறு போல் தோற்றமளிக்கும்........... வேப்பிலையைப் பொடி செய்து பசுவின் பாலுடன் கலந்து ஒரு மண்டலம் உட்கொள்ளின், கவன சித்தி, யோக சித்தி முதலிய உயரிய சித்திகள் கைகூடும்'': இது அந்நூலில் உள்ள பாடற் கருத்தாகும், வேம்பின் வாடையே பயனளிக்கும் எனில், அதன் உறுப்புக்களை உட்கொள்ளின் பயனுக்குக் கேட்கவா வேண்டும்?

எனவே, அருளாசி என்னும் பெயர், வேம்புக்குப் பயன் காரணமாகத் தரப்பட்டது எனலாம்.

## 3–4 சூதத்தைச் சணத்தில் கட்டி:

இப்பெயர் சா. சி. பி. அகர முதலியில் உள்ளது. சூதம் = பாதரசம்; சணம் = கணப்பொழுது = நொடிப் பொழுது; கட்டி = கட்டுவது. பாதரசத்தைச் சிறிது நேரத்தில் கட்டச்செய்வதால் வேம்புக்கு இப்பெயர் ஈயப் பட்டது. இதற்கு நூற் சான்றாக, 'போகர் ஏழாயிரம்' என்னும் நூலின் முதல் காண்டத்தில், காய சித்தி என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ள பாடற் கருத்து வருமாறு:

''சருக்கரை வேப்பம் பட்டையால் உப்பும், வேரினால் சூதமும், இலையால் நாகமும் (நாகம் ஓர் உலோகம்), விதைத் தைலத்தால் தாதுவும் கட்டப்படும், காயினால் செம்பு நீராகும்; பிஞ்சின் சாற்றில் இரும்பைப் பழுக்கக் காய்ச்சித் தோய்த்தால் பொன்னாகும்; இரும்பைப் பழுக்கக் காய்ச்சிப் பூச் சாற்றில் தோய்த்தால் செம்பாகும்; காரீயத்தை உருக்கிப் பழச் சாற்றில் கலந்தால் பொன்

னாகும்'', — (குறிப்பு: இச்செய்தி மிகையாகவும் இருக்கலாம்.)

இங்கே, பட்டை, வேர், இலை, விதை, காய், பிஞ்சு, பூ, பழச்சாறு எனப்பட்டவை, சருக்கரை வேம்பினுடையவாகும். இங்கே நமக்கு வேண்டியது, வேரினால் சூதம் கட்டுப்படும் என்ற செய்தியாகும். சூதம் என்பது பாதரசம். இதனால்தான், 'சூதத்தைச் சணத்தில் கட்டி' என்ற பெயர் சருக்கரை வேம்புக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இது பயனால் பெற்ற பெயர்.

## 3-5. ஆகாப் பழமாக்கிய சத்தி:

வேம்புக்கு ஆதிசக்தி, பராசக்தி என்னும் பெயர்கள் உள்ளமை முன்னர்க் கூறப்பட்டுள்ளது. வேப்பம் பழம் மக்கள் உண்ணும் பழம் அன்றாதலின், ஆகாப் பழமாக (உண்பதற்கு உதவாத பழமாக) ஆயிற்று. இதனால் இப் பெயர் (சா.சி.பி.) பெற்றிருக்கலாம்.

## 4. உடற் கூறால் பெற்ற பெயர்:

## 4-1. சாறுவரா மூலி:

சாறு வரா மூலி, சாறு வராத் தழை (சா.சி.பி.) என்னும் பெயர்களும் உண்டு. வேப்பிலை, விளாறியிலை, மூங்கில் இலை ஆகியவற்றை இடித்தாலும் கசக்கிப் பிழிந்தாலும் சாறு வருவதில்லை. அதனால், வேம்புக்குச் சாறு வரா மூலி என்னும் பெயர் உடற்கூறு காரணமாகத் தரப்பட்டுள்ளது.

## 5. பேயும் வேம்பும்:

பேய்க்கு வேம்பு பகை என்னும் பொருளில் முற்காலத்தில் 'கடிப்பகை' என்னும் பெயரும், பிற்காலத்தில் 'பிடாரி அஞ்சுமரம்' என்னும் பெயரும் தரப்பட்டன. ஆனால்

பிற்காலத்தில், பிசாசவப் பிரியம், பிசாசப் பிரியம் என்னும் வடமொழிப் பெயர்கள் வழக்கில் வந்தன. பிசாசம் அப்பிரியம், பிசாசு அப்பிரியம் என இவற்றைப் பிரித்து, பிசாசு பிரியப்படாத மரம் என்பதாக ஒரு பொருள் செய்து முன்னர் அமைதி கூறப்பட்டுள்ளது. ஆனால், பிசாசுப் பிரியம் என்னும் பெயரும் (சா.சி.பி.) உள்ளது. இது தவறுதலாகத்தரப்பட்டிருக்கலாம் என்றும் முன்னர்க் கூறப் பட்டுள்ளது.

இருப்பினும், வேம்போடு பேயை இணைத்துக் கூறும் வழக்கம் உலகியலில் உள்ளது. 'வேப்பமரப் பேய்', 'வேப்ப மரப் பிசாசு' என்பன போன்ற வழக்காறுகள் காதில் விழு கின்றன. இது புரியாத புதிராக உள்ளது.

## 5-1 குப்பை மேனிபோல்:

குப்பை மேனிக்குப் பூனை வணங்கிச் செடி, பூனைப் பகைச் செடி என்னும் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பூனை தன் தோல் நோயைப் போக்கிக் கொள்வதற்காக், குப்பை மேனிச் செடியை விரும்பியே அதன் மேலும் கீழும் விழுந்து புரள்கிறது; இது பார்ப்பதற்குப் போரிடுவது போல் தோன்றுவதால், பூனை அச்செடியை வணங்குகிறது எனவும், அச்செடி பூனைக்குப் பகையெனவும் கற்பனை செய்யப் பட்டுவிட்டது. கடிப்பகை, பிசாசுப் பிரியம் என்னும் முரண் பாடான பெயர்களும் குப்பை மேனிப் பெயர்கள் போன்று இருக்கலாமோ!

## 5-2 கற்பனைப் பொருள்:

பழங்காலத்தில் வேம்புக்குக் கடிப்பகை என்னும் பெயர் இட்டனர். பேய் என்பது இல்லாத கற்பனைப் பொருள், ஏதோ இயற்கையின் ஒரு தீய ஆற்றல் பேயாகக் கற்புனை

செய்யப்பட்டிருக்கலாம். இந்தத் தீய ஆற்றலினின்றும் வேம்பின் வாடை மக்களைக் காக்கலாம். அதனால் கடிப்பகை என்னும் பெயர் தரப்பட்டிருக்கலாம்.

# 8. முருங்கை முதலியார்

## 1 ஊருடைய முதலியார்

முருங்கை மரத்திற்குப் பல்வேறு பெயர்கள் சூட்டப் பட்டுள்ளன. பிரதாப சிங்கன் எழுதிய அமிர்த சாகரம் என்னும் நூலிலும் ஜூபிலி தமிழ்ப் பேரகராதியிலும் 'ஊருடைய முதலியார்' என்றும், மூலிகை வைத்திய அகராதியில் 'ஊருடை முதலி' – 'ஊருடம்' என்றும், சாம்பசிவம் பிள்ளை அகர முதலியில் 'ஊருடன் முதலி' – 'ஊருடன் மூலி' என்றும், வைத்திய மலை யகராதியில் 'ஊருடை' என்றும், சித்த வைத்திய அகராதியில் 'ஊருடை மரம், என்றும் பெயர்கள் வழங்கப் பெற்றுள்ளன.

### 1-1 முதலியார்

'ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு முருங்கை மரமும் ஒரு கறவை மாடும் இருந்தால் போதும்' என்று சொல்லப் படுவதுண்டு. முருங்கையில் பூ, காய், கீரை ஆகியவை உணவுக்கு உதவும். பெரும்பாலும், ஊர் முழுதும் மரம் இருக்கும். சிற்றூர்களில் பல வீடுகளிலும் இருக்கும். முருங்கை ஒரு முதல் பொருள்–மூலதனம் போன்ற பொருள்; ஆதலின் 'ஊருடை முதலியார்' என்னும் பெயர் பெற்றது.

### 1-2 ஊருடை மரம்:

முருங்கை மரம் இல்லாத வீட்டினரும் பிறர் வீட்டு மரங்களில் கீரையும் காயும் எளிதாகப் பெறுவர். வீட்டுக் காரர் மறுக்காது கொடுப்பர். ஊரார் அனைவருக்கும் பயன்

அளிக்கும் மரம் ஆதலின், இது ஊருடை மரம் எனப் படுகிறது. (எங்கள் வீட்டு முருங்கை பலருக்கும் பயன் படுகிறது).

மேற்கூறிய பெயர்கள் முருங்கைக்குப் பயனால் ஏற்பட்ட பெயர்களாகும்.

## 2. முருங்கை – வேர்ச் சொல்

### 2.1 மொரிங்கா – முரிங்ங – முருங்கை:

முருங்கைக்கு, 'மொரிங்கா ஒலெய்ஃபெரா', 'மொரிங்கா டெரிகோஸ்ப் பெர்மா' என்னும் பெயர்கள் மரநூலாரால் (Botanists) தரப்பட்டுள்ளன. எண்ணெய் உடையது என்னும் பொருளுடைய 'ஒலெய்ஃபெரா' என்னும் பெயரும், சிறகு உள்ள விதையுடையது என்னும் பொருளுடைய 'டெரிகோஸ்ப் பெர்மா' என்னும் பெயரும் பின்னால் தனித் தனியே விளக்கப்படும். இவற்றிற்கு முன்னால் உள்ள 'மொரிங்கா' என்பதை ஈண்டு காண்போம்.

மர இன அறிவியலார், 'முரிங்ங' என்னும் மலையாளச் சொல் 'மொரிங்கா' எனத் திரிந்து ஐரோப்பிய மொழி களில் இடம் பெற்றதாகக் கூறுகின்றனர். இதனால், முருங்கை, திராவிட மொழிச் சொல் என்பது புலனாகும். ஆனால், முருங்கை என்னும் தமிழ்ச் சொல்லே, மலையாளத்தில் 'முரிங்ங' எனத் திரிந்தது என்பதை மறக்கக் கூடாது.

பண்டைக் காலத்தில் மலையாளப் பகுதி, சேரநாடு என்னும் பெயருடன் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. பண்டைய சேரநாட்டுத் தமிழ், கொச்சையான பேச்சுத் தமிழும் சமசுகிருதச் சொற்களும் சேர்ந்துவிட 'மலையாளம்' என்னும் தனி மொழிப் பெயர் பெற்றது.

தமிழில் 'ஐ' என்னும் ஒலிப்பில் முடியும் இலக்கியச் சொற்கள், பேச்சு வழக்கில் 'அ' என முடியும் கொச்சைச் சொற்களாக மாறுகின்றன. தமிழில் மழை, காளை தலை என்பன இலக்கியச் சொற்கள்; மழ, காள, தல என்பன கொச்சைப் பேச்சுத் தமிழ்ச் சொற்களாம். மழ, காள, தல என்னும் இந்தக் கொச்சைத் தமிழ்ப் பேச்சு வழக்குச் சொற்களே, மலையாளத்தில் இலக்கியச் சொற்களாம். இந்த அடிப்படையில் முருங்கையை நெருங்க வேண்டும்.

முருங்கை என்பது 'ஐ' யில் முடியும் இலக்கியத் தமிழ்ச் சொல். தமிழர்கள் இதனை 'அ'வில் முடியும் சொல்லாக்கி 'முரிங்க - முரிங்ங' எனக் கொச்சையாக ஒலிக்கின்றனர். 'ரு' என்பதும் 'ரி' எனத் திரிகிறது. நெருங்கி – நெரிங்கி என 'ரு', 'ரி'யாகத் திரிவது காண்க.

இந்தக் கொச்சைப் பேச்சுத் தமிழ் வழக்கே, மலையாளத்தில் 'முரிங்ங' என இலக்கிய வழக்காக ஒலிக்கப் படுகிறது. கய்(கை) என்பதன் ஈற்று 'ய்' ஒலிப்பை விட்டு, 'க' என்பதை மட்டுமே ஒலித்து, ஒலிப்பு முயற்சியைக் குறைப்பது மக்கள் வழக்கம்.

மலையாளத்தில், 'ங்க' என்பது 'ங்ங' (தங்கல்—தங்ஙல்) எனவும், 'ங்கா' என்பது 'ங்ங' (மாங்காய்=மாங்ங) எனவும், 'ங்கி' என்பது 'ங்ஙி' (இடுங்கிய=இடுங்ஙிய) எனவும், 'ங்கு' என்பது 'ங்ஙு' (நடுங்கு=நடுங்ஙு; எங்கு - எங்ஙு) எனவும் திரிந்து வரும். இந்த அடிப்படையிலேயே முருங்கை (முருங்க) என்பது 'முரிங்ங' எனத் திரிந்தது. எனவே, மலையாளத்திலிருந்து தான் முருங்கை வந்தது எனல் தவறு. அங்ஙனமாயின், தங்கல், மாங்காய், தேங்காய் (தேங்ங), இடுங்குதல், நடுங்குதல், எங்கு முதலியனவும் மலையாளத்திலிருந்து வந்தனவாகக் கொள்ளல் வேண்டும். எனவே, மர நூலாரின் (Botanists) கூற்று பொருந்தாது.

யான் எழுதி வெளியிட்டுள்ள 'தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு' என்னும் நூலில் இதுபற்றி இன்னும் விரிவாகக் காணலாம்.

**2-2. முருங்கா-கரடி:**

புத்தமித்திரனார் இயற்றிய வீரசோழியம் என்னும் நூலின் சொல்லதிகாரம் — தத்திதப் படலத்திலுள்ள

**" கூட்டெழுத் தின்பின் யரலக்கள் தோன்றிடிற் கூட்டிடையே**
**ஒட்டெழுத் தாகப் பெறுமொ ரிகாரம்; வவ்வுக்கொ ருவ்வாம்;**
**மீட்டெழுத் துத்தமி ழல்லன போம்வேறு தேயச் சொல்லின்**
**மாட்டெழுத் தும்மித னாலறி மற்றை விகாரத்தினே".**

என்னும் (8 ஆம்) நூற்பாவின் உரையிறுதியில், உரையாசிரியர் பெருந்தேவனார்,

**" முருங்கா என்னும் சிங்களச் சொல் முருங்கை என வந்தவாறுங் கொள்க ".**

என்று எழுதியுள்ளார். அதாவது, முருங்கா என்னும் சிங்களச் சொல்லே முருங்கை என்னும் தமிழ்ச் சொல்லாய்த் திரிந்ததாய்க் 'கரடி' விட்டுள்ளார்; கரடி கற்றவன் இடறி விழுந்தாலும் ஒரு கரடி வித்தையாகும்' என்னும் பழமொழி பெருந்தேவனார்க்கே பொருந்தும்.

முருங்கை என்பது தூய தமிழ்ச் சொல். சுருங்கியது (ஒடுங்கியது-குறுகியது) சுருங்கை (சுரங்கம்) என்பது போல, முருங்குவது முருங்கை. முருங்குதல் என்றால் முரிதல்-ஒடிதல் என்று பொருளாம். இலக்கியச் சான்று:

**மதுரைக் காஞ்சி :**

**" வீங்குபிணி நோன்கயிறு அரீஇ யிதை புடையூக்**
**கூம்பு முதல் முருங்க எற்றி "** (376-7)

நச்சினார்க்கினியர் உரை:- "கூம்பு முதல் முருங்க எற்றி = பாய்மரம் அடியிலே முறியும்படி அடித்து" என்பது, முரிதல் எனினும் முறிதல் எனினும் பொருள் ஒன்றே. நெருங்கு - நெருக்கு என்பன போல, முருங்கு தன்வினை - முருக்கு பிறவினை. முருங்குதல் - ஒடிதல்; முருக்குதல் - ஒடித்தல். முருக்குதலுக்கும் இலக்கியச் சான்று வேண்டுமா?

**புறநானூறு :**

**" கடுங் கண்ண கொல் களிற்றால்**
**காப்புடைய எழு முருக்கி "** (1-2)

பழைய உரை: "வன் கண்மையை யுடைய கொலை யானையாலே காவலையுடைய கணைய மரத்தை முறித்து"-

எனவே, முருங்குவது (ஒடிவது) முருங்கை என்னும் பெயர்க் காரணம் தெற்றென விளங்கும். முருங்கை, எளிதில் ஒடியக் கூடியது-சிறு காற்று அடித்தாலும் ஒடியக் கூடியது-பூ, காய் ஆகியவற்றின் சுமை தாங்காமல் ஒடியக் கூடியது-கீரையையோ, காயையோ ஒடிக்கும்போதே ஒடியக்கூடியது - முருங்கைக் கீரையைப் பறித்தல் அல்லது அறுத்தல் என்று சொல்லுவதில்லை; முருங்கைக் கீரை ஒடித்தல் என்று சொல்லுவதே தென்னார்க்காடு மாவட்ட வழக்கு. "அடித்து வளர்க்காத பிள்ளையும் ஒடித்து வளர்க்காத முருங்கையும் உருப்பட முடியாது" என்பது ஒரு பழமொழி. இப்பழமொழியில், 'வெட்டி' வளர்க்காத முருங்கை என்று கூறாமல், 'ஒடித்து' வளர்க்காத முருங்கை என்று கூறி யிருப்பது இவண் குறிப்பிடத் தக்கது.

**2-2-1 சொற் பிறப்பு — ஒப்பியல்:**

பெருந்தேவனாரின் கட்சிக்காரர்கட்கு இங்கே இன்னும் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் தீர வேண்டும். இலங்கை ஞானப்பிரகாச அடிகளார் (**Rev. S. Gnana Prakasar, O M.I.**) தமது 'சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி' (**An Etymological and Comparative Lexicon of the Tamil Language**) என்னும் நூலில், தமிழ்ச் சொற்களோடு ஒத்த உருவங்களுடைய இந்திய மொழிச் சொற்களையும் ஐரோப்பிய மொழிச் சொற்களையும் தந்துள்ளார். அவர், நூல் முன்னுரையில் பின்வரும் கருத்தினைத் துணிந்து கூறியுள்ளார்:

''தமிழ்ச் சொற்கள், முதல் முதல், மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்தில் எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை; தமிழ்ச் சொற்களால் உணர்த்தப்படும் கருத்துக்கள், மக்களினத்தின் பொதுப் பண்பைக் குறிக்கும் அடிப்படையாகும்; எனவே, கூர்ந்து ஆராயின், தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்தே உலக மொழிகளின் சொற்கள் தோன்றிப் பல்வேறு வடிவங் கொண்டன என்பது புலப்படும்''.

**2-2-2 திராவிட வேர்ச் சொற்கள்:**

ஞானப் பிரகாசரைப் போன்றே, ஆக்சுபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் டி. பர்ரோ (T. Burrow) என்பவரும், கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் எம். பி. எமினோ (M. B. Emeneau) என்பவரும் இணைந்து தொகுத்த ''A Dravidian Etymological Dictionary'' என்னும் நூலில், தமிழ்ச் சொற்களோடு ஒத்த வடிவமுடைய பிற திராவிட மொழிச் சொற்களையும் இந்தோ-ஐரோப்பியக் குடும்ப மொழிச் சொற்களையும் தந்துள்ளனர்.

இவ்வகராதியில், 4572 சொற்கள் நிறுத்தப்பட்டு அவற்றோடு ஒத்த வடிவமுடைய சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளமை வியப்பே !

இந்த அகராதியில் நம் முருங்கைக்குத் துணைபுரியும் வேர்ச் சொற்களைக் காண்போம். முருங்கை என்பதன் வேர்ச் சொல் முரி அல்லது முரு என்பது. இந்த முரி–முரு என்பவற்றை வேராகக் கொண்டுள்ள தமிழ்ச் சொற்களையும் அவற்றோடொத்த உருவுடைய பிறமொழிச் சொற்களையும் இவ்வகராதியில் உள்ளவாறு காண்போம்:

முதலில் மொழிப் பெயர்களின் சுருக்க விளக்கம் வருமாறு:– **Ta–Tamil** *(தமிழ்)*; **Ka–Kannadam** *(கன்னடம்)*; **Te–Telugu** *(தெலுங்கு)*; **Ma–Malayalam** *(மலையாளம்)*; **Ko-Kota** *(கோடம்)*; **Kod-Kodagu** *(குடகு)*; **To – Toda** *(தூதம்)*; **Tu - Tulu** *(துளு)*; **Kol - Kolami** *(கொலாமி)*; **Kur-Kurukh** *(குருக்)*; **Nk-Naiki** *(நாய்க்கி)*; **Pa-Parji** *(பர்சி)*; **Ga-Gadba** *(கடபா)*; **Go-Gondi** *(கோந்த்)*; **Kui-kui** *(கூ)*; **Malt-Malto** *(மால்டோ)*; **Pkt-Prakrit** *(பிராகிருதம்)*.

## 2.2–3 முறி-முரி முரு:

மேற்சுட்டியுள்ள மொழிகளில் முறி-முரி-முரு ஆகிய வேர்ச் சொற்கள் உள்ளன. இம்மொழிகளுள், பிராகிருதம் மட்டுமே இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. மற்றவை, தமிழிலிருந்து பிரிந்த திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை.

முதலில் முறிதல் - முரிதல் (to break) என்னும் பொருளில் வந்துள்ள சொற்களைக் காண்போம். அடைப்புக் குறிக்குள் தமிழில் இருப்பவை என்னால் எழுதப்பட்டவை. மற்றவை அகராதியில் உள்ளவாறு அப்படியே தரப் படுகின்றன.

Ta-muṟi *(முறி);* Ka-muṟi *(முறி);* Te & ka-muṟiyu *(முறியு);* Ta-muravu *(முரவு)*, muri *(முரி)*, murippu *(முரிப்பு)*, muriyal *(முரியல்)*, murivu *(முரிவு)*, murukku *(முருக்கு)*, murunku *(முருங்கு)*, mūri *(மூரி);* Ma-mūṟuka *(மூருக);* ko-mury *(முரி)*, mure *(முரே);* To-müry *(மூரி)*, mürc *(மூர்க்);* kod-muri *(முரி)*, murip *(முரிப்)*, muric *(முரிக்);* Tu-muri *(முரி)*, murku *(முர்க்கு);* Te-muri *(முரி)*, muriya *(முரிய)*, muriyu *(முரியு)*, mukka *(முக்க);* kol-murk *(முர்க்);* Nk - mur *(முர்)*, murk *(முர்க்);* kui - mroku *(முரோக்கு)*, mrunga *(முருங்க)*, mrüṅga *(முரிங்ங)*, mrupke *(முருப்கே)*, murūva *(முரூவ)*, mụrpa *(மூர்ப்ப);* kur-mürcña *(முருக்னா);* malt-murke *(முர்க்கே)*, murkre *(முருக்ரே);* pkt-muria *(முரிய)*.

*அடுத்து, வளைதல் - தொய்தல்* (to bend), *வலுவற்றிருத்தல்* (to lack in strength) *என்னும் பொருள்களில் வந்துள்ள சொற்களைக் காணலாம்:*

Ma-muruṭuka *(முருத்துக);* To-müry *(மூரி);* ka-muri *(முரி)*, murike *(முரிக்கே)*, muripa *(முரிப்ப)*, murivu *(முரிவு)*, muruku *(முருக்கு)*, muruhu *(முருகு)*, mor *(மோர்);* kur-moraku *(மொராக்கு);* Tu-muri *(முரி)*, muriġe' *(முரிகே)*, murku *(முருக்கு)*, murluni *(முருலுனி)*, mūri *(மூரி);* Te-murincu *(முரிங்கு);* Pa-murg *(முருக்)*, murgal *(முருக்கல்);* Ga-murg *(முருக்)*, murġe'n *(முருக்கென்);* Go-muritana *(முரித்தானா)*.

### 2-2 4 முருங்கையின் திரிபே:

*மேலே, பல திராவிட மொழிகளிலும், பிராகிருத மொழியிலும், ஒடிதல், வளைதல், தொய்தல், வலுவற்*

றிருத்தல் என்னும் பொருளில் முரி, முறி, முருக்கு என்னும் வேர்ச் சொற்கள் இருப்பதைக் கண்டோம். இந்த வேர்ச் சொற்களின் அடிப்படையில் தோன்றியதே முருங்கை என்னும் சொல். எனவே, முருங்கை என்பது, திராவிட மொழிகளின் தலைமை மொழியாகிய தமிழ் மொழியின் சொல்லே என்பது பெறப்படும். உண்மை இவ்வாறிருக்க, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சிங்கள மொழியின் 'முருங்கா' என்னும் சொல்லே தமிழில் முருங்கை என வந்தது என்று கூறுவது சிறிதும் பொருந்தாது.

தமிழ், சமசுகிருதம், பாலி, பிராகிருதம் முதலிய இந்திய மொழிச் சொற்களும் சில ஐரோப்பிய மொழிச் சொற்களும் சிங்கள மொழியில் கலந்துள்ளன. எனவே, பெருந்தேவனார் கூற்றால், முருங்கை என்னும் தமிழ்ச் சொல் சிங்களத்தில் முருங்கா எனத் திரிந்து வழங்கப் படுகிறது என்னும் உண்மை மறைமுகமாகத் தெரிகிறது. மற்றும், முருங்கை என்னும் தமிழ்ச் சொல்லே ஐரோப்பிய மொழியில் 'மொரிங்கா' எனத் திரிந்தது என்பதையும் மறத்த லாகாது.

## 3. பயனும் உடற்கூறும்:

### 3-1 சீக்கிர பத்திரம்:

சீக்கிரம் = உடனே, விரைவு; பத்திரம் = இலை. மூன்று வகையில் முருங்கையைச் 'சீக்கிர பத்திரம்' என்று கூறலாம். கிளையை வெட்டி நட்டால், மற்ற மரங்களினும் இதில் சீக்கிரம் இலைத்துளிர் தோன்றிவிடும். இது முதல் வகை. இரண்டாவது வகை: முருங்கைக் கீரையை மரத்திலிருந்து பிரித்ததும் உடனே சமைத்துவிட வேண்டும். இன்றைக்குக் கீரை ஒடித்து நாளைக்குச் சமைக்க முடியாது என்பது மட்டுமன்று-காலையில் ஒடித்து மாலையில் சமைத் தாலும் நன்றாயிராது; கீரை கசங்கி வாடி வதங்கிவிடும். மூன்றாம் வகை: முருங்கைக் கீரையைச் சிறிது நேரம்

வெந்ததுமே அடுப்பிலிருந்து இறக்கிவிட வேண்டும். மற்ற சில கீரைகளைப் போல் நெடுநேரம் வேகவைக்கக் கூடாது. அவ்வாறு செய்யின், கீரை கறுத்து விடும்-கசந்து விடும். எனவே, முருங்கைக்குச் 'சீக்கிர பத்திரம்' என்னும் பெயர் சாலவும் தகும். இஃதும் பயனாலும் உடற் கூறாலும் பெற்ற பெயராகும்.

## 3-2 முக்கந்தம்:

முருங்கைக்கு முக்கந்தம் என்னும் பெயர் உள்ளமையால் முருங்கை தொடர்பாக மூன்று வகைகள் காட்டப்பட வேண்டும். ஐந்து விதமான மூவகைகள் காட்டலாம், அவை முறையே வருமாறு:—

1. முருங்கை இலைகள் மும்மடி இறகுக் கூட்டிலை களாம். கீரையுடன் கூடிய ஒரு முருங்கைக் காம்பை எடுத்துக் கொள்ளின், இரண்டு கைகளையும் இரு பக்கமும் நீட்டியது போன்ற அமைப்பு ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று இருப்பதைக் காணலாம். மூன்றாவது அமைப்புக்கு மேல் நுனி கொத்தாக இருக்கும். சில காம்புகளில் மூன்றிற்கு மேற்பட்ட அடுக்குகள் இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால். பெரும்பாலானவற்றுள் மூன்றே இருக்கும்,

2. முருங்கைக் கனிச் சுவர் (காய்ச் சுவர்) மூன்று பிரிவுகளாகப் (Valves) பிளந்து அமையும்.

3. முருங்கைக் காய் மூன்று பட்டைகளாக இருக்கும்.

4. முருங்கை விதையில் மூன்று சிறகுகள் நீட்டிக் கொண்டிருக்கும்.

5. மற்ற மர இனங்களினும் முருங்கைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. கீரை, பூ, காய் ஆகிய மூன்றாலும் உணவுக்கு உதவுவது முருங்கையே. சிலவற்றில் இம்

மூன்றனுள் ஏதாவது ஒன்று மட்டுமோ - அல்லது - எவையேனும் இரண்டு மட்டுமே உணவுக்கு உதவும். முருங்கை இம்மூன்றாலும் உதவுகிறது.

எனவே, மேற்கூறியுள்ள காரணங்களுள் ஒன்றாலோ பலவாலோ முருங்கைக்கு முக்கந்தம் என்னும் பெயர் பொருந்தலாம். ஐந்தாவது காரணம் மிகவும் சிறப்புடைத்து. இதனைப் பயனாலும் உடற் கூறாலும் பெற்ற பெயர் எனலாம்.

கந்தம் என்பதற்கு, உயர்வு, மணம், கிழங்கு, வேர் முதலிய பல பொருள்கள் உண்டு. ஈண்டு, ஆகுபெயராகவோ வேறு எப்படியோ, உயர்ந்த பயிர்வகை எனப் பொருள் கொள்ள வேண்டும்.

## 3-3. பிரும்ம விருட்சம்:

பிரும்ம விருட்சம் என்பதைத் தமிழில் நான்முகன் மரம் எனலாம். நான்முகன் படைத்தல் தொழில் உடையவன். உயிர்கட்கு உடம்பு கொடுத்து உண்டாக்குபவன் அவன் என்பது சமயக் கொள்கை. நான்முகனைப் போலவே முருங்கையும் படைத்தல் தொழில் செய்கிறது. முருங்கைக் கீரை-பூ-விதை-காய்-ஈர்க்கு, பிசின் ஆகியவற்றை ஏற்ற பதம் செய்து உட்கொள்ளின், காம உணர்வு மிகுமாம்; அதனால் புணர்ச்சி வேட்கை உண்டாகும். ஆகவே, குழந்தைகள் படைக்கப்படுகின்றனர். இதுதான் முருங்கையின் படைத்தல் தொழில். முருங்கையை உண்ணும் ஆடவரால் உடலுறவு கொள்ளப்படுகிற - வீம்பு உரைத்த பெண்களும் பின்வாங்கிக் கெஞ்சுவர் என்னும் செய்தி இக்கட்டுரையில் வேறோரிடத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை காண்க.

*இதற்கு முன்னோர்களின் பாடல் சான்று வருமாறு:*

*அகத்தியர் குணபாடம்*

**பூ**

**'' விழிகுளிரும் பித்தம்போம் வீறருசி யேகும்**
**அழிவிந்துவும் புஷ்டி யாகும் - எழிலார்**
**ஒருங்கை யகலாக் கற்புடை வாணகையே**
**முருங்கையின் பூவை மொழி''**

*காய்*

**'' சொல்லும் பிணியெல்லாம் தோல்வியாம் மையறும்**
**பல்லுயிர்க்கும் தாதுமிகும் பத்தியமாம்—வில்லார்**
**பெருங்கைக் காமன்துதிக்கும் பெண்ணே நறிய**
**முருங்கைக்காய் தன்னை மொழி''.**

*விதை, ஈர்க்கு*

**'' நீரான விந்துவுமோர் நீண்டபிசி னாய்த்தடிக்கும்**
**சீராக மேனி செழிக்குங்காண் - பாராயீ**
**முருங்கை விதையதனால் மொய்த்தஇலை ஈர்க்கோ**
**ஒருங்கையுற நீரிறக்கும் உன்''.**

*பிசின்*

**'' முந்துநீ ரைத்தடுக்கும் மோரைப்போலே யொழுகும்**
**விந்துவைத் தடிப்பித்து மேனிதரும் – தொந்தக்**
**கரியநிற வாயுதனைக் காதிவிடும் நாளும்**
**பெரிய முருங்கைப் பிசின்'',**

*முருங்கையுறுப்பு முழுதும்*

**'' பிஞ்சால் திரிதோடம், பெரும்பூவால் போகம்**
**உஞ்சு விழிக்குக் குளிர்ச்சியுஞ்சேரும்—விஞ்சிலைவெப்**
**பாற்றும்தோல் நஞ்சறுக்கும் அவ்வேர்வாதச்**
**சினத்தை**
**ஆற்றும் முருங்கையி னது''.**

தேரையர் குணபாடம்
பிஞ்சு

**'' சிக்குருக்கு யப்பிஞ்சத் திச்சுரத்திற் குஞ்சாங்கும்
அக்குருக்கு ருப்பம் அரோசிகட்கும்-சுக்கிலத்தின்
கொச்சை யுறவருந்திக் கூறுவற்கு மாமதனைப்
பச்சை யுறவருந்திப் பார்''.**

மேற்காணும் பாடல்களில் உள்ள, 'அழிவிந்துவும் புஷ்டி யாகும்', 'பல்லுயிர்க்கும் தாது மிகும்', 'நீரான விந்துவுமோ நீண்ட பிசினாய்த் தடிக்கும்', 'மோரைப் போலே ஒழுகும் விந்துவைத் தடிப்பித்து மேனி தரும்', 'பெரும் பூவால் போகம்','சுக்கிலத்தின் கொச்சை யுறவருந்திக் கூறுவற்கும்' - என்னும் பகுதிகள் ஈண்டு இன்றியமையாதவை. மொத்தத் தில், முருங்கை யுறுப்புகள், விந்துவைப் பெருக்கியும், தடிக்கச் செய்தும், கட்டியும், உடலை அழகுறுத்தியும், காம உணர் வைத் தூண்டி ஆண்-பெண் உடலுறவு கொள்ளச் செய்யும்-குழந்தை பிறக்கச் செய்யும்-என்பது பெறப்படும். இதனால் தான், சிலர், நோன்பு (விரத) நாளில் முருங்கைக்காய் உண்பதில்லை.

எனவே, முருங்கைக்குப் 'பிரம்ம விருட்சம்' என்னும் பெயர் பொருந்துமன்றோ? இது பயனால் பெற்ற பெயராகும்.

## 3–4 சிவ தாகம்:

இது பிரம்ம விருட்சம் என்பதனோடு தொடர்புடைய பெயராகும். தாகம் என்பதற்கு விருப்பம் என்னும் பொருளும் காமம் என்னும் பொருளும் உண்டு. முறையே இலக்கியச் சான்றுகள் வருமாறு:

**" ஆகத் துமைகேள்வன் மரவச் சடைதாழ**
**நாகம் அசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்**
**தாகம் புகுந்தண்மித் தாள்கள் தொழும் தொண்டர்**
**போகம் மனத்தராய்ப் புகழத் திரிவாரே "**

(சம்பந்தர் தேவாரம்: 1-86-5. தாகம்=விருப்பம்)

தாகம் என்பது, ஒன்றை விரும்புதல் என்னும் அடிப்படைப் பொருள் உடையது என அறிவிக்க இப்பாடல் இவண் தரப்பட்டுள்ளது.

**" தாக விருதாவினிலே "**

(திருப்புகழ்-751, தாகம்=காமம்)

சிவதாகம் என்றால், சிவனுக்குத் தோன்றிய காம உணர்வு என்று பொருளாம். சிவனது காம உணர்வு போன்ற உணர்வை, முருங்கை தன்னை உண்டார்க்கு உண்டாக்கும் என்னும் காரணப் பொருட்டால், முருங்கைக்குச் சிவ தாகம் என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. சிவ தாகம் தொடர்பான புராணக் கதை வருமாறு:

பசுமாசுரன் என்னும் அசுரன் சிவனை நோக்கித் தவங் கிடந்தான். சிவன் தோன்றி, என்ன வேண்டும் என்று வினவினார். என் கையால் எதைத் தொட்டாலும் அது எரிந்துபோக வேண்டும்; இந்த வரம் வேண்டும் என்றான். சிவன் அப்படியே அளித்தார். உடனே அசுரன் வரத்தைச் சரிபார்க்கச் சிவன் தலையையே தொடப் போனான். சிவன் அஞ்சி ஓடி மறையலானார். சிவனைக் காக்கத் திருமால் மோகினி வடிவங்கொண்டு அசுரனை மயக்கினார். அசுரன் காதலைத் தெரிவித்தான். நீ குளித்து வந்தால் என்னைப் புணரலாம் என மோகினியாம் திருமால் கூறி, எங்கும் தண்ணீர் இல்லாமல் செய்துவிட்டார். அசுரன் சுற்றிப் பார்த்து வந்து தண்ணீர் இல்லை என்றான்,

திருமால் ஓரிடத்தில் விளங்கின் குளம்படி அளவு பள்ளத்தில் தண்ணீர் இருக்கச் செய்து, அசுரனை நோக்கி, குளிக்கா விடினும் தண்ணீரைத் தலையில் தடவிக்கொண்டு வரினும் போதும் என்றார். அசுரன் தண்ணீரைக் கையால் தொட்டுத் தன் தலையைத் தடவவே எரிந்து போனான்.

பின்னர்ச் சிவன் அங்கு வந்து நடந்ததை அறிந்தார்; மோகினிமேல் காம உணர்வு மிகக் கொண்டார். உடலுறவு ஏற்பட்டது. 'ரிஷ பிண்டம் இரா தங்காது' என்பர். இருடிகளோ தேவர்களோ 'ஆண் - பெண்' உடலுறவு கொள்ளின் உடனே குழந்தை பிறந்து விடுமாம். அவ்வாறு சிவனுக்கும் மோகினிக்கும் குழந்தை உடனே பிறந்தது. குழந்தையை மோகினி கையில் ஏந்திக் கொண்டதால் குழந்தைக்குக் கையனார் என்னும் பெயர் ஏற்பட்டது. இந்தக் கையனாரே ஐயனார் என அழைக்கப்படுகிறார்.

இவ்வாறே, முருங்கையின் கீரை, காய், விதை, மருந் தாக்கப்பட்ட பிசின் ஆகியவை, உண்டவர்க்குக் காம உணர்வை மிகுத்து உடலுறவு கொள்ளச் செய்து விரைவில் பெற்றோராக்கும். பிரமனைப் போல் குழந்தைகளைப் படைப்பதால் முருங்கைக்குப் பிரம்ம விருட்சம் என்னும் பெயர் தரப்பட்டது என மேலே கூறப்பட்டுள்ள செய்தியை ஈண்டு ஒப்புநோக்க வேண்டும். இந்தப் பயன் காரணமாக முருங்கைக்குச் சிவதாகம் என்னும் பெயர் ஈயப்பட்டது.

### 3-5 காம விர்த்தினி:

கண்ணுசாமி பிள்ளையின் பதார்த்த குண அரும் பொருள் விளக்கம் என்னும் நூலில், முருங்கைக்குக் காம விர்த்தினி என்னும் பெயர் தந்திருப்பது, பிரம்ம விருட்சம், சிவ தாகம் என்னும் பெயர்கட்கு மேலும் உரம் ஊட்டுகிறது. காமத்தை விருத்தி செய்வது - காம உணர்வைத் தூண்டி

மிகுப்பது காம விர்த்தினியாகும். இஃதும் பயனால் பெற்ற பெயரே.

**3-6 கிருஷ்ண கந்தம்:**

கிருஷ்ணம் என்றால் கறுப்பு, கிருஷ்ணன் என்றால் கண்ணன், கண்ணின் கருமணிப் பாவைக்கும் அது கறுப்பாயிருக்கும் காரணத்தால் கிருஷ்ணன் என்ற பெயர் உண்டு. கந்தம் என்பதற்குக் கிழங்கு, மணம் முதலிய பொருள்கள் உண்டு. இங்கே, ஆகுபெயராகவோ எப்படியோ, கந்தம் என்பது மர இனத்தைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில், ஈண்டு, கிருஷ்ண கந்தம் என்பதற்கு, கண்ணிற்கு நலம் பயக்கும் மரம் என்று பொருள் கொள்ள வேண்டும். முருங்கை கண்ணுக்கு நலம் பயக்கும் என்பதற்குச் சில பாடல் சான்றுகள் பார்க்கலாம். பிரம்ம விருட்சம் என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ள சில பாடல் பகுதிகளுடன் புதிய பாடல்களும் தரப்படும்:-

அகத்தியர் குணபாடம்

**" செறிமந்தம் வெப்பம் தெறிக்குந் தலைநோய்**
**வெறிமூர்ச்சை கண்ணோய் விலகும் – மறமே**
**நெருங்கையிலை யொத்தவிழி நேரிழையே நல்ல**
**முருங்கை யிலையை மொழி".**

**" விழிகுளிரும் பித்தம் போம் ........**
**முருங்கையின் பூவை மொழி".**

**" உஞ்சு விழிக்குக் குளிர்ச்சியுஞ் சேரும் ......**
**ஆற்று முருங்கையினது".**

**" தின்றால் கசப்பாகும் தீயாங் கொடுவிடத்தைக்**
**கொன்று விடும் கட்குங் குளிர்ச்சிதரும் - என்று மையம்**
**ஓட்டும்வேர் பூவிலைகாய் உற்றபிசினும் பிஞ்சும்**
**காட்டுப் புனமுருங்கை காண்".**

மேற்காட்டியவற்றுள், 'கண்ணோய் விலகும்', 'விழி குளிரும்', 'விழிக்குக் குளிர்ச்சியும் சேரும்', 'கட்குக் (கண்ணுக்குக்) குளிர்ச்சி தரும்' என்னும் பகுதிகள் காணத் தக்கன. மற்றும், முருகேச முதலியார் தம் பொருட் பண்பு நூலில், 'முருங்கை இலை இரசத்தைக் கண்ணில் விட வலிகள் போம்; இதைத் தேனுடன் சேர்த்துக் கண் இமை களில் தேய்க்கலாம்' என்று கூறியுள்ளார். (இரசம்=பச்சைச் சாறு).

எனவே, கிருஷ்ண கந்தம் என்னும் பெயர் முருங்கைக்குப் பொருந்தும். இது பயனால் வந்தது.

### 3-7 டெரிகோஸ்ப் பெர்மா:

மரநூலார் (**Botanists**) முருங்கையை, 'மொரிங்கா டெரிகோஸ்ப் பெர்மா' (**Moringa Pterygosperma**) என்னும் பெயரால் வழங்குகின்றனர். முருங்கை என்னும் தமிழ்ப் பெயரே மரநூலில் 'மொரிங்கா' எனப்பட்டுள்ளது. இது பற்றிய உண்மையை, இதே கட்டுரையில் உள்ள 'முருங்கை - வேர்ச்சொல்' என்னும் தலைப்புடைய பகுதியால் அறிய லாம். 'டெரிகோஸ்ப் பெர்மா' என்னும் பெயரின் பொருள், 'சிறகு உள்ள விதைகளை உடையது' என்பதாகும். **Pterygosperma** என்னும் சொல்லில், **Ptery** என்பது சிறகு என்னும் பொருள் தொடர்பானது; **gos** என்பதும் அன்னதே. **Perma** என்பது, மயிர் என்னும் பொருள் தொடர்பானது. சிறகில் மயிர் இருக்குமல்லவா? **Ptery** என்பதிலிருந்து '**P**' என்பதை நீக்கினால், **tery** என்பது மூன்று என்னும் பொருள் தொடர்பு உடையதாகும். இப்பெயருக்கு ஏற்ப. முருங்கைக் காய்க்குள் உள்ள விதைகளைத் தனித் தனியே எடுத்துப் பார்க்கின், விதையின் மூன்று பக்கங்களில் சிறகு (இறக்கை) போன்ற பகுதி நீட்டிக்கொண்டிருப்பதை அறியலாம். இதனால் இப்பெயர் தரப்பட்டது. இஃது உடற்கூறால்

பெற்ற பெயராகும். அடுத்து ஒலெய்ஃபெரா என்பதை அறியலாம்.

## 3-8. ஒலெய்ஃபெரா (Oleifera):

மரநூலாரால் தரப்பட்டுள்ள ஒலெய்ஃபெரா என்னும் பெயருக்கு 'எண்ணெய் உள்ளது' என்று பொருளாம். முசே (MM. Mousset), துய்புய், (Dupuis) என்னும் பிரெஞ்சுத் துறவியர் இருவர் தொகுத்துள்ள பிரெஞ்சு - தமிழ் அகரமுதலியில், Oleifere என்னும் சொல்லுக்கு, 'எண்ணெய் தரும்', 'எண்ணெய் உற்பத்தியாக்கும்' - எனப் பொருள் தரப்பட்டுள்ளது. முருங்கை மரத்தின் விதையி லிருந்து 'பென்' (Ben) என்னும் ஒருவகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெயை ஓவியர்கள் பயன் படுத்துவார்களாம். எனவே, இந்த எண்ணெயை அடக்கிக் கொண்டுள்ள முருங்கைக்கு ஒலெய்ஃபெரா என்னும் பெயர், பயனாலும் உடற்கூறாலும் பெறப்பட்டதாகும்.

## 3-9. சிற்றிலைப் பூ:

முருங்கைக் கீரை என்னும் முருங்கை இலை, எத்தனையோ மரங்களின் இலைகளைவிட மிகவும் சிறியதா தலின், 'சிற்றிலைப் பூ' என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது. சிற்றிலைப்பூ என்பது சினையாகு பெயராய் முருங்கை மரத்தைக் குறிக்கிறது. இஃது உடற் கூறால் பெற்ற பெயர்.

## 3-10. மூல பர்ணி:

பர்ணம் என்றால் இலை. இலையால் அமைக்கப்பட்ட குடிசை 'பர்ண சாலை' என வழங்கப்படுவது காண்க. பர்ணம் உடையது பர்ணி - அதாவது - மரம் ஆகும். முருங்கையின் பர்ணம் (இலை) மூலபர்ணம் ஆகும். மூலம் என்பதற்கு இங்கே முக்கியம்-முதன்மை என்பன பொருளாம்.

மரங்கட்குள்ளே முருங்கை மரத்தின் இலையே (கீரையே) உணவுக்கு மிகவும் ஏற்றது; மிகுந்த ஆற்றலைத் தருவது. முருங்கைக் காயினும் முருங்கைக் கீரையே மிக்க ஆற்றல் உடையது.

முருங்கைக் காயில், புரோட்டின் 2.53, கொழுப்பு 0.1, கார்போஹைடிரேட்டு (மாவு, வெல்லம் முதலிய ஆற்றல் பொருள்) 3.72, தாதுப்பொருள் 1.96, சிறிது 'ஏ' வைட்டமின் ஆகியவை உள்ளன. முருங்கைக் கீரையிலோ, புரோட்டின் 6.65, கொழுப்பு 1.73, கார்போஹைடிரேட்டு (மாவு, வெல்லம் முதலிய ஆற்றல் பொருள்) 13.50, தாதுப்பொருள் 2.2 விழுக்காடு உள்ளன. எனவே, மூலமான-முக்கியமான-முதன்மையான பர்ணத்தை-இலையை-கீரையை உடையது மூலபர்ணியாகும். முருங்கைக்கு மூலபர்ணி என்னும் பெயர் பயனாலும் உடற்கூறாலும் வழங்கப்பட்டது. கீரை, வடிவத்தைச் சேர்ந்ததல்லவா?

### 3–11 மூல கப மரம்:

### 3–11–1 மூல கபம்:

மூல கபம் என்னும் பெயர் சா. சி. பி, அகரமுதலியில் தரப்பட்டுள்ளது. முருங்கை என்றால் முருங்கை மரம் என்று கொள்ளல்போல, மூல கபம் என்றால் மூல கப மரம் என்று கொள்ளல் வேண்டும். சித்த வைத்திய அகராதியில் 'மூல கப மரம்' என்றே கூறப்பட்டுள்ளது. ''பசிப்பிணி மருத்துவன்'' என்னும் (173ஆம்) புறப்பாட்டுத் தொடருக்கு, பசிநோய் போக்கும் மருத்துவன் எனவும், ''பசிப்பிணி மருந்து'' (28-217) என்னும் மணிமேகலைத் தொடருக்கு, பசி நோயைப் போக்கும் மருந்து எனவும் பொருள் கொள்ளல்போல, மூல கப மரம் என்பதற்கு, மூல கபத்தைப் போக்கும் மருந்து மரம் எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

உடம்பில் வாத பித்த சிலேஷ்மம் என்னும் மூவகை உண்டு. இவற்றைத் தமிழில் வளி, பித்தம், ஐ (ஐயம்) எனக் கூறுவர். இவண்,

**''மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று''** (941)

என்னும் குறள் காணத்தக்கது. வடமொழியில் சிலேஷ்மம் (சிலேட்டுமம்), கபம் எனப்படுலது தமிழில் ஐ, ஐயம் எனப்படும். கபம் அல்லது ஐ என்பது, சளி, கோழை, இருமல், மூச்சிழுப்பு முதலியவை தொடர்பானது. கபம், ஐ ஆகியவற்றிற்கு இலக்கியச் சான்றுகளாவன:

**''ஆதி தன்னிடைப் பெற்ற வரத்தினால்**
**பீதி யின்றிப் பெரும்புவ னங்களை**
**வாத பித்த கபமென வன்றிறல்**
**ஓது மூவரும் ஒத்து நலிந்தனர்''**
(இராமாயணம்-உத்தர காண்டம்-31-ஒட்டக்கூத்தர்)

(கருத்து-நான்முகனிடம் வரம் பெற்ற மாலியவான், சுமாலி, மாலி என்னும் மூவரும், உடம்பை வாதம்-பித்தம்-கபம் ஆகியவை வருத்துதல்போல, உலகங்களை வருத்தலாயினர்.)

**''ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கை விட்டு**
**ஆவியார் போவதுமே அகத்தார் கூடி**
**மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி**
**மயானத்தில் இடுவதன்முன்....''**
(அப்பர் தேவாரம்-திருக்கன்றாப்பூர்ப் பதிகம்-7)

**''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி**
**அலமந்த போதாக அஞ்சேல் என்று**
**அருள் செய்வான் அமருங் கோயில்''**
(சம்பந்தர் தேவாரம்-திருவையாறு-3-1)

**''சென்று தாதையைப் பணிந்திது செப்பலும் சினவேல்**
**வென்றி மன்னனை விருத்தனாம் வகையவன்**
**விதித்தான்**
**அன்று தொட்டிவன் ஐம்முதல் பிணியினா லழுங்கி**
**இன்று நூறென நரைமுதிர் யாக்கையோ டிருந்தான்''**

*(வில்லி பாரதம்-குருகுலச் சருக்கம்-22)*

### 3-11-2 கப மூலம்:

மேற்காட்டியுள்ள பாடல் பகுதிகளால், கபம், உயிரைப் போக்கும் கொடிய நோய் என்பது புலப்படும். இந்தக் கபத்தை முருங்கை போக்குமாம். மூல கபம் என்பதில் உள்ள மூலம் என்பது, மூல காரணமாயிருப்பது எனப் பொருள்படும். இவண், இல்லின் வாயை வாயில் என்பது போலவும், கண்ணின் கடையைக் கடைக் கண் என்பது போலவும், மூல கபம் என்பதைக் கப மூலம் என மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த அமைப்பை, இலக்கணப் போலி எனவும், முன்பின் மாறித் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை எனவும் இலக்கண நூலார் கூறுவர்.

**''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதீர்க்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்''** *(348)*

என்னும் குறளுக்கு ஏற்பக் கபத்தின் மூலகாரணத்தையே போக்கிவிடுதல் சிறந்ததல்லவா? இதைத்தான் முருங்கை செய்கிறது. இதற்கு, அகத்தியர் குண பாட நூலிலிருந்து அகச் சான்றுகள் வருக:

**'' சொல்லும் பிணியெலாம் தோல்வியாம் ஐஅறும்...**
**முருங்கைக்காய் தன்னை மொழி ''.**

(முருங்கைக்காயால் ஐ (கபம்) அறும்)

**'' முருங்கைவேர்ப் பட்டைக்கு மூல கபத்தோடு**
**ஒருங்குறாச் சந்நிசுரம் ஓடும் ''**

(முருங்கை வேர்ப் பட்டையால் கபம், சந்நி, காய்ச்சல் ஆகியவை போம்).

“ என்றும் ஐயம்
ஒட்டும்வேர் பூஇலைகாய் உற்றபிசினும் பிஞ்சும்
காட்டுப் புனமுருங்கை காண் ”.

(புன முருங்கை என்னும் காட்டு முருங்கையின் வேர் ஐயத்தை (கபத்தை) ஒட்டும்).

“ தவசுமுருங்கைத் தழைக்குத் தையலே கேளாய்
அவசியம் பீநசம் உண்ணாக்கும் — உவசர்க்க
ஐயம் சுவாசகபம் அண்டாது குத்திருமல்
வையம் விடுத்தேகும் வாழ்த்து ”

(தவசு முருங்கை என்னும் இனத்துக் கீரையால், மூக்கில் நீர் பாய்தல், உள்நாக்கு நோய், ஐயம் (கபம்), மூச்சு இரைப்பு, பொடி இருமல் ஆகியவை போம். ‘வையம் விடுத்தேகும்’ என்னும் தொடர் ஈண்டு கவனிக்கத் தக்கது. பெரியம்மை இந்தியப் பெருநாட்டை விட்டே போய்விட்டது என்பது போல, இவையெல்லாம் மக்கள் வாழும் உலகத்தை விட்டே ஓடிவிடுமாம்.

இதுகாறுங் கூறியவற்றால், கபநோயின் மூலகாரணமே அற்றுப் போகும் என்பது புலனாம். இதனால், மூலகப மரம் என்னும் பெயர் பயனால் பெறப்பட்டது என அறியலாம்.

### 3-11-3. சொல் விளையாட்டு:

மூல கபம் என்பதைச் சொல் விளையாட்டுப் பெயராக்கி ஒரு சிறிது போலி மகிழ்ச்சி அடையலாமே! மூலம் என்றால் அடி-வேர்; கபம் என்றால் ஐ (ஐயம்). முருங்கை என்பதை முருங்கு+ஐ எனப் பிரிக்கலாம். முருங்கு என்பது அடி – வேர்ச் சொல் – அதாவது மூலச் சொல். அந்த மூலத்தோடு

'ஐ' ஆகிய கபம் சேர்ந்தது மூல கபம் ஆகும். இவ்வாறு நோக்கின், பெயர்க் காரணம் சொல் விளையாட்டே.

### 3-12. முகக் கந்த மரம்:

இந்தப் பெயர் சித்த வைத்திய அகராதியில் தரப்பட்டுள்ளது. முகம் என்பதற்கு உரிய பல்வேறு பொருள்களுள் 'முதன்மை' என்பதும் ஒன்றாகும். இதற்குச் சான்றாக நமது முகம் என்னும் உறுப்பே போதுமானது, 'எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்பது முதியோர் மொழி. சிரசே பிரதானம் என்றால், தலையே முதன்மையானது என்று பொருளாம். தலையில் முகம் முதன்மையானதல்லவா?

கந்தம் என்பதற்கு, முன்னர் 'முக்கந்தம்' என்னும் பெயர் விளக்கத்தில் கூறியுள்ளதை ஈண்டும் கொள்ளலாம். கந்த மரம் என்பதற்கு உயர்வுடைய — சிறப்புடைய மரம் எனவும் பொருள் கொள்ளலாம். சாலி என்பது ஒருவகை உயர்ந்த நெல்லாகும். அதன் உயர்வை, மணிமேகலை நூல்,

" **கந்த சாலியின் கழிபெரு வித்து** " (10-46)

எனக் கந்தம் என்னும் அடைமொழியால் அறிவிக்கின்றது.

எனவே, மிகுந்த வலிமையூட்டும் பூ-காய்-கீரை ஆகியவற்றால் சாலவும் உயர்ந்த-சிறந்த-முதன்மையான பயன் தரும் மரம் என்னும் பொருளில், முருங்கைக்கு முகக் கந்த மரம் என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இது பயனால் பெற்ற பெயராகும்.

## 4. பண்பும் பயனும்:

### 4-1 குரு கண்டகம்:

குரு என்னும் சொல்லுக்குப் பல வகைப் பொருள்கள் உண்டு. இவண் இருவகைப் பொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**4-1-1. முதல் வகை:**

குரு=புண், கொப்புள நோய், வேர்க்குரு. இம்மூன்றுக்கும் இலக்கியச் சான்றுகள் முறையே வருமாறு:-

1. புண் - நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்.

**"மெல்லியல் ஆக்கைக் கிருமி குருவில் மிளிர்தந்தாங்கே**
**செல்கிய செல்கைத்து உலகை என் காணும் -** (3627)

2. கொப்புள நோய்: சிலம்பு - உரைபெறு கட்டுரை:

**"அன்று தொட்டுப் பாண்டிய னாடு மழை வறங்**
**கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயும்**
**குருவும் தொடர ..."**

3. வேர்க்குரு: பிங்கலம் - ஒருசொல் பல்பொருள் வகை:

**"குரவனும் நோயும் நிறமும் பாரமும்**
**அரசனும் குருவெனல் ஆகும் என்ப"** (340)

ஈண்டு, குரு என்பது நோய்க் குருவை - அதாவது - வேர்க்குருவை இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இனிக் கண்டகம் என்னும் சொற்பொருள் காணலாம்.

கண்டகம்=கொடுமை. "கண்டகப் பழிப்பதகரை" (உபதேச காண்டம் - சிவபுண் (289)

கண்டகம் உடையவர் - கொடுமை செய்பவர் கண்டகர் ஆவார்.

**"கன்னமே கொடு போயின கண்டகர்"**

(இரகு வமிசம் - யாக - 42)

கண்டகம் உடையவள் - கொடுமை செய்பவள் கண்டகி ஆவாள்.

**" முது கண்டகி யிவளாம் அசமுகி என்பதொர்
கொடியாள்"**

(கந்த புராணம் - அசுர காண்டம் - அசமுகிப் படலம்-41-2)

பொதுவாகக் குரு என்பதற்குப் புண் எனவும், கண்டகம் என்பதற்குப் புண்ணுக்குக் கொடுமை செய்வது அதாவது - புண்ணைப் போக்குவது எனவும் ஈண்டும் பொருள் கொள்ள லாம். துன்பத்துக்குத் துன்பம் செய்வர். அதாவது - துன்பத் திற்கு இடங்கொடாதவர் என்னும் பொருளில் உள்ள,

**" இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்"** (623)

என்னும் குறளின் கருத்தைப் போல், குரு கண்டகம் என்ப தையும் கொள்ளவேண்டும். அதாவது, முருங்கை, புண் - சொறி போன்ற நோய்களைப் போக்கும் என்பது கருத்து, க. ச. முருகேச முதலியார் தம் பொருட் பண்பு நூலில் இதுபற்றிக் கூறியிருப்பன:–

''முருங்கை இலையோடு, இரண்டு திரிப்பூண்டு, ஒரு துண்டு மஞ்சள், உப்பு, மிளகு இவைகளைச் சேர்த்தரைத்து, நாய்க்கடி நஞ்சை முரிக்க, உள்ளுக்குக் கொடுத்து, அதனையே புண்ணின் மீதும் பற்றிட புண் ஆறி, நஞ்சு நீங்கும்''.

''முருங்கைப் பட்டைச் சாறு, குப்பை மேனிச்சாறு இவ்விரண்டையுஞ் சேர்த்து எண்ணெய் விட்டுக் காய்ச்சி, கரப்பான் சொறி சிரங்குகளின் மீது தடவ அவை நீங்கும்''.

''முருங்கைப் பிசினை எண்ணெயில் கரைத்துக் காதில் விடக் காதுப் புண் ஆறும்''.

இவ்வாறு புண் - சொறி போன்றவற்றைப் போக்குவதால், முருங்கைக்குக் குரு கண்டகம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது என்று கூறலாம்.

### 4-1-2. இரண்டாம் வகை:

இனி, குரு என்பதன் மற்றொரு வகைப் பொருளாவது:- தேவ குருவாகிய வியாழனுக்குக் 'குரு' என்னும் பெயர் உண்டு. சோதிடத்திலும், வியாழன் என்னும் பெயரினும் குரு என்னும் பெயரையே பெரும்பாலும் பயன்படுத்துவர். இந்தக் குரு பகவானுக்குப் 'பொன் என்னும் பெயரும் உண்டு. இலக்கியச் சான்று:

**" பொன்னொடு வெள்ளியும் புரந்த ராதியர்க்
கின்னியன் முறைமுறை யிருக்கை யீயவே"**

(கம்பராமாயணம் - ஆரணியம் - மாரீசன்வதை – 16)

பொன் என்பது குருவைக் குறிப்பதன்றி, உலோகங்களையும் குறிக்கும். சிறப்பாகத் தங்கத்தையும் பொதுவாக உலோகங்களையும் பொன் எனல் மரபு, தங்கம் செம்பொன், பசும் பொன், பைம்பொன் என்றெல்லாம் வழங்கப்படும்.

**" செம்பொன் விளக்கொடு சேடியர் முந்துற"**

(பெருங்கதை - உஞ்சைக் காண்டம் – 33-189)

**" செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை"**

(மதுரைக்காஞ்சி – 410), நச்சினார்க்கினியர் உரை:

''சிவந்த நீர்மையுடைய கிளிச்சிறை என்னும் பொன்னால் செய்த பாவை''.

**" செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த நெடியோன்"**

(புறநானூறு - 9·9, பழைய உரை: ''சிவந்த நீர்மையை யுடைய போக்கற்ற (பழுதற்ற) பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய நெடியோன்'').

**"செம்பு செய்ஞ்ஞரும் கஞ்ச காரரும்**
**பைம் பொன் செய்ஞ்ஞரும்"** (மணிமேகலை - 28-35,36

(பைம்பொன் செய்ஞ்ஞர்=பொன் நகை செய்பவர்)

அடுத்து, - வெள்ளி வெண் பொன் என வழங்கப்படும்.
சீவக சிந்தாமணி (2421)

**" ஆய்ந்த பானிற மாயபொற் கம்பலம்**
**வேய்ந்த பொங்கணை வெண்பொற் கட்டில்மேல்"** -
(இலக்கணையர் இலம்பகம் - 44)

இரும்பு கரும்பொன் என வழங்கப் பெறும்.
சீவக சிந்தாமணி -- 104.

**" கரும்பொன் இயல்பன்றி கதநாகம் விடுசகடம்"**

நச்சர் உரை! இரும்பால் இயன்ற பன்றி=கரும்பொன் இயல்பன்றி - (கரும்பொன் = இரும்பு).

இப்போது சொல் விளையாட்டாகக் குரு என்பதிலிருந்து பொன் என்பதற்கு மாறியுள்ளோம். இதன்படி, குரு கண்டகம் என்பதற்கு, உலோகங்கட்குக் கொடுமை செய்வது எனப் பொருள் கொள்ள வேண்டும். உலோகங்கட்குக் கொடுமை செய்வது என்றால், உலோகங்களின் இயல்பை மாற்றிப் பற்பம் (பஸ்பம்) என்னும் மருந்து செய்ய உதவுவது என்று கருத்து கொள்ள வேண்டும். தங்கத்தைப் பதன் செய்த மருந்து தங்கப் பற்பம் (தங்கப் பஸ்பம்) ஆகும். இரும்பைப் பதன் செய்த மருந்து அயச் செந்தூரம் எனப்படும். இவ்வாறு இன்னும் தாமிரப் பற்பம் செம்புப் பற்பம் முதலியன செய்தலும் உண்டு.

### 4-2. நாகத்தை நாசமாக்கி:

முருங்கைக்கு இப்பெயரும் உண்டு, நாகம் என்றால் துத்த நாகம் என்னும் உலோகம் ஆகும். இந்த உலோகத்தை

முருங்கை நாசம் செய்யும் என்றால், இந்த உலோகத்தின் இயல்பை மாற்றிப் பதப்படுத்தி நாகபற்பம் (நாகபஸ்பம்) செய்ய உதவும் என்பது கருத்து. நாகபற்பம் மூலநோய்க்கு **(Piles)** மிகவும் நல்லது - விரைவில் குணமாக்கும் (என்பது சொந்தப்பட்டறிவாகும்). இனி மீண்டும் குரு கண்டகம் என்னும் பெயருக்குச் செல்லலாம்.

முருங்கை துத்தநாக உலோகத்தை நாசமாக்கும் என்றால், மற்ற உலோகங்களையும் அவ்வாறு செய்யலாம் அல்லவா? எனவே, உலோகங்களை மாற்றிப் பற்பமாக்கப் பயன்படுவது என்னும் பொருளில், இதற்குக் குரு கண்டகம் என்னும் பெயர் பொருந்தலாம். ஈண்டு முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் உள்ள ''முருங்கைப் பட்டைச் சாறு சில உலோகங்களைப் பற்பமாக்கும்'' என்னும் பகுதி காணத்தக்கது. புண்ணை ஆற்றுவது என்னும் பொருளில் குரு கண்டகம் என்பது பயனால் பெற்ற பெயராகும். உலோகங்களை மாற்றுவது என்னும் பொருளில், குரு கண்டகம் - நாகத்தை நாசமாக்கி - என்பன பண்பால் பெற்ற பெயர்களாகக் கொள்ளப்படலாம்.

## 4-3. சொல் விளையாட்டு:

பொன்னாங் கண்ணிக்குச் சீதை (சீதம் உடையது) என்னும் பெயரின் அடிப்படையில் சொல் விளையாட்டாகச் 'சானகி' என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதுபோல், குரு கண்டகம் என்பதில், குரு என்னும் பெயரின் அடிப்படையில் அதற்குச் சொல்விளையாட்டாகப் பொன் (உலோகம்) என்னும் பொருள் கொள்ளல் வேண்டும்.

# 5. ஒப்புமையால் பெற்ற பெயர்கள்

## 5-1. தவசி:

தவசி என்பதற்கு நாரை, முருங்கை விதை, முருங்கைப் பிசின் என்னும் பொருள்கள் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளன. வெளவால் என்னும் பொருளும் சில அகர முதலிகளில் தரப்பட்டுள்ளது. நாரைக்கும் வெளவாலுக்கும் தவசி என்னும் பெயர் ஏற்பட்டதற்கு உரிய காரணம் தெளிவாகத் தெரிகிறது. முருங்கை விதைக்கும் பிசினுக்கும் இப்பெயர் ஏற்பட்டதற்கு உரிய காரணம் தெளிவாகத் தெரியவில்லை. 'தெரிந்ததைக் கொண்டு தெரியாததற்குச் செல்லுதல்' என்னும் உளவியல் முறையின்படி (Psychological Method), பெயர்க் காரணம் தெரிந்த நாரை, வெளவால் ஆகியவற்றிலிருந்து, பெயர்க் காரணம் தெளிவாகத் தெரியாத முருங்கை விதைக்கும் பிசினுக்கும் செல்ல வேண்டும்.

## 5-1-2. தவ முறைகள்:

முதலில் நாரை, வெளவால் ஆகியவற்றின் பெயர்க் காரணத்தைப் பார்க்கலாம். தவசிகள் பல விதமாகத் தவம் செய்வர். ஆற்றங்கரையையோ - குகையினையோ - காட்டையோ அடைந்து, தம்மைச் சுற்றிலும் புற்றும் மரமும் அடர்ந்து வளர்ந்தும் பொருட் படுத்தாது அவற்றுக்குள் இருந்தவாறே பல்லாண்டுகள் தவஞ் செய்பவர் சிலர். நீருக்குள் மூழ்கியிருந்தும், (நிலத்துக்குள் புதைக்கப் பெற்றும்), நெருப்பின் நடுவேயிருந்தும் தவம் புரிபவர் சிலர். இவர்கள் ஊண் உறக்கம் இன்றித் தவத்தில் இருப்பர். இச்செய்தியை, பிரபுலிங்க லீலை - மாயையின் உற்பத்தி கதியில் உள்ள,

**" கண்ணிய நிலத்த கங்கைக் கரையிலும் முழையிடத்தும்
புண்ணிய வனத்தும் எய்திப் புற்றுமாய் மரமா யுற்றும்,
தண்ணிய புனலில் தீயில் சார்ந்தும், ஊன்துயில்
துறந்தும்,
பண்ணிய தவத்தோர் நெஞ்சும் பதைத்தன மயலின்
மூழ்கி"** (32)

என்னும் பாடலும், திருவாசகம் - செத்திலாப்பத்தில் உள்ள,

**" புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய் அண்ட
வாணரும் பிறரும்
மற்றியாரும் நின்மலரடி காணா மன்ன..."** (2)

என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம்.

இன்னும் சில தவமுறைகளும் உண்டு ஒற்றைக்காலில் நின்று தவஞ் செய்வது ஒருமுறை, அருச்சுனன் சிவனிடம் பாசுபதம் என்னும் படை (அஸ்திரம்) பெறுதற்காக, அறுபது அடி நீளக் கம்பம் நட்டு, அதன் உச்சியில் ஓர் ஊசியைப் பதித்து, அவ்வூசியின் நுனியில் தன் வலக்கால் கட்டை விரலை ஊன்றிக் கொண்டும் இடக்காலை மேலே தூக்கிக் கொண்டும் தவஞ் செய்தான் என்பது ஒரு சார் கதை. இவ் வாறு புகழேந்திப் புலவரின் பாடல் கூறுகிறது. அருச்சுனன் சுற்றிலும் நெருப்பின் நடுவேயிருந்து தவம் புரிந்ததாக வில்லி பாரதம் கூறுகிறது. இஃதன்றி, தலை கீழாய் நின்று தவஞ் செய்வது மற்றொரு முறை, இதனை, சிவப்பிரகாச அடிகளாரின் சோண சைல மாலையில் உள்ள

**''கந்தரம் இருந்தும் அடகுநீர் அயின்றும்
கரம்நிலத் தமைத்து இருபதமும்
அந்தரம் நிமிர்த்தும் நின்னிலை யறியார்
அரும்பவம் ஒழியுமோ உரையாய்'' (57)**

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். கருத்து: குகையில் இருந்தும், சருகையும் நீரையும் உட்கொண்டும், இரண்டு

கைகளையும் கீழே ஊன்றி இரண்டு கால்களையும் மேலே தூக்கி உடம்பை நிமிர்த்தியும்-அதாவது-தலை கீழாய் நின்று கொண்டும் தவம் புரிபவர் பலர், இறைவனே, இன்னும் உன்னை அறியார்; அவர்தம் பிறவி என்று நீங்குமோ-கூறுவாய்'' என்பது பாடல் பகுதியின் கருத்து.

உலகியலில், ஒருவரது செயலை மறுத்துப் பேசும் மற்றொருவர், 'நீ ஒற்றைக் காலில் நின்றாலும் நடக்காது' எனவும், 'நீ தலைகீழாய் நின்றாலும் ஒன்றும் முடியாது' எனவும் கூறுவது ஈண்டு இணைத்து நோக்கற்பாலது, இந்த அடிப்படையில் நாரையையும் வௌவாலையும் அணுகு வோம்:-

## 5-2. போலித் தவசிகள்;

நாரை என்பது கொக்கு. நீர் மடைத்தலையில் கொக்கு ஒரு காலை ஊன்றியும் மற்றொரு காலை மேலே தூக்கியும் மீன்களின் வருகையை எதிர்நோக்கியிருக்கும். சிறிய மீன் களை விட்டுப் பெரிய மீனை எதிர்பார்ப்பது அதன் குறி. இரண்டு கால்களையும் ஊன்றிக் கொண்டு நின்றால், ஏதோ பறவை நம்மைப் பிடிக்க நிற்கிறது என அறிந்து மீன்கள் அப்பக்கம் வாராவாம். ஒற்றைக் காலில் நின்றால், ஏதோ செடி-பூண்டு இருப்பதாக எண்ணி மீன்கள் வருமாம். இச் செய்தியை ஔவையின் மூதுரையில் உள்ள,

> **" ..... .... மடைத் தலையில்**
> **ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**
> **வாடி யிருக்குமாம் கொக்கு''** (16)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம், ஒற்றைக் காலில் நின்று தவஞ்செய்வோர்போல் கொக்கின் செயல் இருப்ப தால் ஒப்புமை கருதி அதற்குத் தவசி என்னும் பெயர் தரப்பட்டது.

வெளவால் கூரையையோ மரக்கிளையையோ கால்களால் பற்றிக்கொண்டு தலைகீழாய்த் தொங்கும். ''வெளவால் வீட்டுக்கு விருந்தினராய்ப் போனால் தலைகீழாய்த் தொங்க வேண்டும்'' என்பது ஒரு பழமொழி, தலைகீழாய் நின்று தவஞ் செய்பவர்போல் வெளவாலின் செயல் காணப்படுவதால் அதற்கும் 'தவசி' என்னும் பெயர் தரப்பட்டது. இந்தப் போலித் தவசிகளின் அடிப்படையோடு முருங்கை விதையை அணுகுவாம்:-

## 5-3 முருங்கை விதை:

முருங்கை விதை காய்க்குள் இருக்கும். முருங்கை மரத்தில் காய்கள் நீளமாய்த் தொங்கும். இக்காட்சி தலைகீழாய்த் தொங்குவதுபோல் தோன்றும். மற்ற மரத்துக் காய்கள் முருங்கைக் காய்கள் போல் நீளமாகத் தொங்குவதில்லை. கொன்றைக்காய் போன்ற சில நீளமாயிருப்பினும் முருங்கையளவு இருப்பதில்லை; இருப்பினும், முருங்கையைப் போன்று அம்மரங்கள் மக்கட்கு மிகவும் அறிமுகமானவையல்ல. அறிமுகமான புடலங்காய் முருங்கைக் காயினும் நீளமாகத் தொங்குகிறதே என்று வினவலாம். புடல் மரம் அன்று; ஒரு கொடி. அதைக் கூரைமேல் படரவிடின் காய் கூரையின் மேல் படுத்துக் கொண்டிருக்கும்; பந்தர் போடாமல் வாளா விட்டுவிடின் காய் தரையில் படுத்துக் கிடக்கும். எனவே, தலைகீழாய்த் தவஞ் செய்வோர்போல் நீளமாகத் தொங்குவதும் மக்களுக்கு மிகவும் அறிமுகமாகிப் பெரும்பயன் தருவதுமாகிய காய் முருங்கைக் காயே, எனவே, அதற்குத் தவசி என்னும் பெயர் பொருந்தலாம். மற்றும் ஒருவகைப் பொருத்தும் கூறலாம்:-

தவசிகள் நீருக்குள் மூழ்கியும் நிலத்திற்குள் புதைந்தும் வெளியில் புற்றுமாய் மரமுமாய் உற்றும் உடலை மறைத்துத் தவஞ் செய்வது உண்டல்லவா? அதுபோல, முருங்கை

விதையின் முளைக்கும் ஆற்றல் மரம் முழுவதற்குள்ளும் மறைந்திருக்கின்றது. விதையை ஊன்றினால்தான் முளைக்கும் என்றில்லை. மரத்தின்எப்பகுதியிலிருந்தும்கிளையையோ அல்லது மரத்துண்டையோ வெட்டி நட்டாலும் முளைத்து விடும். விதையின் ஆற்றல் மரத்துக்குள் மறைந்து, எப்போது நாம் செயல்படுவோம் என்று தவங்கிடப்பது போல் இருக்கின்றது. இவ்வகையிலும் முருங்கை விதை தவசியோடு ஒருபுடை ஒப்புமை உடைத்து. எனவே, முருங்கை தவசியாயிற்று. இஃது ஒப்புமையால் பெற்ற பெயராகும்.

## 5-4 முருங்கைப் பிசின்:

### 5-4-1 பட்டினத்தார் பாடல் — *(திருவிடைமருதூர்-1)*

**"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி**
**ஒடே எடுத்தென்ன உள்ளன் பில்லாதவர், ஓங்கு**
**விண்ணோர்**
**நாடேய் இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்**
**வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே".**

என்பது பட்டினத்தார் பாடல். இறைவனிடம் உள்ளன்பு-உண்மையான அன்பு இல்லாதவர்கள், உண்மைத் தவசியர் போல் காட்டில் திரியினும், நீரும் உணவும் இன்றிக் காற்றை மட்டும் உட்கொள்ளினும், கந்தை கட்டி ஓடு கொண்டு இரந்துண்ணினும் பயன் இல்லை. மெய்யன்பர்கள், மனைவி மக்களுடன் வீட்டிலேயிருந்து தவஞ்செய்யினும் முத்தியின்பம் பெறுவர் - என்பது பாடலின் கருத்து. பட்டினத்தாரின் சுவையான மற்றொரு பாடலையும் பார்க்கலாம்:-

*(பொது-19)*

**"மாத்தா னவத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும்**
**நீத்தார் தமக்கொரு நிட்டை யுண்டோ நித்தன்**
**அன்புகொண்டு**

**வேர்த்தால் குளித்துப் பசித்தால் புசித்து விழிதுயின்று**
**பார்த்தால் உலகத் தவர்போல் இருப்பர் பற்றற்றவரே''.**

உண்மையாகவே பற்றைத் துறந்த தவசிகள், உலக மயக்கத்தினின்றும் விடுபட்டு, இறைவனிடம் அன்புற்று, உலகில் உள்ள இல்லறத்தார் போலவே, உடம்பு வியர்த்தால் குளிப்பர்; பசியெடுத்தால் உண்பர்; உறக்கம் வரின் உறங்குவர்; பார்ப்பதற்கு மற்றவர் போலவே காணப்படுவர்-என்பது பாடல் கருத்து.

### 5-4-2. விட்டதடி உன் ஆசை:

இத்தகைய மெய்யன்பர்கள் 'இல்லறத் துறவியர்' எனப் படுவர். ''விட்டதடி உன் ஆசை விளாம்பழ ஓடேபோல்'' என்னும் மெய்யுணர்வுப் பாடலின்படி, அதாவது - நன்கு பழுத்த விளாம்பழத்தின் உட்கூடு மூடியிருக்கும் ஓட்டோடு ஒட்டிய நிலையிலிருந்து பிரிந்து உள்ளே ஒட்டாமல் இருப்பது போல், இவர்கள் உலகோடு ஒட்டியும் ஒட்டாமல் இருப்பர்.

### 5-4-3 பாம்பாட்டி சித்தர் பாடல்:-

இவ்வாறு உலகோடு ஒட்டியும் ஒட்டாமல் இருக்கும் நிலைக்குப் பாம்பாட்டி சித்தர் இரண்டு அழகான உவமைகள் கூறியுள்ளார். தண்ணீரில் இருந்தும் தாமரையிலை தண்ணீரோடு ஒட்டாமல் இருப்பது போலவும், முற்றிய புளியம்பழம் ஓட்டுக்குள் இருந்தும் அதனோடு ஒட்டாது உள்ளே தனித்திருப்பது போலவும் உலகோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்க வேண்டும் என்பது பாம்பாட்டி சித்தரின் கருத்தாகும். அவர்தம் பாடல்கள் வருமாறு:-

**'' தாமரை யிலையினிலே தண்ணீர் தங்காத்**
**தன்மைபோல் சகத்தாசை தள்ளிவிட் டெங்கும்**
**தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்**
**தொழுது தொழுது தொழு தாடாய் பாம்பே''** (70)

"சொல்லும் புளியம் பழத்தினோடு போலவே
சுற்றத் திருந்தாலும் அவர் தொந்தங்கள் அற்று
நில்லு மனதே பரநின் மலத்திலே
நின்றுளைதான் வெறும்பாழென் றாடாய் பாம்பே" (72)

மற்றும் திருவேங்கடநாதர் அருளியுள்ள கீதாச்சாரத் தாலாட்டு என்னும் நூலிலும் புளியம்பழக் கருத்து வந்துள்ளது. பாடல்:

"பற்றிடும் காயமும் தானும் பன்னாள் ஒன்றா யினும்பின்
உற்ற புளியம் பழமும் ஓடும் ஒப்பார் என்றவரோ" (98)

இன்னும் இத்தகைய கருத்து பலநூல்களில் ஒப்புமை யாகக் கூறப்பட்டுள்ளன. விரிப்பின் பெருகும்.

முருங்கைப் பிசினும் இத்தன்மை உடையதே. பிசின் என்பது ஒட்டக் கூடியது. ஒட்டுவதில் வேலம் பிசின் மிகவும் உறுதியானது. ஆனால் முருங்கைப் பிசினோ ஒட்டுவதற்கு அவ்வளவாக ஏற்றதன்று. இஃது ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பது. முருங்கைப் பிசினால் ஒட்டிப் பட்டறிந்து பார்த்தால் உண்மை விளங்கும். எனவே, ஒட்டியும் ஒட்டாமல் இருக்கின்ற தவசி போன்ற முருங்கைப் பிசினும் ஒருவகைத் தவசியாகும். இந்தத் தவசியை முருங்கை மரத்திலிருந்துகூட எளிதாகப் பிரித்து விடலாம். இப்பெயர் ஒப்புமையால் உற்றதேயாகும்.

## 5 5 நரி முருங்கை:

முருங்கையில் நரி முருங்கை என ஓரினம் உண்டு. இதற்குத் 'தவசு முருங்கை' என்னும் பெயர் தரப் பட்டுள்ளது. நரி, தவசியைப் போல், நல்ல குணமுடையது மாதிரி நடிப்பதால் இப்பெயர் நல்கப்பட்டது போலும்.

### 5-6 தானியம் தவசு:

தவசிக்கும் முருங்கைக்கும் இன்னொரு வகையிலும் தொடர்பு கூறலாம். வீடு வாசல், நகை நட்டு, துணி மணி, நிலம் நீர், தோப்பு துரவு முதலிய இரட்டைகளைப்போல் 'தானியம் தவசு' என்னும் இரட்டையைக் கூறுவதும் உலகியல் மரபு. தவசு என்பது பொதுவாகத் தானிய வகையைக் குறிப்பினும், சிறப்பாக, வலிமை தரும் உயர்ந்த தானிய வகையை — உயர்ந்த உணவுப் பொருள் வகையைக் குறிக்கும் எனலாம். உலக வழக்கோடு இலக்கிய வழக்கிலும் இஃது இடம் பெற்றுள்ளது. தவசு என்பதோடு 'அம்' சாரியை சேர்த்துத் 'தவசம்' என்பதும் உண்டு. இதனைக் குற்றாலக் குறவஞ்சி நூலில் உள்ள,

**"சலவையோ பட்டோ தவச(ம்) தானியமோ"**

என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம். தவசு மரம் என்பதற்கு நாட்டு வாதுமை மரம், காட்டு மாமரம் என்னும் பொருள்கள் அகர முதலியில் தரப்பட்டுள்ளன. வாதுமைப் பருப்பும் மாம்பழமும் உடலுக்கு வலிமையூட்டிக் காம உணர்வைத் தூண்டுவன. முருங்கையின் விதை-கீரை-பூ ஆகியவையும் அத்தகையனவே. முருங்கை விதையைச் சிறப்பாகத் தவசம் - தவசு எனலாம். எனவே, தவசு (வலிய விதை) உடைய மரம் தவசியாகும்.

**தவசு பிள்ளை:**

சமையல்காரருக்குத் 'தவசு பிள்ளை' என்ற பெயர் உண்டு. தவசிக்குச் சமையல் செய்பவர் தவசு பிள்ளை என்று பொருள் கூறப்படுகிறது. இதனினும், தவசு என்பதற்கு 'உணவுப் பொருள்' எனப்பொருள் கொண்டு, உணவு சமைப்பவர் தவசு பிள்ளை என்று பொருள் விளக்கம் செய்வது சிறந்தது.

## 6. சார்பும் உடற் கூறும்:

### 6-1 காய்க் கீரை

முருகன், முருகையன், முருகேசன், முருகவேள், முருக சாமி, முருகரத்தினம் முதலிய 'முரு' என்று தொடங்கும் பெயர்களை உடைய ஆடவரைக் கணவராகக் கொண்ட பெண்டிருள் சிலர், முருங்கைக்கீரை, முருங்கைக்காய் எனக் கூறுவதில்லை. தம் கணவர் பெயரின் தொடக்கத்தில் உள்ள 'முரு' என்பது முருங்கையின் தொடக்கமாகவும் இருப்பதால், தம் கணவர் பெயரைச் சொல்லக்கூடாது என்ற பழைய மரபின்படி இந்தக் கீரை-காய் பெயர்களை யும் உரிய முறையில் கூறுவதில்லை. பதிலாக, முருங்கைக் கீரையை மரத்துக் கீரை எனவும், முருங்கைக் காயை மரத்துக் காய் எனவும் கூறுவர். சா.சி.பி. அகர முதலி காய்+கீரை இரண்டையும் இணைத்து, காய்க் கீரை = முருங்கைக் கீரை, எனப்பொருள் விளக்கம் செய்துள்ளது. மரத்துக் கீரை, மரத்துக்காய் என்னும் உலக வழக்குப் பெயர்களும் காய்க் கீரை என்னும் அகர முதலிப் பெயரும் சார்பினால் பெறப்பட்டவை.

முருங்கை மரத்தைப்போல், பெரும்பாலும், வேறு மரங்களில், காயும் கீரையும் (இலையும்) ஒருசேர உணவுக்குப் பயன்படுவதில்லை. மற்ற மரங்களில், பெரும்பாலும் காய் உணவுக்குப் பயன்படின் கீரை பயன்படாது; கீரை (இலை) உணவுக்குப் பயன்படின் காய் பயன்படாது. இதனால்தான், இரண்டாலும் பயன்படும் முருங்கை மரத்தின் இலை, 'காய்க் கீரை' எனப்பட்டது.

### 6-2 கந்தகம்

முருங்கைக்குக் கந்தகம் என்னும் பெயர் ஒன்று சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது. இதற்குத்

தெளிவான பெயர்க்காரணம் (எனக்குத்) தெரியவில்லை. கந்தகம் என்பதற்கு எத்தனையோ பொருள்கள் உண்டெனினும், கந்தகம் என்பது ஒருவகைத் தாதுப் பொருள் எனப் பொருள் கோடலே ஈண்டு ஏற்றது. கந்தகத்தின் இயல்பு, முருங்கையின் உறுப்புகளுள் ஒன்றிலோ பல வற்றிலோ பொதிந்திருக்காலம். இக்கருத்து சரியாயின் இப்பெயர் உடற் கூறால் பெறப்பட்டது எனலாம்.

## 7. ஐரோப்பிய மொழிப் பெயர்கள்:

### 7·1 பிரெஞ்சுப் பெயர்கள்

பிரெஞ்சு மொழியில், முருங்கை, மொராங்க் (Moringe), மொராங்கா (Moringa), எனப் பெயர் பெற்று உள்ளது. (Moringa) என்பதை ஆங்கிலத்தில் 'மொரிங்கா' என ஒலிப்பர், in என்பது ஆங்கிலத்தில் 'இன்' என ஒலிக்கப் பெறும், பிரெஞ்சிலோ 'in' என்பது 'ஆன்' (ஆங்) என ஒலிக்கப் பெறும். எனவே, Moringa என்பதைப் பிரெஞ்சு மொழியில் 'மொராங்கா' என ஒலிக்க வேண்டும். பிரெஞ்சுக்காரர்கள், தமிழ் நாட்டில் உள்ள புதுச்சேரி-காரைக்கால் (Pondicherry State) பகுதியை ஆண்டபோது முருங்கை என்பதை 'மொராங்கா' என ஒலித்துத் தம் மொழியில் ஏற்றிக் கொண்டிருக்க வேண்டும். புதுச்சேரி என்னும் பெயரைப்' பொந்திஷெரி' (Pondichery) என்று ஒலித்த பிரெஞ்சுக்காரர்கள், முருங்கையை மொராங்கா என்றாக்கியதில் வியப்பு இல்லையல்லவா?

#### 7·1-1 ஏழைகளின் மரம்:

லூசியான் எம் ழிபுவான் (Lucien M. Giboin) என்பவர் எழுதிய ''Enpitome' De Botanique Et De Matiere

**Medieale De L' Inde"** என்னும் பெயருடைய—இந்திய மரஇன மருத்துவம் பற்றிய சுருக்கத் தொகுப்பான பிரெஞ்சு நூலில், இந்திய மொழிகள் சிலவற்றிலும் ஆங்கிலத்திலும் முருங்கைக்குத் தரப்பட்டுள்ள பெயர்களைப் பின்வருமாறு கூறியுள்ளார்:

**"MORINGA PTERYGOSPERMA Gaertner. Syn. Moringa oleifera Lamk. Sobhanjana, Sigru (Sanscrit), Mourounguemaram (Tam), Sajina (Beng), Sahinjan (Hind), Moronguier ou Arbre des Pauvres (Pondich), The Drum-Stick ou Horse-radish tree (Angl.")**

இதன் பொருள் விவரமாவது:- முருங்கைக்கு, சம்சு கிருதத்தில் சோபாஞ்சனா, சிக்ரு என்னும் பெயர்களும், தமிழில் முருங்கே மரம் என்னும் பெயரும், வங்காளத்தில் சஜினா என்னும் பெயரும் இந்தியில் சகிஞ்சன் என்னும் பெயரும், ஆங்கிலத்தில் **Drum-Stick, Horse-radish** (ட்ரம் ஸ்டிக், ஃஆர்சு ரேடிஷ்) என்னும் பெயர்களும் உண்டு என்பது இதன் கருத்தாகும்.

இந்தப் பகுதியில் ஆங்கிலப் பெயருக்கு முன்னால் உள்ள **Moronguier ou Arbe des Pauwes (Pondich.)** என்னும் பகுதி குறிப்பிடத்தக்கது. இதன் கருத்தாவது:- புதுச்சேரிப் பகுதியில் இந்தமரம் (**Moronguier**) மொரொங்குயே எனப்பெயர் வழங்கப்படுகிறது; இஃது ஏழைகட்குப் பயன்படும் மரமாகும் என்பது கருத்து. **Moronguier** என்பதன் இறுதியில் உள்ள **R** என்னும் எழுத்து ஒலிப்பு பெறாத ஊமை (**Silent**) எழுத்தாகும்.

பிரெஞ்சு மொழியில் மரப் பெயர்கள் 'ier' என்னும் ஈற்றில் முடியும். எடுத்துக்காட்டாக, முக்கனி மரப் பெயர் களைப் பார்ப்போம்: மாமரம் = **Manguier.** வாழை மரம் = **Bananier.** பலா மரம் = **Jaquier** என்பன. எனவே

Moronguier என்பதின் ஈற்றில் உள்ள 'ier' என்பதை நீக்கி ஒலித்தால்,'மொரொங்குய்' என ஒலிக்கப்பெறும். அதாவது, புதுச்சேரிப் பகுதியில் இவ்வாறு ஒலிக்கப் பெறுகிறதாம். முருங்கை என்பதைச் சிலர் கொச்சையாக 'மொரொங்குய்' என ஒலிப்பது இயல்பே. முருங்கை ஏழைகள் பயன்படுத்தும் மரம் என்னும் கருத்து குறிப்பிடத் தக்கது (மேலும் மானத்தை வாங்காமல் இதோடு விட்டாரே).

அன்றாடம் வேலை செய்து கூலி பெற்று உணவுப் பொருள் வாங்கி ஆக்கியுண்ணும் ஏழை மக்கள், காற்றுடன் மழை கலந்து பெய்யுங்காலத்தில் வெளியில் சென்று வேலை செய்ய முடியாமையால் உணவின்றி வருந்துவர். அப்போது, காற்று மழையால் முருங்கை மரங்கள் ஒடிந்து விழுந்து கிடக்கும்'. அந்த மரக்கீரையைக் கொண்டு வந்து உப்பிட்டுத் துவட்டி உண்டு, சோறில்லாமலே அன்றைய நாளைக் கழிப்பது ஏழைகளிடையே உண்டு. முருங்கை ஏழைகளின் மரம் என்பது சரிதானே.

இதுகாறுங் கூறியவற்றால், முருங்கை என்னும் தமிழ்ப் பெயரே, பிரெஞ்சுக்காரராலும் மரநூலாராலும், மொராங், மொராங்கா, மொரொங்குய், மொரிங்கா எனப் பலவாறு திரித்து வழங்கப்பட்டது என்பது புலனாகும்.

## 7-2. ஆங்கிலப் பெயர்கள்:

### 7-2-1. Drum Stick Tree:

குட்டையும் கட்டையும் சுணையுமா யில்லாமல், சிறிது நீளமாகவும் மெல்லியதாகவும் வழவழப்பாகவும் உள்ள வெண்டைக் காய்க்கு ஆங்கிலேயர் தம் மொழியில் 'Lady's Finger' எனப் பெயரிட்டனர். அதாவது, - 'பெண்ணின் கை விரல்' என்பது பொருளாகும். பெண்களின் கைவிரல் போல் வெண்டைக் காய் உள்ளதாம். முருங்கை மரத்தை

விட்டார்களா என்ன! இதற்கு 'Drum - Stick Tree' எனப் பெயரிட்டனர். அதாவது, - 'முரசு அடிக்கும் கோல் (தடி) போன்ற காய் காய்க்கும் மரம்' என்று இதற்குப் பொருளாம். சில மரத்துக் காய்கள் ஓரடி முதல் இரண்டடி நீளம் வரையும் இருப்பதுண்டு. இந்த ஆங்கிலப் பெயரை உடற் கூறாலும் சார்பாலும் ஒப்புமையாலும் பெற்ற பெயர் எனலாம்.

## 7-2-2. Horse - radish:

இப்படியொரு பெயரும் முருங்கைக்கு ஆங்கிலத்தில் உண்டு என ழிபுவான் கூறியுள்ளார். Horse - radish என்றால், சுவையான உணவுக்குப் பயன்படும் காரமான வேரையுடைய கிழங்குச் செடிவகை என்று பொருளாம். முருங்கை மிகவும் சுவையான உணவு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இந்தப் பெயர் முருங்கைக்குப் பொருத்த முடையதாகத் தெரியவில்லை. இப்பெயர் ஒருகால் முள்ளங்கிக்குப் பொருந்தலாம். முள்ளங்கிக்கு ஆங்கிலத்தில் Radish என்னும் பெயர் சொல்லப்படுகிறது.

## 8. தவசு முருங்கை:

முருங்கையில் 'தவசு முருங்கை' என்னும் ஒரு வகை உண்டு. இது, இக்கட்டுரையில் முன்னர்ச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சி.பி. அகர முதலியில் தவசு முருங்கை, தவ முருங்கை என்னும் பெயர்கள் 'நரி முருங்கை' என்னும் பொருளுடன் இடம் பெற்றுள்ளன. இம்முருங்கை பற்றிய செய்தி, அவ்வகர முதலியில் உள்ளவாறு அப்படியே வருமாறு:-

''இதன் இலைச்சாறு உடம்புக்குக் குளிர்ச்சி. கபத்தை அறுத்து மலத்தை யிளக்குந் தன்மையது. குழந்தைகளுக்கு அம்மை கண்டால் இதைக் கொடுப்பதுண்டு. கோழையை

அகற்றும். இலையை இடித்து வதக்கி அடிபட்ட காயங்களுக்கும் வெளி விரணங்களுக்கும் வைத்துக் கட்டலாம். இதன் கஷாயம் சுவாச காசம், சிணுக்கு இருமல் இவைகளைப் போக்கும்''.

இப்பண்புகள் அனைத்தும் பொதுவான முருங்கைக்கும் உண்டு என்பது முன்னர் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 8-1. முதலியார்:

'முதலியார்' என்னுஞ் சொல்லுக்குத் தவசி முருங்கை என்னும் பொருளை சா.சி.பி. அகர முதலி தந்துள்ளது. முக்கியமான-முதன்மையான பயன் தரக்கூடியது என்னும் கருத்தில் இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். பாடலிலும் இந்தப் பெயர் எடுத்தாளப்பட்டுள்ளது:

**'' தவசி என்ற முதலியார் பட்டைச் சாற்றில்**
**தவறாது புகட்டியே கொழுவைக் காய்ச்சி......''**

(குருநூல்)

என்னும் பாடல் பகுதியில், முதலியார் என்னும் பெயர் உள்ளமையும், இந்த முருங்கைப் பட்டைச் சாற்றில் உலோகத்துண்டு (கொழு) காய்ச்சப்படும் என்னும் செய்தியும் அமைந்திருத்தலைக் காணலாம். பொதுவான முருங்கைப் பட்டைச்சாறு, உலோகங்களைக் காய்ச்சிப் பதன் செய்து பற்பம் (பஸ்பம்) செய்ய உதவும் என முன்னர்க் கூறியுள்ள கருத்து, இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது. இந்த மரத்தை, 'தவசி முருங்கைச் செடி' எனச் சித்த வைத்திய அகராதி கூறுகிறது.

## 9. பெயர்களும் நூல்களும்:

ஊருடம், ஊருடை முதலி -, கிழவி என்னும் பெயர்கள் மூலிகை வைத்திய அகராதியிலும், ஊருடை - கந்தகம்

என்பன வைத்திய மலை அகராதியிலும், ஊருடை முதலி அமுத சாகர நூலிலும், ஊருடை மரம் - கிழவி தானிக மரம் - தவசி முருங்கைச் செடி - மூலகப மரம் - முகக் கந்தமரம் என்பன சித்த வைத்திய அகராதியிலும், காம விர்த்தினி என்பது கண்ணுசாமி பிள்ளையின் பதார்த்த குண அரும்பொருள் விளக்க நூலிலும், ஊருடை முதலியார்-சீக்கிர பத்திரம் என்பன ஜூபிலி தமிழ்ப் பேரகராதியிலும், பிரம்ம விருட்சம் என்பது தமிழ்க் கலைக் களஞ்சியத்திலும், மற்றவை சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் - ஆங்கில அகர முதலியிலும் இடம் பெற்றுள்ளன.

**10. வடமொழிப் பெயர்கள்:**

வடமொழியில், மரிகம், பாரித்திரம், பீரோத்தம், சிக்குரு, சோபாஞ்சனம், கிரஞ்சனம் முதலிய பெயர்கள் முருங்கைக்குத் தரப்பட்டுள்ளன. இவற்றின் பெயர்க் காரணங்களை வடமொழியாளரிடம் கேட்டறிய வேண்டும்.

## 9. இங்கேயும் ஒரு கைகேயி

(இது கரிசலாங் கண்ணியைப் பற்றியது).

**1. ஒப்புமையால் பெற்ற பெயர்:**

இராமனின் தாயாகிய கோசலைக்குக் கைகேயி சக களத்தியாவாள். ஆடவர் ஒருவரை மணந்து கொண்ட சம நிலையினராகிய பெண்டிர் இருவர் சக களத்தி எனப்படுவர். உடன்பிறந்தார் என்பதுபோல், சக களத்தியரை, உடன் மணந்தார் - உடன் மனைவியானார் என்று கூறலாம். பேச்சு வழக்கில் இப்பெயரைச் 'சக்காளத்தி' எனக் கொச்சையாக வழங்குவர். இவ்வடமொழிப் பெயருக்குத் தமிழ்ப் பெயர் உண்டு. பேச்சு வழக்கில் ''ஒத்தா-ஒப்படியா''

என்று சொல்வதைக் கேட்டிருக்கலாம். இதன் திருத்தமான வடிவம் 'ஒத்தாள் - ஓர் படியாள்' என்பதாகும். ஒத்த - ஒரு படித்தான தகுதி யுடையவள் என்னும் பொருளில் இந்த ஆட்சி உள்ளது. மாற்றவள், மாற்றாள் என்பனவும் இப்பொருளினவே.

**1-1. கைகேயி அறிமுகம்:**

சக களத்திகள் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொண்டு போரிடுவ துண்டு. இது 'சக்காளத்திப் போராட்டம்' எனப்படுகிறது. சக களத்தியர் அல்லாத பெண்டிர் இருவர் ஒருவரோடு ஒருவர் வாய்ச் சண்டை போடும்போது, அடி என் மாமியாரே - அடி என் மருமகளே - அடி என் நாத்தனாரே - அடி என் ஓரகத்தி - என்று திட்டிக் கொள்ளாமல், அடி என் சக்காளத்தி என்று திட்டிக் கொள்வதிலிருந்து, ஒத்தாளும் ஓர்படியாளுமாகிய சக களத்திகளின் நிலைமை புரியும். இராமாயணக் கதை மாந்தருள், தசரதனின் முதல் மனைவியாகிய கோசலைக்கு, இரண்டாம் மனைவியாகிய கைகேயி சக களத்தியாவாள் என்பதைக் குறிப்பிடவே இவ்வளவு தொலைவு பயணஞ் செய்ய நேர்ந்தது. கைகேயி இங்கே வரக் காரணம் என்ன?

**1-2. சக களத்திப் போராட்டம்:**

இராமன் முடிசூடின் அவன் தாய் கோசலையின் கை ஓங்கிவிடும்; கோசலை பார்த்துக் கொடுப்பது தான் கைகேயிக்கு உரியதாகும். இரவலர்க்கு ஒன்று ஈயவேண்டு மெனினும் கைகேயி கோசலையைக் கேட்டே தரவேண்டி வரும். உதவி வேண்டிக் கைகேயியின் தாய் வீட்டார் வரின், கோசலையின் செல்வத்தையே காண்பர் அவர். கைகேயியின் துணையாகிய கூனி, இனி, கோசலையின் தாதியர்க்கு அடிமை செய்ய நேரும். அதனால் இராமனைக் காடு ஏகச் செய்து பரதனை நாடாளச் செய்யவேண்டும் - எனக் கூனி

கைகேயிக்குக் கெடுமதி கூறினாள். கம்ப இராமாயணம் - அயோத்தியா காண்டம் - மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் இச்செய்திகளைக் காணலாம். பாடல்கள் வருமாறு,-

**"வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே**
**பேதை நீ பித்தி நிற்பிறந்த சேயொடும்**
**மாதுயர் படுக; நான் நெடிது உன் மாற்றவள்**
**தாதியர்க்கு ஆட்செயத் தரிக்கிலேன் என்றாள்"** (61)

**"புரியும் தன் மகன் அரசுஎனில் பூதலம் எல்லாம்**
**எரியும் சிந்தனைக் கோசலைக்கு உடைமை ஆம்;**
**என்றால்,**
**பரியும் நின்குலப் புதல்வற்கும் நினக்கும் இப்பார்மேல்**
**உரியது என்? அவள் உதவிய ஒரு பொருள் அல்லால்"**
(78)

**"தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்**
**ஈண்டு வந்துஉனை இரந்தவர்க்கு இருநிதி அவளை**
**வேண்டி ஈதியோ வெள்குதியோ விம்மல் நோயால்**
**மாண்டு போதியோ மறுத்தியோ எங்ஙனம் வாழ்தி"?**
(79)

**"சிந்தை என் செயத் திகைத்தனை, இனிச் சில நாளில்**
**தம்தம் இன்மையும் எளிமையும் நிற்கொண்டு தவிர்க்க**
**உந்தை உன் ஐ உன்கிளைஞர் மற்றுன் குலத்துள்ளோர்**
**வந்து காண்பது உன் மாற்றவள் செல்வமோ?**
**மதியாய்!"** (80)

இப்பாடல்களால் சக களத்திப் போராட்டம் புலப் படும். இனிய நல்ல கோசலை, 'எரியும் சிந்தனைக் கோசலை' எனப் பழிக்கப்பட்டுள்ளாள். சக களத்தியைக் குறிக்க, 'மாற்றவள்' என்னும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

இனி, மர இனத்தில், கோசலை எது-கைகேயி எது எனக் காண்போம்: பொன்னாங்கண்ணி கோசலையாகும்; கரிசலாங் கண்ணி கைகேயி யாகும். இவற்றுள் சககளத்தி-ஒத்தாள்-ஓர்படியாள் என்ற அளவில் உள்ள ஒத்த நிலை என்ன? மாற்றவள் என்ற நிலையில் உள்ள போட்டி என்ன?

## 1-3 ஒற்றுமையும் வேற்றுமையும்;

ஒத்த நிலை கண்ணுக்குக் குளிர்ச்சி தருவது. போட்டி நிலையாவது, குளிர்ச்சி தருவதில் பொன்னாங் கண்ணி யினும் குறைந்த தாகிய கரிசலாங்கண்ணியும், பொன்னாங் கண்ணிக்கு உரிய பெயர்களைப் பெற்றிருப்பதாகும். கண்ணுக்கு நல்லது செய்வதால்-கண்ணுக்கு இனிமை செய் வதால், கண்ணி, கண்ணுக்கு இனியாள் என்னும் பெயர்கள் இரண்டுக்குமே உண்டு. இரண்டுமே, பெயரின் இறுதியில், பொன்னாங் **கண்ணி**-கரிசலாங் **கண்ணி**-எனக் கண்ணி என்னும் பெயரால் முடிந்திருப்பது காண்க. ஒத்த பெயரு டைய இரண்டிற்கும் உள்ள வேற்றுமையை மேலும் காண்பாம்.

தசரதனின் மனைவிமார் என்ற ஒற்றுமையுடைய கோசலைக்கும் கைகேயிக்கும் இடையே வேற்றுமை உண்டு. கோசலை,

> **"குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை"**
> **"தூய கோசலை",**

> **"மறு இல் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்" என்று புகழப்பட்டுள்ளாள். கைகேயியோ,**

> **"தீயவை யாவையினும் சிறந்த தீயாள்"**

> **"நாகம் எனும் கொடியாள்," "நாண் இலன்,"**

> **"தன் நேர் இல்லாத் தீயவள்"**

**" நச்சுத் தீயே பெண் உரு அன்றோ?",**

**" மரம்தான் என்னும் நெஞ்சினள், நாணாள், வசை பாராள்",**

**" அசனி ஏறு என வெவ் உரை வல்லவள்",**

**" நஞ்சே அனையாள்",**

**" பன்னருங் கொடு மனப் பாவி",**

என்றெல்லாம் பலவாறு பழிக்கப்பட்டுள்ளாள். தன் மகன் பரதனுக்கு நாடும் மாற்றவள் கோசலை மகன் இராமனுக்குக்காடும் கிடைக்கச் செய்துள்ளாள்; மன்னர்கள் பலர் தன் காலில் விழுந்து வணங்கும்படியுள்ள தசரதன் (கைகேயியின்) காலில் விழுந்து கெஞ்சியும் கல்மனம் கரையாதவளானாள்.

**" கால்மேல் வீழ்ந்தான், கந்துகொல் யானைக் கழல் மன்னர்**
**மேல்மேல் வந்து முந்தி வணங்கி மிடை தாளான்"**

என்பது கம்பராமாயணப் பாடல் பகுதி (அயோத்தியா காண்டம்-கைகேயி சூழ்வினைப் படலம்-19).

கோசலையோ, பரதனுக்கு நாடு-எனக்குக் காடு என்று கூறிய தன் மகன் இராமனை நோக்கி, "மூத்தவன் இருக்க இளையவன் ஆள்வது முறையன்று என்ற ஒன்றைத் தவிர, மற்றபடி, பரதன் உயர் பண்பினன் - உன்னிலும் நல்லவன்-பிழையில்லாதவன்-எனவே, அவனுக்கு நீ ஆட்சியைத் தந்து அவனோடு ஒற்றுமையொடு வாழ்வாயாக!" என்று அன்போடு கூறினாள். பாடல்கள் வருமாறு:-

**" முறைமை அன்று என்பதொன் றுண்டு; மும்மையின்**
**நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால்;**
**குறைவிலன் எனக் கூறினள், நால்வர்க்கும்**
**மறு இல் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்?"**

**"என்று பின்னரும், மன்னவன் ஏவியது**
**அன்று எனாமை, மகனே! உனக்கு அறன்;**
**நன்று, நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து**
**ஒன்றி வாழுதி ஊழிபல என்றாள்."**
*(அயோத்தியா காண்டம்-நகர் நீங்கு படலம்-4,5)*

கோசலைக்கும் கைகேயிக்கும் உள்ள வேறு பாட்டைக் காண்க. இதேபோல், பொன்னாங் கண்ணிக்கும் கரிசலாங் கண்ணிக்கும் வேறுபாடு உண்டு. அவையாவன:- கண்ணுக்கு நன்மை செய்வதில் பின்னதினும் முன்னது சிறந்தது. பொன் இனிப்புச் சுவையுடையது; கரிசல் கசப்புச் சுவை யுடையது. பொன் உடம்புக்குத் தட்பம் (குளிர்ச்சி) தருவது; கரிசல் உடம்புக்கு வெப்பம் தருவது. பொன் மர இனத்தில் இனிப்புப் பிரிவைச் சேர்ந்தது; கரிசல் உறைப்புப் பிரிவைச் சேர்ந்தது. இது பற்றி முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் உள்ளது அப்படியே வருமாறு:-

"பொன்னாங் கண்ணி-சுவை: இனிப்பு; தன்மை: தட்பம்; பிரிவு; இனிப்பு; செய்கை: குளிர்ச்சியுண்டாக்கி- சீதளகாரி - Cooling".

"கரிசலாங்கண்ணி - சுவை: கைப்பு (கசப்பு); தன்மை: வெப்பம்; பிரிவு: கார்ப்பு (உறைப்பு)".

மற்றும், பொன்னாங் கண்ணியின் இலை மெதுவாக வழவழப்பாக இருக்கும். கரிசலின் இலையோ, கைகேயி போல், சொரசொரப்பாகவும் சுணையுடனும் இருக்கும்.

எனவே, இவ்வளவு வேறுபாடு உடைய இரண்டும் ஒரே பெயரைப் பெற்றிருப்பது ஒத்தாள் - ஓர்படியாள் நிலை யாகும். இதனால், கரிசலாங் கண்ணிக்குக் 'கைகேசி' என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது,

கேகயன் மகள்—கேகய நாட்டு அரசன் மகள் ஆதலின் கைகேயி என்னும் பெயர் பெற்றாள் அவள். ஆனால் இங்கே ''கைகேசி' என்று உள்ளதே எனின், தேயம் - தேசம் என்பது போல, யகரமும் சகரமும் ஒத்தொலிக்கும். அதனால் கைகேயி என்பது கைகேசி யாயிற்று. கைகேசி என்னும் பெயராட்சி இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளது. திவ்யப் பிரபந்தம் — பெருமாள் திருமொழியில்,

**'' ... கைகேசி தன்சொற் கேட்டு**
**நன்றாக நானிலத்தை யாள்வித்தேன்''** (9-1)

என வந்துள்ளது.

## 1-4 சீதையொடு போட்டி:

ஈண்டு ஒரு வினா எழலாம்: பொன்னாங் கண்ணிக்குக் கோசலை என்னும் பெயர் எங்கும் கொடுக்கப்படவில்லையே! அது சீதம் (குளிர்ச்சி) உடைய காரணத்தால் சீதை என்னும் மருமகள் பெயர்தானே கொடுக்கப்பட்டுள்ளது! - என்பதே அவ்வினா.

கோசலைக்குப் பதில் சீதை என்றாலும் நிலைமை ஒன்றே. கோசலையின் வாழ்வு, மருமகள் சீதைக்கும் உரியது தானே! கோசலைக்குப் பின் முற்றிலும் சீதைக்கே உரிய தன்றோ! கூனியாலும் கைகேயியாலும் கோசலை மாற்றாளாக எண்ணப்பட்டது போலவே, சீதையும் மாற்றாளாக எண்ணப்பட்டுள்ளாள்.

கைகேயியிடம் கூனி பின்வருமாறு கூறுகிறாள்: சீதையும் இராமனும் அரியணையில் வீற்றிருக்க, உன் மகன் பரதன் வெறுந் தரையில் இருக்கப் போவதை நீ விரும்பு கிறாயா? உன் கணவன் தசரதனுக்கு அஞ்சியே, சீதையின் தந்தையாம் சனகன், உன் தந்தையாம் கேகயனோடு போர் புரியாமல் இருக்கிறான். இராமன் பட்டம் எய்தின், சீதை

தந்தையும் இராமனின் மாமனும் ஆகிய சனகன், உன் தந்தையாகிய கேகயனை அழித்து விடுவான். பிறகு உனக்குத் துணையார்?-என்று கூனி கைகேயிக்கு 'வேப்பிலை' யடித்தாள். பாடல்கள் வருக:-

**"சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்**
**நிவந்த ஆசனத்து இனிது இருப்ப, நின்மகன்**
**அவந்தனாய் வெறுநிலத்து இருக்க லானபோது**
**உவந்த வாறு என்? இதற்கு உறுதியாது? என்றாள்."**

**"காதல் உன் பெருங் கணவனை அஞ்சி அக்கனிவாய்ச்**
**சீதை தந்தை உன்தாதையைத் தெறுகிலன்; இராமன்**
**மாதுலன் அவன்; நுந்தைக்கு வாழ்வு இனி உண்டோ!**
**பேதை! உன்துணையார் உளர் பழிபடப் பிறந்தார்?"**

கைகேயி இரண்டு வரங்களை விளக்கும்போது, ஒன்று என் மகன் உலகாள்வது; மற்றொன்று அந்தச் சீதையின் அகமுடையான் காடாள்வது எனக் கூறியுள்ளாள்:

**"ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால், என்**
**சேய் உலகு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றால்**
**போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்**
**தீயவை யாவையினும் சிறந்த தீயாள்"**

என்பது பாடல். உலக வழக்கில் 'அந்தச் சிறுக்கி சீதை ஆம்படையான்' என்று சொல்வதுபோல, 'சீதை கேள்வன்' என்றாள். இராமன் என்று குறிப்பிடாமல், சீதை கேள்வன் எனக் குறிப்பிட்டிருப்பது, சீதையின்மேல் உள்ள வெறுப்பையும் பொறாமையையும் காட்டுகிறது.

எனவே, சீதை, கோசலை ஆகிய இருவருக்குமே மாற்றாள் நிலையில் கைகேயி இருந்திருக்கிறாள். எனவே, கரிசலாங் கண்ணிக்குக் 'கைகேசி' என்னும் பெயர் ஒப்புமை கருதித் தரப்பட்டதாகும். கைகேசி என்னும் பெயர்

ஈந்ததற்கு இன்னொரு காரணமும் கூறலாம்; அது பின்னர் உரிய இடத்தில் விளக்கப்படும். இப்பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டுள்ளது.

**2. வகைகள்:**

கரிசலாங்கண்ணி தன்னிடம் பூக்கும் பூக்களின் நிறத்தின் அடிப்படையில் நால்வகைப்படும். அவை:- கருநீலம், சிவப்பு, மஞ்சள், வெள்ளை என்பன. இவற்றுள் வெள்ளை மிகுதி யாகக் கிடைக்கும்; மஞ்சள் ஓரளவு கிடைக்கும்; கருநீலமும் சிவப்பும் அரிதாகக் கிடைக்கும். சிவப்பு கிடைப்பது அரிதென்றே கூறலாம். மருத்துவ மூலிகைகள் தொடர்பான நூல்களில் கருநீலமும் மஞ்சளுமே பெரிதும் பேசப்பட் டுள்ளன. கருநீலத்துக்குக் கரிசலாங்கண்ணி என்ற பெயரும் மஞ்சளுக்குப் பொற்றலைக் கையாந்தகரை என்ற பெயரும் தரப்பட்டுள்ளன.

**2-1. இருவேறு கருத்துகள்:**

முருகேச முதலியாரின் பொருட் பண்பு (பயிர் வகுப்பு) நூலில், கரிசலாங்கண்ணி என்ற தலைப்பிலேயே பொற்ற லைக் கையாந்தகரையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. பல அகர முதலிகளிலும் இரண்டும் இணைத்துப் பிணைத்தே அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், அற்புத சிந்தாமணி என்னும் பதார்த்த குண சிந்தாமணி என்னும் நூலிலும், கண்ணுசாமி பிள்ளையின் சித்த வைத்தியப் பதார்த்த குண விளக்கம் என்னும் நூலிலும், பைரவரின் ஆனந்த கந்தம் என்னும் நூலிலும் இரண்டும் தனித்தனித் தலைப்பிலேயே கூறப்பட்டுள்ளன.

**3. பொதுச் செய்திகள்**

**3-1. இடத்தால் பெற்ற பெயர்**

**3-1-1. கரிசலாங் கண்ணி:**

கரிசலாங் கண்ணி என்னும் பெயர் நான்கு வகைக்கும் பொருந்தலாம். அதாவது, கரிசல் மண்ணில் விளையும்

மூலி என்பது இதற்குப் பொருள். கரிசல் மண் என்பது, வளமான கருநிற மண் பகுதியாகும். இம்மண்ணில், இரண்டாயிரம் ஆண்டு காலம் வரைக்கும், எரு - உரம் இடாமலேயே, நீர் பாய்ச்சாமலேயே பயிர் பச்சைகள் விளையக் கூடும் எனப் பண்டைக் காலந்தொட்டு மண்ணி யல் ஆய்வாளரால் (Geologists) கூறப்படுகிறது. இது மிகையாகத் தோன்றினும் கரிசல் மண் நீரை நீண்ட நாளைக்குப் பயன்படும்படி தேக்கி வைத்துக் கொள்ளும் இயல்புடையது என்பதை மறுக்க முடியாது. இதனால் இது பருத்திப் பயிருக்குச் சாலச் சிறந்தது. இத்தகைய வளமான இடத்தில் மூலிகை நன்றாக வளரும் ஆதலின், கரிசலாங் கண்ணி எனப் பெயர் பெற்றதாகக் கூறலாம். இதற்கு இன்னொரு பெயர்க் காரணம் பின்னர்க் கூறப்படும்.

### 3-2. பயனால் பெற்ற பெயர்கள்:

#### 3-2-1. கண்ணி - கண்ணன்:

கண்ணுக்கு நல்லது செய்யும் - இனிமை செய்யும் மூலிகை என்னும் பொருளில், கண்ணி (தை.வ.சு.) கண்ணுக்கு இனியாள், கண்ணன், கண்ணன் மூலி என்னும் பெயர்கள் (சா.சி.பி.) இதற்குத் தரப்பட்டுள்ளன. இவை பயனால் வந்தவை.

#### 3-2-2. திரையில்லான்

இம் மூலிகையை உட்கொள்பவருக்கு நரை திரை வாரா எனப்படுகிறது. நரை = முடி (மயிர்) வெளுத்தல்; திரை = தோல் சுருங்குதல். ஆனந்த கந்தம் என்னும் நூலில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அந்நூலின் பொருள் அடக்கத்தில் கரிசலாங்கண்ணி என்றும், நூலுக்குள்ளே கருசலாங்கண்ணி என்றும் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. நூற்பகுதி வருமாறு:
பதினைந்தாவது உல்லாசம்:

## 19. கருசலாங் கண்ணி கல்பம்:

''ச மூலம் கருசலாங் கண்ணியைப் புஷ்யரவியில் எடுத்து நிழலில் உலர்த்தித் தூள் செய்து கால் பல அளவு காடியில் அரைத்துக் கலக்கிக் காலையில் சாப்பிட்டு நெய் பாலன்னம் அருந்திவர ஒரு மாதத்தில் நோய்கள் அகன்றும் ஆறு மாதத்தில் நரை திரை அகன்றும் சித்தி ஏற்படுகின்றது. அதன் இலையைப் பாதி அளவு கரு எள்ளு சேர்த்து ஆறு மாதம் வரை சாப்பிட நரை திரை அகலும்''.

''சித்திர மூலம், சுக்கு, திப்பிலி, வில்வப் பிஞ்சு, கடுக்காய், நெல்லி, முள்ளி, வாய் விளங்கம், மிளகு, வாய் விடங்கம், தகர விதை, லோத்திரப் பட்டை, கடுகு, செங் கடுகு இவைகளைச் சமனெடை சேர்த்துத் தூள் செய்து, அதற்குச் சமம் கருசலாங் கண்ணியின் காய், பூ, இலை, வேர் இவைகளை நிழலில் உலர்த்திச் சூர்ணம் செய்து சேர்த்து, கருசலாங் கண்ணிச் சாற்றால் 7 தடவை பாவனை செய்து உலர்த்தித் தூள் செய்து கால் பல அளவு பசுவின் பாலுடன் ஆறு மாதங்கள் வரை சாப்பிட நரை திரை அகலும்''.

''இம்முறையையே பொற்றலைக் கையாந்தகரைக்கும் அனுஷ்டிக்க வேண்டும்''.

மேலுள்ள பகுதியால், இம்மூலிகையை உட்கொள்ளின் நரை திரை அகலும் எனவும், கரிசலாங் கண்ணியும் பொற்றலைக் கையாந்தகரையும் ஒத்தனவெனினும் ஈண்டு தனித்தனியே பிரித்துச் சொல்லப்பட்டிருப்பதால் இரண்டிற்கும் சிறு வேறுபாடு உள்ளதெனவும் அறியலாம். திரையில்லான் என்னும் பெயர் (சா. சி. பி.) பயனால் பெற்றது என்பதும் புலனாகும்.

### 3-2-3. தேக ராசம்:

தேக ராசம், தேக ராசிகச் செடி, பொற்றேக ராசம் (பொன் தேக ராசம்) என்னும் பெயர்களும் (சி.வை.அ.) உண்டு. பொற்றலைக் கையாந்தகரை, தன்னை உண்டவர்களின் தேகத்தை (உடம்பை) ராச வடிவாக - பொன் வடிவமாகச் செய்வதால் இப்பெயர்கள் பயனால் பெறப்பட்டவை எனலாம். இப்பெயர்கள் இம் மூலிகைக்கு வடிவால் வந்தன என்ற ஒரு விளக்கமும் பின்னால் தரப்படும்.

### 3-2-4 குழல் மாது:

குழல் என்பதற்குக் கூந்தல் என்ற பொருள் உண்டு. இம் மூலிகை கூந்தலை வளரச் செய்வதால் இப்பெயர் பெற்றது எனலாம். இது தொடர்பாக, முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூலில் உள்ள விவரம் வருமாறு:

''கரிசலாங் கண்ணி இலைச் சாற்றை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் காய்ச்சித் தலைக்குத் தேய்த்துவர, முடி கறுத்துத் தழைத்து வளரும்'' -

இதேகருத்தைச் சா.சி.பி. அகரமுதலியும் கூறுகின்றது. எனவே, இதனைப் பயனால் பெற்ற பெயராகக் கொள்ளலாம். இதனையே, வேறொரு கோணத்தில், வடிவால் வந்த பெயராகக் கொள்ளவும்வாய்ப்பு உண்டு. அது பின்னர் இடம் பெறும்.

### 3-2-5. செய்யுள் சான்று:

இந்த மூலிகை கண்ணுக்கு ஒளியும் உடம்புக்குப் பொற் சாயலும் பொதுவாகப் பல பயன்களும் அளிக்கும் என்பதற்குச் செய்யுட் சான்று வருமாறு;

அ) அகத்தியர் குண பாடம்:

"குரல்கம்மல் காமாலை குட்டமொடு சோபை
உரற்பாண்டு பல்நோய் ஒழியும் - நிறற்சொன்ன
மெய்யாந் தகரையொத்த மீளியண்ணு நற்புலத்துக்
கையாந் தகரையொத்தக் கால்".

"பொற்றலைக் கையாந்தகரை பொன்னிற மாக்கு
முடலை
சுத்தமுறக் கட்குச் சுகங்கொடுக்கும் சிற்றிடையாய்
சிந்தூரங் கட்கு ஆகும், சிந்தை தனைத்துலக்கும்,
உந்திவளர் குன்மம் ஒழிக்கும்,"

**கருத்து:** *கையாந்தகரை, குரல் உறுப்பு நோய், காமாலை, குட்டம், வீக்கம், பாண்டு, பல்நோய் ஆகியவற்றைக் குணப்படுத்தும்; உடலுக்கு மிக்க வலிமையும் பொன்னிறமும் தரும்; கண்ணுக்கு (கட்கு) நலம் செய்யும்; பல சிந்தூரங்கள் செய்ய உதவும்; மனத்தெளிவு உண்டாக்கும்; குன்மம் (வயிற்றுவலி) போக்கும்.*

ஆ) தேரன் வெண்பா

"திருவுண்டாம், ஞானத் தெளிவுண்டாம், மேலை
உருவுண்டாம், உள்ளதெல்லாம் உண்டாம் —
குருவுண்டாம்,
பொன்னாகத் தன்னாகம் பொற்றலைக்கை யாந்த
கரைத்
தன்னாகத் தின்றாகத் தான்",

**கருத்து:** *பொற்றலைக் கையாந்தகரையைச் சமைத்து உண்டால், திருவும் அறிவுத் தெளிவும் மேலான உருவும் மற்ற பல நன்மைகளும் உண்டாகும்; கண்ணொளியும் (குரு) பெருகும்.*

மேலுள்ள செய்யுட் சான்றுகளால், இம்மூலிகையின் பொதுப் பயன்கள் புலனாகும்.

### 3-2-6. மைக் கரிப்பான்

இப் பெயர் சி.வை. அகராதியில் கூறப்பட்டுள்ளது. இதுபற்றி வேலூர் கண்ணப்பரின் ''நம் நாட்டு மூலிகைகள்'' என்னும் நூலில் உள்ளது வருமாறு'':

''கரிசலாங் கண்ணி இலைச்சாற்றை எடுத்து மாதுளம் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போல மை செய்து கண் இமைகளுக்குத் திட்டிவர, கண்கள் மிக்க ஒளியும் கவர்ச்சியும் உடையனவாய் விளங்குவதுடன், கண்நோய் வராமலும் பாதுகாக்கும்''-

இவ்வாறு மை செய்ய உதவிக் கண்ணுக்குப் பயன் அளிப்பதால், பயன் காரணமாக இப்பெயர் தரப்பட்டுள்ளது.

### 3-3 பண்பால் பெற்ற பெயர்கள்

திரிபுரந் தீயிட்டோன், திரிபுரந் தீயிட்டோன் புதல்வன் என்னும் பெயர்கள் சா.சி.பி. அகரமுதலியில் தரப் பட்டுள்ளன. கரிசலாங் கண்ணியினமும் உடலுக்கு வெப்பம் தரும் பண்பினது என்பது இக்கட்டுரையில் முன்னர்க் கூறப் பட்டுள்ளது. எனவே, வெப்பம் தரும் பண்பின் அடிப் படையில் இப்பெயர்கள் தரப்பட்டுள்ளன.

### 3-3-1-2 கரப்பான், கரிப்பான்

இதன் கீரையைச் சமைத்து உண்ணுங்கால் தொண்டையில் கரகரப்பு உணர்வும் ஒரு வகைக் கரிப்புச் சுவையும் தெரியும், (இது சொந்தப் பட்டறிவு). இதனால் இதற்குக் கரப்பான் (சி.வை.அ.) கரிப்பான் (மலை) என்னும் பெயர்கள்

பண்பு காரணமாகத் தரப்பட்டுள்ளன. இந்த அடிப்படையிலேயே, கரிச்சான் பூடு (மூ.வை; மலை), கரிக்கைச் செடி கரிக்கரைச் செடி, கரிச் சிராச் செடி-கரிசனம், கரிக்கன்றுச் செடி (சி.வை.அ.) கரி யுப்பு (பசுமூலிஅகராதி), கரிக்கண்டு (மலை), கரிச்சை, கரிசாரங்கண்ணி (சா.சி.பி.) முதலிய பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பல, கரு நீலப் பூக்களை உடைமையால், கருமை என்னும் அடிப்படையில் நிறங் காரணமாகத் தரப்பட்டவை என்றுங் கூற இடமுண்டு. நிறமும் ஒருவகைப் பண்பு தானே!

## 3-4. சார்பால் பெற்ற பெயர்கள்

### 3-4-1. பனியிருள்:

முன்பனி பெய்யும் முன்பனிப் பருவக் கால இரா நேரத்திலும், பின்பனி பெய்யும் பின்பனிப் பருவக் கால இரா நேரத்திலும் பனி ஈரத்தால் இந்த மூலிகை பயன் பெற்றுச் செழித்து வளரும், கரிசல் என்றால் நீரைத் தேக்கி வைத்திருக்கும் வளமான மண்பகுதி என்றும் அம்மண்ணில் இது நன்றாக வளருமாதலால் கரிசலாங் கண்ணி என்ற பெயர் பெற்றது என்றும் முன்னர்க் கூறப்பட்டது. எனவே, பனியீரம் இதற்கு மிகவும் நல்லது என்பது புலனாகும்.

மற்றும், மரஞ்செடி கொடிகட்குத் தண்ணீர் ஊற்றுபவர் மாலை நேரத்தில் ஊற்ற வேண்டும்; அதனால் நீர் முழுதும் பயன்படும்; வெயில் புறப்பட்டுவிட்ட காலை நேரத்திலோ நண்பகலிலோ ஊற்றினால், நீர் ஆவியாக மாறி வீணாகிவிடும் என்பது ஒரு கருத்து.

எனவே, செழித்து வளர உதவும் சார்பு காரணமாகப் பனியிருள் (சா.சி.பி.) என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

### 3-4-2. பிருங்க ராசம்-தேனீச் செடி

அ) பிருங்கம் என்பதற்கு வண்டு என்னும் பொருள் உண்டு. வண்டுகள் விரும்பித் தேன் உறிஞ்சுவதற்கு உதவும் தலைவன் என்ற பொருளில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இஃதும் சார்பினால் பெற்ற பெயரே. இது, 'பைழ்சச கல்பம்' என்னும் நூலில் தரப்பட்டுள்ளது.

ஆ) சாம்பசிவம் பிள்ளை தமது தமிழ் - ஆங்கில அகர முதலியில் ஓரிடத்தில் "Bee Plant" என்னும் ஆங்கிலப் பெயரால் இம்மூலிகையைக் குறிப்பிட்டுள்ளார். Bee என்றால் தேனீ-வண்டு; Plant என்றால் செடி-பூடு; தேனீச் செடி என்பது இதன் பொருள், இது, பிருங்க ராசம் என்னும் பெயருடன் ஒத்துள்ளமை காண்க.

## 4. தனிச் செய்திகள்

கறுப்பு (கருநீலம்), மஞ்சள் என்னும் இருவகை தொடர் பான பொதுச் செய்திகள் இதுகாறும் கூறப்பட்டன. இனி, ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியே காண்போம்.

### 4-1. கரிசலாங் கண்ணி:

கரிசலாங் கண்ணி என்னும் பெயர், கரிசல் மண்ணில் விளைவது என்னும் இடம் காரணமான பொதுப் பெயர் என்று கூறப்படினும், கருமை மூலிகையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

### 4-1-1. கருநிறம்:

சா.சி.பி. அகராதியில், "கரிசலாங் கண்ணி = கரிசல் + ஆம் + கண்ணி (Blackness + to become + eye)" எனச் சொற்பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது. இங்கே Blackness எனக் கருமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கருநிறத்தின் அடிப்படையிலேயே, கரிசலாங் கண்ணி என்பது, கரசனாங்கண்ணி (பொ.ப. நூல்) எனத் திரிந்தும், கரிசலை (மலை), கரி சாலை, - கரிய சாலை - கருங் கையான், - கருங் கரிப்பான் - கருங்கடாகச் செடி-கருப்புக் கரிசலாங் கண்ணி - மைக் (கறுப்புக்) கரிப்பான் செடி - கருமுருகி மூலி (சி.வை.அ.), கரிய கரிப்பான் - கரியலாங் கண்ணி - கருங்கண்ணி - கருங் கரப்பன் - கருங்கரி சாலை, கரிச்சால் (சா.சி.பி.) என்றெல்லாம் சுருங்கியும் மாறுபட்டும் கூறப்பட்டுள்ளது.

### 4-1-2. கருஞ்சாறு:

இந்த வகையின் பூ கருநிறமானது என்பது ஒருபுறம் இருக்க, இதன் இலையைப் பிழிந்தால் சாறு ஓரளவு கறுப்பாய் இருக்கும் என்பதும் கவனிக்கத் தக்கது. இவற்றை நிறத்தாற் பெற்ற பெயர்களாகக் கொள்ளலாம்.

## 4-2 பொற்றலைக் கையாந் தகரை

### அ) பொன்தலை:

இந்த இனம், மஞ்சள் நிறப் பூக்களை உடைமையின் பொற்றலை எனப்படுகிறது. பொன் + தலை = பொற்றலை யாகும். மஞ்சள் பூ பொன்னிறமாக இருக்குமன்றோ?. அடுத்து, தகரை என்பது ஒரு பூடு வகையைக் குறிக்கும் பொதுச் சொல் ஆகும். தகரை என்னும் பெயரில் சில செடி வகைகள் உள்ளன. ஊசித் தகரை, கருந் தகரை, காட்டுத் தகரை, வெண் தகரை, பேயாவாரைத் தகரை, பொன்னா விரைத் தகரை என்பன தகரைக் குடும்பத்தனவாம்.

இவற்றுள் ஒரு வகையின் இலையைச் சிலர் சமைத்து உண்பதுண்டு. அளவு மீறின் கழியும். ஒருவகைத் தகரையின் காயைச் சிறார்கள் பறித்து நெற்றியில் அடித்துக்

கொள்வார்கள்; அந்தக்காய் பிளந்து சிறு வெடியொலி செய்யும். ஒருவகைத் தகரையின் விதையைக் காப்பிக் கொட்டைக்குப் பதிலாகச் சிலர் பயன்படுத்துவதுண்டு. இது கலப்படமாகும்.

**ஆ) உயர் தகரை:**

ஆனால், பொற்றலைக் கையாந் தகரை, மேற் கூறியுள்ள தகரைகளிலும் வேறானது; உயர்ந்தது. கரிசலாங் கண்ணி இனத்துள் இஃதே உணவுக்கு மிகவும் ஏற்றது. வெள்ளை வகையை இதற்கு அடுத்ததாகச் சொல்லலாம்.

**இ) கையாந் தகரை:**

கையாந் தகரை என இதற்குக் 'கை' என்னும் பெயர் வந்ததற்குத் தெளிவான காரணம் தெரியவில்லை. கண்ணுக்கு நல்லது செய்தலின் கண்ணி எனப்பட்டதுபோல் கைக்கு வன்மையூட்டுவதால் கையாந் தகரை எனப்பெயர் வந்திருக்கலாம் என ஒருவர் கூறினார். இது பொருத்தமாகத் தெரியவில்லை.

இதன் இலை, ஈட்டிபோல் மூன்று அங்குல நீளம் வரையுங்கூட நீட்டிக்கொண்டிருக்கும். கைபோல் நீட்டிக் கொண்டிருப்பதால் கையாந் தகரை என்ற பெயர் வந்திருக் கலாம்' இதற்குக் 'கைவீசி இலை' என்னும் ஒரு பெயர் சா.சி.பி. அகர முதலியில் தரப்பட்டிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று.

'கை' என்னும் சொல்லுக்கு 'ஒப்பனை' (Dressing, Decoration) என்ற பொருள், பிங்கல நிகண்டில் கூறப் பட்டுள்ளது. தலைப்பில் பொன்னிறப் பூ இருப்பது ஒப்பனையாகத் (அலங்காரமாகத்) தோன்றுவதாலும் 'கை' என்னும் பெயர் சேர்க்கப்பட்டிருக்கலாம். அல்லது —

'கை' என்பதற்கு ஒளி (பிரகாசம்) என்னும் பொருள் ஒன்றும் உண்டு. திருவிளையாடற் புராணம் - விடையிலச்சினையிட்ட படலத்தில் உள்ள

**''செங்கை நீட்டித் தினகரன் தோன்றலும்''** (20)

என்னும் பாடல் பகுதி காண்க. ஞாயிறு (தினகரன்) செங்கை நீட்டித் தோன்றுகிறான் என்றால், பொன்னொளி வீசிப் புறப்படுகிறான் என்று பொருளாம். எனவே, இதன் பொன்னிறமான பூ பளபளப்பான ஒளியுடன் தோன்றுவதால் 'கை' என்னும் பெயர் தரப்பட்டிருக்கலாம். பொருந்தும் பெயர்க்காரணம் ஏற்றுக்கொள்ளப் படலாம்.

### 4-2-1. வடிவால் வந்த பெயர்கள்:

மேற்கூறிய பொன்-கை-தகரை பற்றிய விளக்கத்தின் அடிப்படையில் பொற்றாது - கையாந்தகரை (மூ.வை.அ.) கையான்தகரை - பொற்றலைக் கரப்பான் / கரிப்பான் - பீத கேசம் (சி.வை.அ.), கையான் (தை.வ.சு.), பொற்றலை - பொற் கையான் - நற்றலை தேவி, குழல் மாது, வதனப் பூடு, கை கேசி (சா.சி.பி.) என்னும் பெயர்கள் இடப்பட்டுள்ளன.

அ) பொற்றாது - பொன் தாது. தாது என்பதற்குப் பூ, இதழ் என்ற பொருள் உண்டு. பொன்னிறப் பூ உடைய பூடு பொற்றாது. பொற்றலை (பொன்+தலை) என்பது, உச்சியில் பொன் பூ உடையது எனப் பொருள்படும்.

ஆ) **பொற்கையான்** = பொன்னொளி வீசும் பூவுடைய பூடு. பொற்றலைக் கரப்பான் - பொற்றலைக் கரிப்பான் = பொன்னிறப் பூ உடையதும், கரகரப்பான கரிப்புச் சுவையுடையதுமான பூடு. கையான்/ந் தகரை = கை போல் நீட்டிக் கொண்டிருக்கும் இலைகளையுடைய பூடு - அல்லது - பொன்னொளி வீசும் பூடு.

இ) **நற்றலைத் தேவி** = நல் தலை தேவி; நல்ல பொன்னிறப் பூ தலையில் (உச்சியில்) உள்ள தேவி. பூ தலையில் இருப்பதால் தேவி எனப் பெண்பாற் பெயர் தரப்பட்டது.

ஈ) **பீத கேசம்:** பீதம் என்பதற்குப் பொன், பொன்னிறம், மஞ்சள் என்னும் பொருள்கள் உண்டு. பீதாம்பரம் (பீத அம்பரம்) என்றால் பொன்னாடை என்பது பொருள் அன்றோ. கேசம் என்பது தலைமுடியைக் (தலைமயிரைக்) குறிக்கும். எனவே, பொன்னிறப் பூ உள்ள உச்சியை உடையது எனப் பொருள்படும்.

உ) **குழல் மாது:** குழல் என்பதற்குக் கூந்தல் - தலைமயிர் என்ற பொருள் உண்டு. பீத கேசம் என்ற பெயர் போல், பொன்னிற உச்சி உடையது என்றே இதற்கும் பொருள் கொள்ள வேண்டும். குழல் என்பதற்கு, உள்துளை உடைய பொருள் என்னும் பொருள் ஒன்றும் உண்டு. புல்லாங்குழல் முதலிய பெயர்களை நோக்குக. இம் மூலிகையின் ஆண்பூ - பெண்பூ ஆகியவற்றின் அக இதழ்கள் குழாய் (உள்துளை) வடிவின ஆதலின் இப்பெயர் பெற்றதாகவும் கொள்ளலாம். மாது என்பதால், தலைமுடி என்ற அடிப்படையில் பொருள் கொள்ளலே நன்று.

ஊ) **வதனப் பூடு:** வதனம் என்றால் முகம். தலை, கேசம், குழல் என்பவற்றுடன் முகமும் தொடர்புடையதே. முடியுள்ள தலையெனில் அதில் அழகிய முகமும் தன்னில் தானே அடங்கும். எனவே, பொன்னிறமான அழகிய முகத் தோற்றம் உடையது என்னும் பொருளில் இப்பெயர் இடப்பட்டிருக்கலாம்.

**எ) கைகேசி:**

கைகேசி என்னும் பெயர், மாற்றவள்-சக களத்தி என்ற அடிப்படையில் ஒப்புமையால் பெறப்பட்ட பெயு

ராகத் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. இதனை வடிவால் பெற்ற பெயராகவும் கொள்ளவேண்டும். கை கேசி என்பதில் உள்ள 'கை' என்பது, பொற்றலைக் கையாந் தகரை என்பதில் உள்ள 'கை' என்பதைக் குறிக் கும். கேசம் உடையது கேசி. இந்தக் 'கேசி' என்பது அப் பெயரில் உள்ள 'தலை' என்பதைக் குறிக்கும். எனவே கைகேசி என்பதற்குப் பொன்னிற ஒளி உடைய தலை கொண்ட பூடு எனப் பொருள் கொள்ளவேண்டும்.

**ஏ) மணிச்சித்திரம்**

மணி என்பதற்கு ஒளி, மாணிக்கம் என்னும் பொருளும் சித்திரம் என்பதற்கு அழகு - அலங்காரம் என்னும் பொருளும் உண்டு. பொன்மணி நிற அழகுடன் பொலிவுறும் பூடு என மணிச்சித்திரம் (சி.வை.அ.) என்னும் பெயருக்குப் பொருள் கொள்ளலாம். மணி என்பதற்கு 'உருண்டை வடிவானது' என்னும் பொருளும் உண்டு. இம் மூலிகையின் பூவின் அடியில் உள்ள சிற்றிலை வட்டம் மணிவடிவமானது; இதனால் இப்பெயர் பெற்றதாகவும் கொள்ளலாம்.

**ஐ) தேக ராசம்**

தேக ராசம், பொற்றேக ராசம் (பொன்தேகராசம்) என்னும் பெயர்கள் சி.வை. அகராதியில் உள்ளன. பொன் னிறமான பூவினால், இம் மூலிகையின் தேகம் (வடிவம்) அழகில் தலைமை (ராசம்) பெற்றிருப்பதாலும் உண்டவர் உடம்பு பொன்னிற மாவதாலும் இப்பெயர்கள் பெற்றன - எனலாம். இப்பெயர்கள் பயன் காரணமாகப் பெறப் பட்டவை என்ற விளக்கமும் முன்னர் இடம்பெற்றுள்ளது.

**ஒ) சாறுதாரி**

சாறு தாரி (மலை) என்னும் பெயருக்கு, சாற்றைத் தாங்கிக்கொண்டிருப்பது என்று பொருள் கொள்ளல்

வேண்டும். வேடம் தாங்குபவர் 'வேட தாரி' என்பது போல், சாறு தாங்குவது சாறு தாரி யாகும்.

இப்பெயரில் என்ன சிறப்புள்ளது என வினைவலாம். வேப்பிலை, விளா றி இலை, மூங்கில் இலை முதலிய சில இலைகளை இடித்தாலும் கசிக்கிப்பிழிந்தாலும் சாறு வருவதில்லை; அதனால் அவை 'சாறு வரா மூலிகைகள்' என்னும் பெயர் பெற்றுள்ளன. ஆனால், இந்த மூலிகையில் சாறு நிரம்ப உளதாதலின் சாறு தாரி எனப்பட்டது. இதனை வடிவால் - உடற் கூறால் பெற்ற பெயர் எனலாம்.

## 4-2-2. நிறத்தால் பெற்ற பெயர்கள்:

### 4-2-2-1. பொற்பாவை;

பொன்னிறப் பூத் தலையினை உடைமையால் இம் மூலிகைக்குப் பொற்பாவை, பொற்கொடி, பொற்றலைப் பாவை என்னும் பெயர்கள் வேலூர் கண்ணப்பரின் 'நம் நாட்டு மூலிகைகள்' என்னும் நூலில் தரப்பட்டுள்ளன. மகளிர் கூந்தலில் பொன் அணி அணிவதுபோல் இம்மூலிகை முடியில் பொன் பூ உடைமையால் பாவை எனப் பெண்பாற் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. பொற்பாவை என்னும் பெயராட்சி, 'அகத்தியர் பரிபூரணம் நானூறு' என்னும் நூலில் உள்ளது. பாடல் வருமாறு:-

**" பணிந்து நின்ற பொற்பாவை தன்னை நீரும்**
**பாலனே சுழிமுனைப்பான் மெருக்கேற்றி**
**அணிந்து நின்ற யவசிவய என்று நீயும்**
**அப்பனே கற்பூரத் தீபம் பார்த்துத்**
**துணிந்து நின்ற பூதி தன்னைக் கையில் வாங்கிச்**
**சுத்தமுடன் லலாடமதில் பூசி விட்டால்**
**அணிந்து நின்றசத்து ருக்கள் வசிய மாவார்**
**அனைவ ருந்தாம் பின்வாங்கி நிற்பார்களே"**

இப்பாடலால், இஃது ஒரு வசிய மூலிகை என்பது புலனாகும். பகைவர்களையும் வசியப் படுத்துவதற்குப் பொற்றலைக் கையாந் தகரையைப் பயன்படுத்தும் முறை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

**4-2-2-2. கோகனம்:**

கோ = நீர்; கனம் = பொன். பொன்னால் ஆன காதணி உடையவளே என்னும் பொருளில் உள்ள ''கனங்குழாய்'' என்னும் கலித்தொகை (57 - 15) ஆட்சி காண்க. நீர் தாழ்ந்த நிலத்தில் உள்ள பொன் பூக்களை உடைய செடி என்பது கோகனம் (சி.வை.அ.) என்னும் பெயரின் பொருளாம்.

**4-2-2-3. பொன்னி - பொன்னிறைச்சி:**

பொன்னிறமான மலர்களை உடைமையால், இம் மூலிகைக்குப் பொன்னி, பொன்னிறைச்சி (சா.சி.அ.) என்னும் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பொன்னிறைச்சி என்பதைப் 'பொன் நிறைச்சி' எனப் பிரிக்க வேண்டும். நிறத்தி என்பதே நிறைச்சி என்று ஆயிற்று. 'அ' (ற) 'ஐ' (றை) என ஆனதும், 'த்தி' என்பது 'ச்சி' என ஆனதும் இலக்கணத்தில் போலி எனப்படும். படித்தான் என்பது படிச்சான் எனவும், மிதித்து என்பது மிதிச்சு எனவும், வைத்தான் என்பது வச்சான் எனவும் ஆனதுபோல், நிறத்தி என்பது நிறைச்சி என்றாயிற்று. பொன்நிறம் உடையது பொன் நிறைச்சி.

**4-2-2-4 மஞ்சள் கரப்பான்:**

பொற்றலைக் கையாந் தகரை மஞ்சள் நிறப்பூ உடைமையால் மஞ்சள் கரப்பான் (சி.வை.அ.) என்னும் பெயர் பெற்றது. பொன்னிறம் என்பது ஏறக்குறைய மஞ்சள் நிறந்தானே! பொற்றலைக் கையாந் தகரையை,

மஞ்சள் கரசனாங்கண்ணி என வழங்குதல், தென்னாற்காடு மாவட்டத்திலும் புதுச்சேரிப் பகுதியிலும் உள்ள மரபு. (எங்கள் வீட்டில், சமையலுக்கு வெள்ளைப்பூக் கரசனாங் கண்ணியையே வாங்குவது இல்லை; மஞ்சள் கரசனாங் கண்ணியையே வாங்குதல் வழக்கம். இது மற்றவற்றினும் நல்லது.)

**4-2-2-5திருமாலின் கண்ணன்:**

திருமாலின் கண்ணைப் பொற்றாமரையாகச் சொல்வது புராண - இலக்கிய மரபு. பொற்றாமரை என்பது செந் தாமரையே யன்றோ? இதுபற்றிய இலக்கியச் சான்றுகள் சில வருமாறு:-

**திவ்யப் பிரபந்தம் - திருப்பாவை:**

**"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்**
**பொற்றாமரை அடியே போற்றும் பொருள்கேளாய்**
*(29)*

இங்கே பொற்றாமரை என்றது செந்தாமரையையே. மதுரை முதலிய சில திருப்பதிகளில் உள்ள தெய்வத் திருப் பொய்கைகளைப் பொற்றாமரைக்குளம் எனல் மரபு.

**திருவிளையாடல் - தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்:**

**" பாய்ந்த வெம்மையிற் பொறாது பொற்பங்கயத்**
**தடத்துள்**
**ஆய்ந்த நாவலன் போய் விழுந் தாழ்ந்தனன்"** *(107)*

**திருவிளையாடல் - கீரனைக் கரையேற்றிய படலம்:**

**"போழ்ந்த நாவலன் ஆடகப் பங்கயப் பொய்கைவாய்**
**வீழ்ந்து அரும்படர் வேலையில் வீழ்ந்தனன்"** *(2)*

பொற் பயங்கயத் தடம்=பொற்றாமரைக் குளம், பங்கயம் =தாமரை. ஆடகப் பங்கயப் பொய்கை = பொற்றாமரைக்

குளம். ஆடகம்=பொன். மற்றும், வேந்தர்கள் செயற்கை யாகப் பொன்னால் தாமரைப் பூ செய்து பாணர்க்கு அளிப் பதும் உண்டு, இது செந்தாமரை போன்றதாகும்.

**புறநானூறு - 141:**

**"பாணர் சூடிய பசும்பொற் றாமரை"**

**பதிப்பற்றுப் பத்து - 48.**

**"பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி"**

எனவே, திருமாலின் கண்ணாகிய செந்தாமரை, பொற்றாமரை எனப்படுதல் மரபே.

பொற்றலைக் கையாந் தகரை, பொன்னிறப் பூவுடன் இருப்பதால், பொற்றாமரையாகிய செந்தாமரையை நினை வூட்டுகிறது. இந்தப் பொருத்தத்தால், திருமாலின் கண்ணன் (சா.சி.பி.) என்னும் பெயர் இம்மூலிகைக்குத் தரப்பட்டது.

**4-2-2-6. திரிபுரந் தீயிட்டோன் புதல்வன்:**

திரிபுரந் தீயிட்டோன் சிவன் என்பது முன்னர் விளக்கப் பட்டுள்ளது. அந்தச் சிவன் புதல்வன் முருகன் ஆவான். அம்முருகனைச் சுட்டும் திரிபுரம் தீயிட்டோன் புதல்வன் என்னும் பெயர் சா.சி.பி. அகர முதலியில் இம்மூலிகைக்குத் தரப்பட்டுள்ளது. செந்தாமரையாகிய பொற்றாமரையின் நிலையையே இந்தப் பெயருக்கும் கொள்ளல்வேண்டும்.

முருகன் சேயோன் எனப்படுவான். செந்நிறத்தனாக முருகனைக் கூறல் மரபு. திருமுருகாற்றுப் படையிலுள்ள,

**"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"** (1, 2)

என்னும் முற்பகுதி ஈண்டு நோக்கத் தக்கது. நீலக்கடலில் செஞ்ஞாயிறு தோன்றுவதுபோல, நீல மயில்மேல் செந்நிற முருகன் தோன்றுவதாக அறிவிக்கிறது இப்பகுதி.

செஞ்ஞாயிறு, செந்நிற முருகன் எனினும், பொதுவாக, ஞாயிற்றின் நிறமும் முருகனின் நிறமும் பொன்னிறமே யாகும். உலகியலில், நல்ல நிறமுடன் இருக்கும் ஒருவரை, மிகுந்த சிவப்பாயிருக்கிறார் என்பது மரபு. அவரது சிவப்பு என்பது, ஒருவகை மஞ்சள் நிறமான - பொன்னிறமே யாகும். குங்குமம் போன்றும் பவழம் போன்றும் யாரும் சிவப்பாயிருப்பதில்லை. சிவப்பு என்பது பொன்னிறமே.

**"குணதிசை மருங்கில் நாள்முதிர் மதியமும்**
**குடதிசை மருங்கில் சென்றுவீழ் கதிரும்**
**வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக**
**எள்ளறு திருமுகம் பொலியப் பெறுதலும்"** (5:139-142)

என்னும் மணிமேகலைப் பகுதியில், புகார் நகரம் என்னும் பெண்ணுக்கு, மாலையில், வெண்திங்கள் ஒருபுறம் வெள்ளைத் தோடாகவும், செஞ்ஞாயிறு ஒருபக்கம் பொன் தோடாகவும் பொலிவதாகக் கூறப்பட்டிருப்பது காண்க. செஞ்ஞாயிறு பொன்தோடுபோல் உள்ளதாம். மாலையில், ஞாயிறு தங்கம் உருக்கி வார்த்த தட்டுபோல் இருப்பதாகக் கூறும் புனைவு (வருணனை) புலவர்கட்குப் புதிதன்று. இருபதாம் நூற்றாண்டில் எழுந்த 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்னும் நூலிலும்,

**"தங்கம் உருக்கிய தட்டேய் ஞாயிறு**
**திங்கள் வருமுன், திகழும் குடபால்**
**மங்கி மறைந்தான் மாலையும் கழிந்தது"** (18-3,4,5)

என இப்புனைவு இடம் பெற்றுள்ளமை காண்க. ஈண்டு, ஞாயிற்றின் நிறம் குறித்து அறிவியல் அடிப்படையில்

நோக்கலாகாது. இலக்கிய மரபினை ஒட்டியே நோக்க வேண்டும்.

கருமை, நீலம், பச்சை ஆகிய மூன்று நிறங்களும் ஒன்று போல் மயங்கிச் சொல்லப்படும். அவ்வாறே, செந்நிறமும் மஞ்சளான பொன்னிறமும் இங்கே மயங்கிக் கூறப் பட்டுள்ளது. எனவே, முருகனின் பொன்னிறத் தோற்றம் போல் பொலிவுறும் பொன்னிற மஞ்சட் பூக்களை உடைமையால், இம் மூலிகைக்குத் 'திரிபுரம் தீயிட்டோன் புதல்வன்' என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம்.

## 4-3 இரு வகை:

பொற்றலைக் கையாந் தகரையில் இருவகை உண்டு. ஒன்று 'கொடிக் கையான்' (Creeper eclipse - Eclypta Latifolia) எனப்படும். மற்றொன்று, 'பொற்றலைக் கையான்' (Mari-gold-Verbesenia Calundulacea) எனப் படும். முன்னது, ஓரளவு கொடிபோல் படர்ந்து காணப் படுமாதலின், 'கொடிக் கையான்' எனப்பெற்றது.

இவ்வாறாக, மர இனங்கட்கு வைக்கப் பெற்றுள்ள மறு பெயர்கள், ஒரு கலையாகத் திகழ்ந்து சுவையூட்டு கின்றன.

# 10. மர இனப் பெயர்களின் அகர வரிசை

எண்: பக்க எண்

அம்மா பத்தினி 94
அரம்பை 51
அரவாய்க் கடிப்பகை 91
அரவுக் கடிப்பகை 92
அருளாசி 100
அரையன் விரோதி 11
அறமறை 47
ஆகாப் பழமாக்கிய சக்தி 102
ஆண்டி வாழை 53
ஆதிசக்தி 94
ஆனைக்கன்று 10
இரத்த பித்த நாசனி 53
இரவிப் பிரியம் 93
உப்பு மூலிகை 56
ஊருடன் மூலி 104
ஊருடை 104
ஊருடை மரம் 104
ஊருடை முதலி 104
ஊருடை முதலியார் 104
ஏழை மரம் 142
ஓலெய்ஃபெரா 121
கசப்பு 88
கடிப்பகை 90
கண்ணன் 155
கண்ணன் மூலி 155
கண்ணி 149, 155
கண்ணுக்கு இனியாள் 149, 155
கந்தகச் சத்துரு 67
கந்தகம் 140
கபமூலம் 124
கரசனாங்கண்ணி 162
கரப்பான் 159
கரிக் கண்டு 160
கரிக்கரைச் செடி 160
கரிக்கன்றுச் செடி 160
கரிக்கைச் செடி 160
கரிச் சால் 162
கரிச்சான் பூடு 160
கரிச்சிராச் செடி 160
கரிச்சை 160
கரிசனம் 160
கரிசலாங்கண்ணி 155
கரிசாரங்கண்ணி 160
கரிசலை 162
கரிசாலை 162
கரிப்பான் 159
கரிய கருப்பான் 162
கரிய சாலை 162
கரியலாங்கண்ணி 162
கருங்கரிசாலை 162
கரியுப்பு 160
கருங்கடாகச் செடி 162
கருங்கரி சாலை 162
கருங்கரிப்பான் 162
கருங்கருப்பான் 162
கருங்கண்ணி 162
கருங்கையான் 162
கருஞ்சாறு 162
கருசலாங்கண்ணி 155
கருப்புக் கரிசலாங் கண்ணி 162
கருமுருகி மூலி 162
கற்பு 25
காம சாரம் 42
காமப்பலம் 42
காமப்பலை 42
காமரசம் 42
காமரம் 71

காமாங்கம் 42
காய்க்கீரை 140
காலில் பொடி
மாற்றியது 11
கானக் குதிரை 11, 42
கான்மரம் 71
கிருஷ்ணகந்தம் 119
குயிலகம் 34
குருகண்டகம் 127
குழல் மாது 157, 165
கைகேசி 151, 165
கைப்பாகன் 88
கையாந்தகரை 163
கையான் 164
கையான்தகரை 164
கையிருப்பு 86
கைவீசியிலை 163
கொக்கு 37
கொக்குமரம் 37
கொடிக்கையான் 172
கோகனம் 168
கோகில வாசம் 34
கோகிலானந்தம் 34
கோளி 76
சம்புச்சயனம் 65
சருக்கரை வேம்பு 89
சாறுதாரி 166
சாறுவராத தழை 102
சாறுவரா மூலிகள் 102
சிவதாகம் 117
சிரம் 64
சிற்றிலைப் பூ 121
சீக்கிர பத்திரம் 112
சீர்ண பத்திரம் 99
சீர்ண பர்ணம் 99
சுகரகம் 57
சுந்தரமண் 53
சுந்தரமாது 54
சூதத்தைச் சணத்தில்
கட்டி 101
டெரிகோஸ்ப்பெர்மா 120
தங்கச்சி 84
தங்கை 84
தங்கைச்சி 84
தண்டாயுதம் 52
தலைச்சுருளி 132
தவமுருங்கை 144
தவசி 132
தவசி முருங்கைச்செடி 145
தவசு முருங்கை 144
தாய்க் கொல்லி 46
தாய்க்கொல்லிக்
கிழங்கு 47
தாயைக்கொன்றான் 11, 46
தாயைத் தாங்கிக்
காப்பவன் 59
தானியம்தவசு 139
திரிபுரம் தீயிட்டோன் 159
திரிபுரம் தீயிட்டோன்
புதல்வன் 159, 170
திருமாலின் கண்ணன் 169
திரையில்லான் 156
துடைவாழை 52
தேகராசம் 157, 166
தேகராசிகச் செடி 157
தேவகன்னி 51
தேனீச்செடி 161
தொன்மரம் 63
நரிமுருங்கை 138
நற்றலைத்தேவி 165
நாகத்தை நாசமாக்கி 130
நியக்குரோதம் 67
பகுபதம் 69
பசித் தீத்தூண்டி 100
பல்விளக்கு மூலிகை 99
பலசிருங்கி 77
பழுமரம் 63
பனியிருள் 160
**Banyan Tree** 78
பாண்டியன் தார் 93

பாரம்பரம் 64
பாலி 76
பால்துயில் பஞ்சணை 65
பாழ் 74
பிசாசப் பிரியம் 92
பிசாசவப் பிரியம் 92
பிசாசுப் பிரியம் 92
பிசாவப் பிரியம் 92
பிடாரி அஞ்சுமரம் 91
பிரம்ம விருட்சம் 114
பிருங்கரசம் 161
பீதகேசம் 164
புறத்தோல் 10
பூதம் 70
பூதவம் 64
பூத விருக்கம் 70
பூத விருட்சம் 70
பெருவால் 70
பேரால் 70
பொற்கையான் 164
பொற்கொடி 167
பொற்பாவை 167
பொற்றலை 164
பொற்றலைக் கரப்பான் 164
பொற்றலைக் கரிப்பான் 164
பொற்றலைக் கையாந் தகரை 162
பொற்றலைக்கையான் 164
பொற்றலைப் பாவை 167
பொற்றாது 164
பொற்றேக ராசம் 157
பொன்தலை 162
பொன்னி 168
பொன்னிறைச்சி 168
மஞ்சள் கரப்பான் 168
மணக்கோலம் 53
மணிச்சித்திரம் 166
மரத்துக் காய் 140
மரத்துக் கீரை 140
மறி 67
மன்மதக் கணை 37
மாபாவி 47
மால்துயில் 65
மாறன்தார் 94
முக்கந்தம் 113
முகக் கந்தமரம் 126
முதலியார் 104, 145
முதுமரம் 63
முருங்கை 107
மூல கபம் 121
மூல கபமரம் 122
மூல பர்ணி 121
மைக் கரிப்பான் 159
மைக் கரிப்பான் செடி 162
மொராங்க 141
மொராங்கா 141
மொரிங்கா 141
யமப் பிரியம் 66
யானைக் கொம்பன் 53
யோசனையளாவி 73
வசந்த தரு 35
வசந்த திரு 35
வசந்த தூதம் 35
வட்டம் 69
வட்ட விருக்கம் 69
வடம் 70
வடம்புலி 70
வடமரம் 70
வட விருக்கம் 69
வடுகும் தமிழும் 12
வண்டி 99
வதனப்பூடு 165
வனலட்சுமி 56
வாயு தானி 53

வாழ்த்து மரம் 78
வான் முட்டி 73
வான நாடி 73
வான மரம் 73
வானோங்கி 73
விண்டு தழை 65
விழுதிகா 69
விழுதுடந்தி 69
விழுது மரம் 69
Drum Stick Tree 143
Horse Radish 144

## சுந்தர சண்முகனாரின் உழைப்புகளுள் சில

| | ரூ. | கா. |
|---|---|---|
| தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது | 40 | 00 |
| தமிழ் இலத்தீன் பாலம் | 30 | 00 |
| கெடிலக்கரை நாகரிகம் | 50 | 00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | 20 | 00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் ஐபாயிரம் ரூபாய் பரிசு பெற்றது | 30 | 00 |
| பாரதிதாசரொடு பல ஆண்டுகள் | 12 | 00 |
| கருத்துக் கண்காட்சி | 20 | 00 |
| உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு | 15 | 00 |
| இலக்கியத்தில் வேங்கட வேலவன் | 5 | 00 |
| மர இனப் பெயர்த் தொகுதி 1 | 140 | 00 |
| மர இனப் பெயர்த் தொகுதி 2 | 200 | 00 |
| தமிழ்க் காவிரி | 12 | 00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு | 15 | 00 |
| தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு | 20 | 00 |
| மக்கள் குழு ஒப்பந்தம் | 15 | 00 |
| மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள் | 20 | 00 |
| தமிழ் நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம் | 100 | 00 |
| சுந்தர காண்டச் சுரங்கம் | 18 | 00 |
| அயோத்தியா காண்ட ஆழ்கடல் | 20 | 00 |
| சுந்தர காண்டச் சூறாவளி | 4 | 00 |
| உலகு உய்ய! | 30 | 00 |